325

gd. M. 1803. Vol. II—No. 3

லக்ஷ்மி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS

சொந்தக்காரர்கள் :

கே. எஸ். முத்தையா & கோ., சென்னை.

குஞ்சம் கட்டின

பட்டு லேஞ்சிகள்

நைஸான பட்டு, உடல் திக்கானது. பல வருடங்கள் உழைக்கும். பல வித மேகவர்ணக் கலர்கள், வெள்ளை, நீலம், சந்தன கலர் முதலிய பல கலர்கள்.

5 மு × 40 1-க்கு ரூ. 12, 14, 16, 18.

ஷை ஜரிகை கரைகள் போட்டது ரூ. 16 முதல் 20 வரை.

இமிட்டேஷன் ஸில்க் புடவைகள்

இந்தப் புடவைகளைப் பார்த்தால் அசல் பெங்களூர் பட்டுப் புடவைகளைப் போல் இருக்கும். கலருக்கு உத்திரவாதம். கலர் :—அரக்கு, மஞ்சள், கருப்பு, நீலம் முதலிய கலர்கள்.

18 மு × 2½ அகலம் புடவை 1-க்கு ரூ. 15, 18, 20.

எங்களிடம் சேலம், மதுரை, கோரநாடு, கராச்சி, காசி முதலிய ஊர்களி லிருந்து புதுமாதிரியான பல ரகங்கள் ஏராளமாய் வந்திருக்கின்றன. நீங்கள் வேறிடங்களுக்குப் போகுமுன் ஒரு முறை எங்களிடம் வந்து பாருங்கள்.

வலைப் பனியன்

போத்தானில்லாதது நைஸானது

பனியன் 1-க்கு ரூ. 1, 1-4, 1-8.

கே. எஸ். முத்தையா & கோ.,

சில்க் ஹவுஸ்,

188, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,

சென்னை.

காசிமாநகரம்.

ஓம்

லக்ஷ்மி

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை

சித்திரப் படங்களுடன் கூடியது.

பத்திராதிபர் : கே. எஸ். முத்தையா.

மலர் உ.	ரக்தாட்சிஸு ஐப்பிசிமீ 1924 அக்டோபர்	இதழ் ரு

அட்டவணை.

பக்கம்.

1. லக்ஷ்மி துதி 109
2. திருத் தாலாட்டு 110
3. மேலோர் யாவர் 111
4. ஐந்து வக்கரில் சுயராஜ்யம் 116
5. சுகவழி எண்பது 123
6. தமிழும் தமிழரும் 126
7. தீபாவளித் தடபுடல் 129
8. பூனைக்குட்டி 139
9. சித்திரப் பத்தி 141
10. நமது அந்தரங்கப் பகைவர்களும் சுகத்துக்குச் சண்டையும் 143
11. ராணி மீனாக்ஷி 147
12. நூல் சந்தாவிற்கு ஆட்சேபம் ... 149
13. தமிழ் குரு குலம் 150
14. மதிப்புரை 152
15. கோழி வளர்த்தல் 154
16. விசேஷக் குறிப்புகள் 155

சித்திரப் படங்கள்.

1. காசிமாநகரம்.
2. வைக்கம் வீரர் ஸ்ரீமான் ஈ. வி. ராமசாமி நாயக்கர்.

210343
சென்னை-600 008

லக்ஷ்மி

சந்தா விவரம்.

உள் நாட்டுக்கு வருடம் 1க்கு தபாற்கூலி உள்பட இந்தியா, பர்மா, சிலோன்	ரூ. 2 0
வெளி நாட்டுக்கு வருடம் 1க்கு தபாற்கூலி உள்பட சிங்கப்பூர், பினங்கு, மோரீஸ் முதலிய வெளி நாடுகளுக்கு	ரூ. 2 8
உயர்ந்த பதிப்பு (Art Paper)	ரூ. 10 0

தனிப்பிரதி அணு 4.

அறிவிப்பு

1, SUBBIAH PILLAI Esq., Head Kangany, Yerrawalah Division, Sandringham, P.O., Ceylon.

2, P. RAMASWAMI PILLAI Esq., Teacher, Elementary School, Kesavanpalayam, Kumaramangalam.

மேலே குறிப்பிட்ட இரு விலாசத்தார்களுக்கும் சென்ற 14 மாதங்களாகப் பத்திரிகை யனுப்பி வருகிறோம். ஆனால் சென்ற மாதப் பத்திரிகை அம்மாதிரி விலாசத்தார்கள் இல்லையென்று தபாலாபீசாரால் திரும்ப அனுப்பப்பட்டிருக்கிறது. இம்மாதமும் அதே விலாசங்களுக்குப் பத்திரிகை யனுப்புகிறோம். ஆகவே மேற்படி விலாசத்தாரோ அல்லது வேறு அறிமுகமுள்ளவர்களோ இந்த விலாசங்களில் தவறுதலிருந்தால் தெரிவிக்குமாறு வேண்டுகிறோம்.

மானேஜர் :
'லக்ஷ்மி,' சென்னை.

சந்தா நேயர்களுக்கு விண்ணப்பம்.

நமது பத்திரிகையை ஆங்கில மாதம் 25உ வெளியிடுவதாக முன் குறிப்பிட்டிருந்தோம். ஆனால் நமது பத்திரிகை அச்சிடப் பெறும் அச்சுக்கூடத்தில் ஆங்கில மாதம் 15உ வெளியாகும் ஒரு பத்திரிகையும் அச்சிடப் படுவதால் நமது பத்திரிகையை அந்நாளில் வெளியிட இயலாதிருக்கிறது. ஆகையால் ஒவ்வொரு ஆங்கில மாதம் முடிவிலும் நமது 'லக்ஷ்மி' வெளியாகும் என்ற விஷயத்தை நேயர்கள் கவனிப்பார்களாக! பத்திரிகை கிடைக்காதவர்கள் மறுமாதம் 10உக்குள் அவ்விவரம் நமக்குத் தெரிவிக்கவேண்டும். அதற்கு மேல் வரும் விண்ணப்பங்கள் கவனிக்கப்பட மாட்டா.

மானேஜர்,
'லக்ஷ்மி,' தபால் பெட்டி 99,
சென்னை.

ஓம்

லக்ஷ்மி துதி

இனமாய மாதவற்கும் புலவோர்க்
கும் இரப்பவர்க்கும்
தனமாதியபொருள் எல்லாம்
கொடுக்கும் தகை விழைந்தேன்
கனமான மேனியம் மான்மனை
யாட்டி கடைக்கண்கள் என்
மனமா மலர்த்தொட்டவா றெனைத்
தீண்டில் அவ்வாழ்வெய்துமே!

திருத் தாலாட்டு

கலித்தாழிசை.

நீலாம்புரி ராகம்—அடதாளம்.

மாணிக்கம் கட்டி வயிரம் இடைகட்டி
ஆணிப்பொன்னல் செய்த வண்ணச்சிறு தொட்டில்
பேணியுனக்குப் பிரமன் விடுதந்தான்
மாணிக்குறளனே தாலேலோ!
வையமளந்தானே தாலோ! (1)
உடையார் கனமணியோ டொண்தாளம்பூ
இடைவிரவிக் கோத்த எழில்தெழ்கினோடு
விடையேறு காபாலி யீசன்விடுத்தான்
உடையாய்! அழேல்! அழேல்! தாலேலோ!
உலகமளந்தானே தாலேலோ! (2)
சங்கின் வலம்புரியும் சேவடிக்கிண்கிணியும்
அங்கைச் சரிவளையும் நாணும் அரைத்துடரும்
அங்கண் விசும்பில் அமரர்கள் போத்தந்தார்
செங்கட் கருமுகிலே! தாலேலோ!
தேவகி சிங்கமே! தாலேலோ! (3)
ஓதக் கடலில் ஒளிமுத்தின் ஆரமும்
சாதிப் பவளமும் சந்தச் சுரிவளையும்
மாதக்க என்று வருணன் விடுதந்தான்
சோதிச் சுடர்முடியாய்! தாலேலோ!
சுந்தரத் தோளனே தாலேலோ! (4)
கானர் நறுந்துழாய் கைசெய்த கண்ணியும்
வானர் செழுஞ்சோலைக் கற்பகத்தின் வாசிகையும்
தேனர் மலர்மேல் திருமங்கை போத்தந்தாள்
கோனே! அழேல்! அழேல்! தாலேலோ!
குடந்தைக் கிடந்தானே! தாலேலோ! (5)
மெய்திரு நானப் பொடியோடு மஞ்சளும்
செய்ய தடங்கண்ணுக் கஞ்சனமும் சிந்தூரமும்
வெய்ய கலைப்பாகிகொண்டு வளாய்நின்றாள்
ஐயா! அழேல்! அழேல்! தாலேலோ!
அரங்கத் தணையானே தாலேலோ! (6)

பெரியாழ்வார்.

மேலோர் யாவர்?

ஸ்ரீமாந் எஸ். எஸ். வாஸன் அவர்கள் எழுதியது.

நற்குண முடையவர்கள் சேர்க்கையில் ஆசையும், பிறர் நல்லொழுக்கங்களில் விருப்பமும் குருவினிடத்தில் வணக்கமும், கல்வியில் அவாவும், மனைவி மக்களிடத்தில் இன்பமும், பழியினச்சமும், பரமனிடத்துப் பக்தியும், தமக்கு ஆபத்து நேர்ந்துற்றபோது பராக்கிரமமும் ஆகிய இம்மேம்பாடான தன்மைகள் எவரிடத்துள்ளனவோ அப்படிப்பட்ட உத்தம புருஷரையே நாம் மேலோர் எனக் கருதுவோம். மனத்தை யடக்கலும் வேதாந்த விசாரமுமே முக்திக்குத் தக்க வழியானதுபற்றி இவ்விரண்டும் மேலோரிடத் திருக்கவேண்டியது அத்யாவசியம். மேலும் அவர்களுக்குக் குருபக்தியே சிறந்தபக்தி. குருவே பிரமன், குருவே திருமால், குருவே சிவன், குருவாய் மொழியே திருவாய்மொழி, குருப்பிரசாதமே வரப்பிரசாதம் என்றெண்ணி அக்குருவினடியைக் கனவிலும் மறவாமல் அவருக்கு வந்தனை வழிபாடு தவறாதுசெய்து அவர் அருளை நாடல் வேண்டும். இவ்வாறு நல்லொழுக்கங் கொண்ட பெரியோர்க்கு ஆபத்தில் தைரியமும், செல்வத்தில் பொறுமையும், பொது விஷயங்களிற் பேசுந் திறமும் போரிற் புறங்கொடாமையும் புகழ்த்தேட்டத்தில் விருப்பமும் கல்வி கேள்விகளில் ஊக்கமும் இயல்பிலமைந்த குணங்களாகும். தமக்கு ஆபத்து வந்தாலும் சம்பத்து உண்டானாலும் மேலோருடைய மனோ நிலைமை யித்தன்மையதென்றால் அவர்கள் தலைபோகத்தக்க துன்பம் வருங் காலத்தும் அவர் மனம் மலைபோலச் சலியாது உறுதியாய் நிற்கும். இன்பம் வருங்காலத்தில் மலர்போல் மெல்லியதாகும். அவர்கள் நியாயமானவழியில் ஜீவிப்பரேயன்றி அநியாயார்ஜிதமான பொருளைக்கொண்டு காலங்கழிக்க மாட்டார்கள். உயிர்போகும் சமயமாயினும் தீயகார்யங்களைச் செய்ய மன மொப்பார். விரோதிகளுக்கும் தீங்கு செய்யார்.

புலி பசித்தால் புல்லைத் தின்னுமோ? கல்தூண் பெரும் பாரத்தைத் தாங்கிய போதிலும் வளைந்து கொடுக்காது. இதேபோல் மேலோர் பெருந்துன்பம் தம்மேல் வருங்கால் அதற்கு ஈடுபட்டு இழிதொழிலைப் புரிய மாட்டார். இன்னும் இவர்கள் தாம் பிறருக்குச் செய்யும் நன்மையை வெளிப்படையாகக் காண்பிக்காமல் மறைவாகவே செய்வார். பிறர் கஷ்டப்படுவதை மேலோர் ஒருபோதும் சகியார். பசியென்று வந்துவிட்டால் அவர்களுக்கு இவர் எப்பாடு பட்டாவது அன்னமிடுவர். விருந்தினர் விருப்பைக் குறிப் பாலறிந்து பூர்த்திசெய்து தாம் செய்த உதவியை வெளியில் விளம்பிக் களிக்காது மௌனங்கொண்டு, தமக்குப் பிறர்செய்த உதவியைப் பலர்கூடிய சபையிற் பாரக்கப் பேசுவர். பொருள் பெற்று நல்வாழ்வு அடைந்த காலத்தும் செருக்குறார். செல்வத்தாற் செருக்குறுவோர் அவமான மடைதல் திண்ணம். மேலும், வண்டுகள் பொழில்களில் மலர்களிலுள்ள மதுவைப் பருகுதல் போல மேலோர் பிறரிடத்துள்ள நற்குண நற்செய்கைகளைமட்டும் எடுத்துரைப்பர். பூத்துச் செழித்த பல மரங்களிருப்பினும் காக்கை யவற்றைவிட்டு வேப்பங்கனியை உண்ணக் கருதுமாபோல் இழிந்தோர் அந்நியரிடத்திலுள்ள துர்க்குணத்தையும் துஷ்ட கிருத்தியத்தையுமே எடுத்துரைப்பர்.

தனது கடமையை யெவனொருவன் ஒழுங்காகச் செலுத்துகின்றானோ அவனே நல்லவனாவன். ஒருவனுக்கு மகன், மனைவி, சிநேகன் ஆகிய யிவர்களே முக்கியமாய்ச் சம்பந்தப் பட்டவர்கள். இவர்கள் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு கடமைகளுண்டு. மகன் இருக்கவேண்டிய கிரமமாவது:—"தந்தை சொன்மிக்க மந்திரமில்லை" "தாய்சொற் றுறந்தால் வாசகமில்லை" என்னும் முதுமொழிகளைக் கடைப்பிடித்துப் பெற்றோர் சொல்லைக்கேட்டுத் தவறு தியற்றி அவர் மனமகிழ ஒழுகும் புதல்வரே நல்ல பிள்ளைகளாவர். தாய்தந்தைக்கு மரியாதை செய்யாமலும் அவரைப் பெருமைப் படுத்தாமலும் "என்னை வருந்தி வருந்தித் தவம் செய்து பெற்றாரோ?" என்று அவர்களைச் சிறுமைப்படுத்தித் தீயொழுக்கங் கொண்ட பிள்ளையும் பிள்ளையோ? இவர் பெற்றோர்க்குப் பெரும் பிணி யன்றோ?......மனைவி யிருக்கவேண்டிய முறையாவது:—

மனைவியானவள் கணவன் சொல்லை வேத வாக்கியமாகக் கொண்டு அவன் மனங்கோணுது அவனது உள்ள முவக்கு மாறு ஒழுகவேண்டும். படிநீலியாகிய ஒருத்தியைப் பெண்டு கொண்ட ஒரு பிராமணன், பெரியவ ரொருவரைத் தன் இல்லத்திற்குப் போஜனத்திற் கழைத்து, தனக்குக் காலை யில் வெளியே கிராம காரியமாகப் போக நேரிட்டமையால் பெரியவர் சாப்பிட வருவதைத் தன் மனையாளிடம் சொல் லிச் சமையல்செய்து சித்தப்படுத்தி வைக்கும்படித் திட் டப்படுத்தி விட்டுப் புறப்பட்டுப் போய் உச்சகாலத்தில் மீண்டு வீடுவந்து சேர்ந்தபோது, தன் இல்லாள் இடை வழித் திண்ணையில் முன்முனையை விரித்துத் தன்கை தலைக்கணையாகக் கொண்டு படுத்திருக்கக்கண்டு "ஐயோ! பாவம்! மிகுந்த வேலையினுல் படுத்து விட்டாள்" என்று தனக்குள் எண்ணியவனுய் உட்புகுந்தான். அங்கு முற்றம் தாழ்வார மெல்லாம் வைக்கோலும் சாணியுமாய், மெழுகிப் பெருக்கப் படாமல் இருப்பதைக் கண்டு இன்று அதிக வேலையை ஒன்றியாகச் செய்ய நேர்ந்தமையின் மற்றை வேலைகளைப்பார்க்க அவகாசமில்லை யென்று நினைக்கிறேன். ஆயினும் பாதகமில்லை என்று சமையலறைக்குட் புகுந்த போது நழுக்கென்று எச்சில் காலில் மிதிபடப் பார்த்து 'சிறு பெண்ணுயினமையின் இவ்வளவு நேரம் எவ்வாறு பசி பொறுத்திருப்பாள்? நல்லது, பூஜை நைவேத்தியங் களைச் செய்துவிட்டுப் பிறகு அவளைப் பரிமாற எழுப்பு வோம்' என்று பூஜைமுடித்து நைவேத்தியத்துக்குச் சமைத்த பதார்த்தங்களை ஸ்வாமியின் திருமுன்னர் வைக் கும்படி அடுப்பிற் கையை வைத்தபோது அங்கிருந்து ஒரு பூனைக்குட்டி யெழுந்தோட, அடுப்புச்சாம்பலா யிருக்கக் கண்டு மிக்க சீற்றத்தோடு மனைவியிடம் வந்து 'அடி, பாபி! ஏனடி சமைக்கவில்லை?' யென்று கேட்க, அவள் 'நீதான் பாவியாக! நானேன் பாவியாவேன்?' என்ன அவன் 'அடி, முண்டை! அவர் வேத வித்து அடி; அவர் திறத்தில் அபசாரப்படாதே' யென்ன அவள் "உங்கள் ஆய்முண்டை! உங்கள் அக்காள் தங்கைகள் முண்டைக ளாக; நானேன் முண்டையாகுவேன்?" என்று கூற, பிராமணன் அடங்காங் கோபங்கொண்டவனுய் என் வீட்டி விராதே, "ஓடிப்போ" என்று உரைக்க, அவள் "உனக்

கேதுவிடு? 'பானை பிடித்தவள் பாக்கிய' மென்று நான் வந்த பிறகுதான் வீடும் மாடும் இன்னும் மற்ற வளங்களும் பெருகின. நீதான் ஓடிப்போ" என்று அஞ்சாது எதிர் மொழி கூறினள். இந்தச் சொல்லைக்கேட்ட அந்தணன் யாதுஞ் செய்யத் தெரியாதவனாய் 'ஏ! கருணாநிதே! என்னைக்கொண்டு போகாயோ!" என்றிரங்கி வருந்தியுரைக்க, அவ்வடங்காப் பிடாரி' 'நீ போனால் சனிவிட்டது' என்று அவனைக் கணவனென்றும் எண்ணாமல் இழித்துரைத்தாள். நேயர்களே! இப்படிப்பட்ட பெண்களைப்பற்றி யன்றோ பண்டைப் புலவர் ஒருவர் "பேய்கொண்டாலும் கொள லாம் பெண்கொள்ளலாகாதே" என்று கூறினர். இவ்வா றில்லாது கொழுநனைப்போற்றி அவனிடத்துப் பக்தியும், கற்புநிலை தவறாமையும், வாய்மை யுடைமையும் மேற் கொண்டவளே நன்மனைவியென்று சொல்லப்படுவாள். சிநேகன் இருக்கவேண்டிய கிரமமாவது:—தன்னோடு தோழமை கொண்டவனிடத்துச் சம்பத்திலும் விபத்தி லும் ஒரு படிப்பட்டிருத்தல். கெடுமிடத்துக் கைவிடுவார் நட்புத் தீதாம். பூவோடு சேர்ந்த நாரும் மணம்பெறும் என்பது போல் நல்லோரை யடுத்தால் தீயோரும் பெருமை பெறுவர். சிநேகிதர்கள் இருக்கவேண்டிய முறைமைக்கு உதாரணமாக நாம் பாலையும் நீரையும் எடுத்துக்கொள் வோம். பாலுடன் நீரும் கலந்திருக்கும் சமயத்தில் இவ் விரண்டையும் அடுப்பில் வைத்துக் காய்ச்சினால் நீர் ஆவி யாக மேலே போகின்றது. இதைச்சகியாத பாலும் தன் நண்பன் மேலே போவதைப்பார்த்துத் தானும் பொங்கி மேலே எழும்புகின்றது. உடனே நாம் கொஞ்சம் நீரைப் பாலில் ஊற்றினால் பால் சமாதானமாக அடங்கிவிடுகின் றது. இவ்விதமாய்ப் பாலும் நீரும் போலச் சிநேகர் மன மொழி மெய்களில் ஒத்திருக்க வேண்டும். தான் மேனிலை யடைந்து தன் நண்பன் கீழ்நிலையி லிருப்பினும் அவனை மறக்க வொண்ணாது. இதுவே மேலோரின் உயர்ந்த குணம்.

ஸத்புருஷர் தமது பணிவால் உயர்வடைகின்றனர். அவர் பிறருடைய சிறுமை புறங்காத்துச் சீரெல்லாந் தூற்றுதலால் தமது நற்குணத்தை விளங்கச் செய்கின்ற னர். பிறர் பொருட்டுப் பெருமுயற்சி கொண்டு உழைத்த

லால் தமக்கு வேண்டிய பொருளைப் பெறுகின்றனர். இவ்வாறு வியக்கத் தக்க நற்குண நற்செய்கைகளையே அணிகலனாகக் கொண்ட மேலோர் எவர்க்குத்தான பூஜ்யரல்லர்? அவர் எங்கும் கைதொழுது பூஜிக்கக் கனம் பெறுவாரன்றோ ......சுபம்.

ஒரே பிரசவத்தில் நான்கு குழந்தைகள்.

இங்கிலாந்து மிடில்ஸ்பரோ என்னும் மாகாணத்தைச் சேர்ந்த ஜ்யாஜ் டவுனில் ஸ்டேபின்டன் தெருவில் மிஸஸ் ஜோய்ஸ் மாத்தியூஸ் என்னும் ஸ்திரீக்கு ஒரே பிரசவத்தில் நான்கு குழந்தைகள் பிறந்தன. இரண்டு பெண், இரண்டு ஆண் குழந்தைகள்; நான்கும் இப்பொழுது சௌக்கியமாக இருக்கின்றன.

யுத்தத்தில் கண் குருடானவர்கள்.

யுத்தத்தில் கண் குருடானவர்களின் மொத்தத் தொகை 15,000. ஜெர்மனி 3,349; பிரான்ஸு 3,000; கிரேட் பிரிட்டன் 4,700; ஆஸ்திரியா 750; ஸெக்கோஸலாவிகா 750; பாக்கி ருஷியா, ருமேனியா, பெல்ஜியம், ஐக்கியநாடு தேசத்தவர்கள்.

ஒரு சக்கிரவர்த்தினியின் தேசாபிமானம்.

நமது மாட்சிமை தங்கிய மேரி சக்ரவர்த்தினியாரின் தேசாபிமானம் மிகவும் வியப்படைத்து. அவர் உடுத்திக் கொள்ளும் துணிகளும் உடுப்புகளும் கையுறைகளும் மேஜோடுகளும் பிரிட்டிஷ் தேசத்திலேயே செய்யப்பட்டவைகளாம். அவர்கள் மேல் தரித்திருக்கும் உடைகளுக்குள் அணியும் அங்கிகள், அவர்கள் தேசத்திலுள்ள ஏழை ஜனங்களாலும் யுத்தத்தில் கொல்லப்பட்ட உத்தியோகஸ்தர்களின் மனைவிகளாலும் கையால் நெய்யப்பட்டவைகளாம். மேலும் அவருடைய பண உதவியால் தற்சமயம் 155,000 தறிகள் தொழில் நடத்தி வருகின்றனவாம்.

நீண்ட காதுள்ள முயல்.

இங்கிலாந்திலுள்ள பிராணிகள் காட்சிச்சாலையொன்றில் விநோதமான முயலொன்று இருந்தது. அதன் காதுகள் ஒவ்வொன்றும் ஏறக்குறைய இரண்டடி நீளமாம். அதை ஏலங்கூறியபோது. ஒருவர் அதை 35-பவுன் விலை கூறி எடுத்தாராம். விநோத வியாபாரத்தில் கிடைத்த மகத்தான லாபத்தைப் பாருங்கள்!

ஐந்து ஏக்கரில் சுயராஜ்யம்

ஸ்ரீமாந் பாதுர் வே. ராஜகோபாலாச்சாரியார் எழுதியது.

II

விவசாயப் பண்ணைக்குத் தேவையான உபகரணங்கள்.

(சகல உரிமைகளும் ஆசிரியருக்கே.)

வேலி.

"இனம் இனத்தைக்காக்கும், வேலி பயிரைக்காக்கும்." இப்பாமர பழமொழி, நமது நாட்டில் தொன்று தொட்டு வழங்கப்பட்டு வருகிறது, ஆனாலும் கிரியாம்சத்தில் கிருஷிகர்கள் இப்பழமொழியின் உட்கருத்தின்படி நடக்கின்றார்களில்லை. வேலியில்லாத பண்ணையின் வேளாண்மையில் கெடுதல்கள் பல உள. அன்னியரது ஆடு மாடுகள் அடிக்கடி நாலுபக்கங்களிலிருந்தும் இவ்வைந்தேக்கர் பண்ணைக்குள் நுழைந்து, பயிர்களை மேய்ந்து, நாசம் செய்துபோகாமல் பாதுகாக்க நமது பண்ணையைச் சுற்றி நாம் வேலி அடைத்தே தீரவேண்டும். களவு, வீண்சண்டை, பண்ணையிலுள்ள கால் நடைகளுக்கு நோய்பரவுதல், முதலியன நமது ஐந்து ஏக்கர் சுயராஜ்யப் பண்ணைக்குள் நுழைந்து பரவாமல் செய்ய, ஆரம்பத்திலேயே நமது பண்ணைக்கு வேலி அடைத்தாக வேண்டும். ஒரு ராஜ்யத்தைக் காப்பாற்ற சண்டைக் கப்பல்களும், ராணுவப் படைகளும், போலீஸ் காவலாளர் படைகளும் இருக்கின்றன. இவைகள் இவைகளை வைத்து ஆதரிக்கும் ராஜ்யங்களுக்குச் செய்யும் ஊழியத்தைவிட, நமது ஐந்து ஏக்கர் பரப்புள்ள சுயராஜ்ய விவசாய தேசத்திற்கு, வேலி புரியு மென்பதில் ஐயமில்லை. நாலு பக்கங்களிலும் வேலிகளால் சூழப்பட்ட விவசாய பூமியைத்தான் விவசாயப் பண்ணையென்று கமத்தொழிலில் பெருலாபம் அடைந்துவரும் நாட்டார் அனைவரும் கருதுகின்றனர். எனவே, ஏற்கனவே நமது பண்ணையைச்சுற்றி வேலிகள் இல்லாமற் போனால் உடனே அவைகளை அமைத்துவிட வேண்டும்.

எத்தகைய வேலி அமைத்தல் வேண்டும்?

வேலி அமைப்பதற்குக் கூட அதிக புத்தி சாலித்தனப் பிரயோகம் தேவையா யிருக்கிறது.

வேலியின் மூலமாக, பண்ணையிலுள்ள விவசாய குடும்பங்களுக்குத் தேவையான விறகைப் பிரதி வருஷமும் தரக்கூடிய மரங்களையே வேலி மரங்களாக அமைத்தல் உத்தமம். எருவுக்காகக் கொஞ்சம் தழையை கொடுக்கக் கூடியதாகவும் இருப்பதோடு, வெளியிலிருந்து சுலபமாக கால் நடைகள் பண்ணைக்குள்ளே நுழை

யாமல் தடுக்கக்கூடிய இயற்கை பொருந்திய மரங்களையே வேலியில் நடுவது நல்லது. அதிக மூலதனப் பிரயோகம் செய்யக்கூடியவர்கள் தங்களது பண்ணைகளைச் சுற்றி இரும்புமுள் வேலியிட்டு இவ்வேலியோரமாக கொறுக்காப்புள்ளி (கொடுக்காப்புள்ளி) மரங்களை உண்டாக்கலாம். இவ்வேலியினால் பண்ணைக்குத் தேவையான விறகு கிடைப்பதோடு ஆடுகளுக்குத் தழையும் கிடைக்கும்.

சப்பாத்தி என்றழைக்கப்படும் நாகதாளியை எப்பொழுதும் வேலியாக அமைக்கவே கூடாது. பயிரை மேயும் வேலி சப்பாத்திக் கள்ளிதான் என்று ஒவ்வொரு கிருஷிகனுக்கும் அறிவுறுத்த நான் கடமைப் பட்டிருக்கிறேன். அதிகச் செலவில்லாமல் இவ்வேலியைப் போட்டு விடலாமாயினும், போட்டபின் இது தன்வேலையை மாத்திரம் பார்த்துக்கொண்டு சும்மாயிருப்பதில்லை. எப்பொழுதும் பண்ணை நிலத்திற்குள் நுழைந்து நிலத்தை ஆக்ரமித்தும், தொந்திரவு செய்து கொண்டேதான் இருக்கும். ஆக்ரமித்து உள்நுழைந்த சப்பாத்தியை (நாகதாளியை) அகற்றி அப்புறப்படுத்த அதிக செலவு ஏற்படும். ஒரு சிறுதேசம் தாங்கமுடியாத வீரம்பொருந்திய பெரிய ராணுவத்தை நிருவகித்து வந்தால் அது இறுதியில் என்னகதியடையுமோ, அதைப் போலவேதான் நாகதாளியை (சப்பாத்தியை) வேலியாக அமையப்பெற்றிருக்கும் பண்ணையின் கதியும் நேரிடும். உண்மையாக, நாகதாளி பண்ணைக்குள் சென்று பயிர்களைப் பகறகொள்ளையடிக்கும் பிசாசு, பாம்பு, தேள்முதலிய விஷ ஜந்துக்களுக்கும் இச்சப்பாத்திக்கள்ளி மகத்தான ஆதரவுபுரிந்து வருகிறது. இவ்வேலியிலிருந்து பண்ணைக்கு வேறு எவ்விதமான பலனும் ஏற்படுவது மில்லை. எனவே நமது ஐந்து ஏக்கர் பண்ணையில் சப்பாத்திக்கள்ளிக்கு ஒருபோதும் இடந்தரவே கூடாது.

திருகுக்கள்ளி, கொடிக்கள்ளி, சதுரக்கள்ளி முதலியன, வேலிச் செடிகள் செய்யவேண்டிய வேலைகளில், காக்கும் தொழில் ஒன்றைத்தான் புரிந்துவரும் பண்ணையின் லாபத்தை அதிகரிக்க இவைகள் ஒரு காரணமாக நிலவா.

மூங்கிலைத் தகுந்த வேலி மரமாக உபயோகப்படுத்தலாம். இந்திய அரசாங்கத்து கஸ்டம் இலாகா (customs department) அதிகாரிகள், அரசாங்கத்து வருமானத்தை அதிகரிப்பதற்காகச் செய்து வரும் ஊழியத்தைப்போல் பன் மடங்கு அதிகமான ஊழியத்தை மூங்கில் நமது விவசாயப் பண்ணைக்குப் புரிந்து கொண்டேவரும். கருவேலன், வெள்வேலன் முதலிய முள் மரங்களையும், வேம்பு, சவுக்கு முதலிய முள்ளில்லா மரங்களையும், வேலியோரத்தில் உண்டாக்குவது லாபத்தைத்தரும். மைசூர் பிராந்தியங்களில் சீயக்காய் மரங்களை வேலியாக உபயோகிக்கிறார்கள். எனவே, ஒவ்வொரு கிருஷிகனும் பண்ணையிருக்கும் இடத்திற்குத் தகுந்தவாறு வேலியை அமைத்தல் அவசியம்.

கால் நடைகள்.

வேலியடைத்து விட்டபின் நமது ஐந்து ஏக்கர் விஸ்தீரண முள்ள ராஜ்யத்தில் அதிக லாபத்துடன் அரசாட்சி செய்வதற்கு இன்றியமையாத உபகரணங்களை நாம் சேகரித்து வைத்துக் கொள்ள வேண்டும். இரண்டு ஜதை மாடுகள் வேண்டும். இவ்விரண்டில் ஒன்று வண்டிக்கு உதவக்கூடியதாகவும் இருக்கவேண்டும். ஆறு பற்களுக்குமேல் முளைக்காத மாடுகளையே வாங்குவது உத்தமம். இரண்டு வருஷங்களுக் கொருமுறை ஒரு ஜதையை மாற்றி மாற்றி விற்று விட்டு, நல்ல புதிய மாடுகளை வாங்கிக்கொண்டு வருதல் நலம். இவ்வாறு செய்வதால் பண்ணை, ஒரே காலத்தில் மாடுகளை அதிக விலைகொடுத்து வாங்க நேரிடாது. மாடுகளின் கணக்கிலும் அதிக நஷ்டம் ஏற்படாமல் இம்முறையினால் காத்துவிடலாம். நல்ல பசுக் களை இப்பண்ணைகளில் பரிபாலித்து வந்தால், அவைகளின் காளைக் கன்றுகளும் பிறந்த மூன்று வருஷங்களுக்கப்பால் வேலைபார்க்க வந்துவிடும்.

பெரிய நகரங்களுக்கருகில் நமது பண்ணை அமையப் பெற்றிருக்கு மாயின் அதிகமாகப் பால் தரும் பசுக்களை வைத்துப் பரிபாலித்து வருவதால் அதிக லாபம் கிடைக்கும். பண்ணைக்கு வேண்டிய எருவையும் ஏராளமாகத் தரும். நகரங்களுக் கருகில் இருக்கும் பண்ணைகளில் வைத்துக் கொள்ளும் பசுக்கள் "சேனையான" வுடனேயே விற்றுவிட வேண்டும். அல்லது உள் நாட்டில் வேறு மேய்ச்சற் காடு இருக்குமானால் அங்கே அனுப்பிவிட்டுப் பால் கறக் கும் பசுக்களை வாங்கி வைத்துக்கொள்ள வேண்டும். நெல்லூர் பசுக்களே ஏராளமாகப் பால் தரும் பசு இனங்களில் தென்னிந்தியா வில் தலைமை வகிப்பதால், இரண்டு அல்லது மூன்று பசுக்களைப் பண்ணையில் வாங்கி வைக்கலாம். காங்கயம் பசுக்களும் மைசூர் பசுக்களும் அதிகமாகப் பால் தராத பசுக்களாயிருப்பதால், பால் உற்பத்திக்காக இவைகளை பட்டணங்களுக்கருகில் வைத்துக்கொள்ள லாகாது. நல்ல பசுக்களைப் பொறுக்கி வாங்கித் தகுந்த தீனியிட்டுப் பரிபாலித்து வந்தால், பண்ணைக்கு நல்ல லாபத்தைத் தரும். பட்ட ணங்களுக்கு வெகு தூரத்திற் கப்பால் பண்ணை அமையப் பெற் றிருந்தால், எருமைகளையும் ஆடுகளையும் வைத்துக்கொண்டு பரிபா லிப்பது உத்தம மானது. இரண்டு மூன்று எருமைகளையும் இருபது பெண் ஆடுகளையும் ஒரு நல்ல கிடா ஆட்டையும் இப்பண்ணையில் வைத்துப் பரிபாலிக்கலாம். அதிக பால் தராத இரண்டு மூன்று பசுக்களையும் கூட வைத்துக்கொண்டாலும் பாதகமில்லை.

பட்டணங்களுக் கருகிலுள்ள கிருஷிகர்கள், தங்களுடைய பண்ணைகளில் அநேக நல்ல ஜாதி பெட்டைக் கோழிகளையும் ஒன்று அல்லது இரண்டு சேவலையும் வைத்து வளர்ப்பது லாபத் தைத் தரும்.

ஐந்து ஏக்கரில் சுயராஜ்யம்

இருக்கும் பண்ணையின் விஸ்தீரணத்தை அதிகரிக்காமல் எந்தெந்த முறைகளைக் கையாண்டால் பண்ணையிலிருந்து அதிகலாபம் அடையலாமோ அந்தந்த முறைகளைக் கூரிய முன்னோக்குடனும், விடாமுயற்சியுடனும், ஊக்கத்துடனும், கிருஷிகர்கள் அனுஷ்டித்து வந்தார்களேயாயின், பண்ணைகளிலிருந்து விடாமல் நல்ல பலனை அடைந்து வரக்கூடும்.

பண்ணையாட்கள்.

பண்ணைகளுக்கு இன்றியமையாத கால்நடைகளைத் தவிர, முக்கிய தேவையாக விருப்பது வேலைசெய்யும் ஆட்கள். எத்தனை பண்ணை ஆட்கள் நமது ஐந்து ஏக்கர் பண்ணைக்கு வேண்டும்? நகரங்களுக்கருகில் நமது பண்ணை இருக்குமாயின் கறிகாய்ப் பயிர்களைச் சாகுபடி செய்வது லாபகரமா யிருக்குமென்று ஏற்கனவே கூறியுள்ளேன். இக்காய்கறிக் கிருஷிக்கு அதிக மனித சக்தியின் பிரயோகமும், உரமும், பண்ணைக் குடையவனுடைய விடாத பார்வையும், உழைப்பும் தேவை. பட்டணங்களுக் கருகிலுள்ள பண்ணைகளில் இரண்டு பண்ணை யாட்களையாவது வைத்துப் போஷித்தல் வேண்டும். இப்பண்ணை யாட்களுக்கும், தங்களது குடும்பங்களோடு பண்ணையில் வசிக்க, வசதி தரவேண்டும். தினம் பட்டணங்களிற் செலவாகும் காய்கறிகளைச் சேகரம் செய்து கொடுக்க பண்ணை யாட்களும், அவர்களுடைய மனைவி மக்களும், உழைக்க வேண்டும். பட்டணங்களுக்கு வெகுதூரத்திற் கப்பாலுள்ள பண்ணையா யிருந்தால் நிரந்தரமாக இருக்கக்கூடிய ஒரு பண்ணையாள் குடும்பமே சில சந்தர்ப்பங்களில் போதுமானதாக விருக்கும். பண்ணை யாட்களையும் பண்ணையிலுள்ள கால் நடைகளையும் செவ்வனே, பரிபாலித்து வந்தால் பண்ணை செழிப்பா யிருக்கும். பண்ணை யாட்களுக்கும் அவர்களது குடும்பத்திற்கும், போஜனக் "கருப்பு" ஏற்படும்படி விடக்கூடாது. அவர்களுக்கும், அவர்களது குடும்பங்களுக்கும், தேவையான உடைகளைச் சங்கராந்தியின்போது கொடுக்கப்பட்டு வரும் தற்போதைய வழக்கத்தை, ஒவ்வொரு கிருஷிகனும் அனுஷ்டித்து வருவது நியாயமானது. மாசூல் கண்டு முதல் செய்யப்படும்போது பத்து செண்டு நிலத்திலுள்ள தானிய மாசூலேயோ, அல்லது அம்மாசூலின் விலை மதிப்பையோ, ஒவ்வொரு பண்ணை யாளுக்கும் வருஷத்திற்கொரு தரம் கொடுத்து வந்தால் அவர்கள் திருப்தியடைந்து, சிறிதுபொருளை சேமித்து வைத்துக்கொள்ள முடியும். தனக்கு உணவு கிடைப்பதோடு, சிறிது பொருளையும் சேகரம் செய்துகொள்ளும்படி விடும் விவசாயப் பண்ணையை, எந்தப் பண்ணையாளும் விட்டு விட்டு வெளியேற முன்வர மாட்டான்.

பண்ணை யாட்களுக்குக் கொடுக்கும் சம்பளங்கள் பல இடங்களில் பல மாதிரியாக விருக்கின்றன. பட்டணங்களுக் கருகிலுள்ள பண்ணை யாட்கள் எப்பொழுதும் மாதச் சம்பளத்தைப் பணமாகப்

பெறவே விரும்புகிறார்கள். நடு நாட்டுப் புறங்களிலுள்ள பண்ணை யாட்களுக்குத் தற்போது மாதம் இருபது பட்டணம் படி தானியம் முதல் நாற்பது பட்டணம் படி தானியம் வரையில் கொடுக்கப்பட்டு வருகின்றது. இதையும் தவிர தினம் ஒருவேளை கஞ்சியும் வருஷத்திற் கொருமுறை ஒரு ஜதை செருப்பும், இரண்டு வேஷ்டிகளும் அவனுக்குக் கிடைக்கின்றன. அறுவடை காலத்தில் களத்தில் சிந்திக்கிடக்கும் தானியத்திற்கும், இரண்டு கட்டு அடிக்காத சூட்டுக்கும் —தான்யங்களோடு கூடிய வைக்கோல்—அவன் உரித்தாகின்றான். இம்மூலமாக, ஒரு பண்ணை யாளுக்கு, வருஷாவருஷம் சுமார் ஐந்து கலம் தானியம் கிடைக்கலாம். மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் இனங்கள் மூலமாக பண்ணை யாட்களுக்குத் தற்போது கிடைத்து வரும் வருமானம், ஒருவாறு ஜீவனத்திற்குப் போதுமானதாக இருந்தாலும் கொஞ்சங்கூட பணத்தைச் சேர்த்து வைப்பதற்கு இவைகள் போதுமானதாக இல்லை.

பண்ணையாட்கள் ஊக்கத்துடன் வேலைசெய்ய வேண்டுமானால், அவர்களுக்கு ஆரம்பமுதலே பண்ணைக்கு ஏற்படும் எல்லாச் செலவுகளும் போக மீதமிருக்கும் லாபத்தில் ஓர் சிறிய பகுதியைத்தருவதாக உறுதி கூறி, விவசாயத்தை நடத்தி, வருஷக் கடைசியில் கிரியாம்சத்திலும் அவ்வாறே லாபத்தைப் பகிர்ந்து கொடுத்துப் பண்ணையை நடத்தினால், பண்ணைக்கு அபாரமான அனுகூலங்கள் ஏற்படும்.

டால்ஸ்டாய் என்ற ருஷிய ஞானி, தமது பத்து ஏக்ரா பண்ணையை இவ்வாறு தான் ருஷியாவில் நடத்திவந்தார். உலகத்திலுள்ள பிரமுகர்களின் கவனத்தை அக்காலத்தில் அது அதிகமாகக் கவர்ந்து வந்தது.

கருவிகள்.

நமது ஐந்து ஏக்கர் பண்ணைக்கு வேண்டிய விவசாயக் கருவிகள் பல உள. ஒரு இருப்புக் கலப்பையும், இரண்டு மரக்கலப்பைகளும் வேண்டும். ஆழமாகவும், செவ்வையாகவும் உழுவதுவே, நல்ல கிருஷிக்கு அஸ்திவாரமாக இருப்பதால், நாம் நமது நிலத்தை முதலில் நன்றாக உழுவதற்கு உபயோகமில்லாததும், தற்போது நாட்டின்கண் எங்கும் உபயோகிக்கப்பட்டு வருவதுமான, மரக்கலப்பைகளைக் கொண்டு கிறுவது அடாத செய்கையாகும். மரக்கலப்பைகளைக் கொண்டு நிலத்தைப் பண்படுத்துவதற்கு, உழுதல் என்றே நாம் சொல்லக்கூடாது. மேடும் பள்ளமுமாக அது கிறி வருகிறதே தவிர முழுமண்ணையும் பூமியைவிட்டுப் பிரித்து, உயர்த்தித் திருப்பி போடக்கூடிய சக்தி மரக்கலப்பைகளுக்குக் கிடையா. உழவு என்பது இம்மூன்று அம்சங்களையும், உட்கொண்ட வேலைக்குத் தான் பெயர். இம்மூன்று உழும் அம்சங்களையும் மரக்கலப்பைகள் செய்யாததால் மாசூல் அறுவடையானதற் கப்பால், ஆரம்பத்தில் இரும்புக் கலப்பைகளைக் கொண்டுதான் உழவேண்டும்.

எரு ஏற்றிவரவும், சாமான்களை வெளியேற்றி விற்றுவிட்டுவரவும், பண்ணைக்கு ஒரு வண்டி வேண்டுவது அவசியந்தான். இதைத் தவிர இரும்புக் கட்டப்பாறைகள், மண்வெட்டிகள், அரிவாள், களை வெட்டி, கோடாரி, கொழுக்கம்பிகள், தட்டு, கூடை, முறம் முதலிய விவசாயத் தட்டு முட்டுச் சாமான்களையும் நாம் தயாரித்து வைத்துக் கொள்ளவேண்டும்.

விதை.

விதை சேகரிப்பதில் தான் விவசாயிகள் அதிக கவனம் செலுத்த வேண்டும். "யேதா பீஜம் ததாங் தூரம்," என்ற வடமொழிப் பழமொழியின் உட்கருத்தையும், "தாயைப் பார்த்து மகளைக் கொள்ளு" என்று நமதிடையே வழங்கிவரும் பழமொழியின் உட்கருத்தையும், விதை சேகரிக்கும் விஷயத்தில் கிருஷிகர்கள் கண்டிப்பாய் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஏராளமாகக் கண்டு முதலாகும் ஜாதியின் வித்தையே நாம் சேகரித்து வைத்துக்கொள்ள வேண்டும். நமது பண்ணையிலிருந்து அதிக லாபமடைய வேண்டுமானல் ஆழமான உழவு, நல்ல விதை, போதுமான உரம் இம்மூன்றுக்கும் குறைவு ஏற்படும்படி நாம் விடக்கூடாதாதலால், ஆழமாக உழுவதற்குத் தகுந்த கலப்பைகளை வாங்குவதோடு, நல்ல விதைகளையும் சிரமப்பட்டுச் சேகரம் செய்யவேண்டும். முதலில் நல்ல ராசி காணும் ஜாதியின் விதையா யென்றறிந்து கொள்ள வேண்டும். வீரியம் பொருந்தியதாக யிருக்கிறதாவென்று சோதனை செய்தறிந்து கொள்ளவேண்டும். மக்கல், மடிசல், வெகுநாளைய பழைய விதை, பூச்சி துளைத்தவிதை, கரிநோவு, பூஞ்சணம் முதலிய நோய்களால் பீடிக்கப்பட்ட விதைகளைக் கண்டிப்பாய்ச் சேகரிக்கக் கூடாது. விதைகள் முளைக்குமா? முளைக்காதா? என்று சோதிப்பதற்கு சுலபமான வழியொன்றுண்டு.

ஒரு, மை ஒத்தும் தாளில் (ப்ளாட்டிங்பேபர்) நூறு சிறு சதுரக் கட்டங்கள் வரிசை வரிசையாகக் காகிதப் பென்ஸலால் போட்டபின், அக்கடிதத்தைத் தண்ணீரில் நனைத்துக் கட்டங்கள் போட்டபக்கம் மேல்புறமாக இருக்கும்படி ஒரு தட்டின்மேல் விரித்து வைக்கவேண்டும். நாம் வாங்கப்போகும் விதையை ராசியாக்கிக் கலந்து, ஒரு சிறு கரண்டியால் கொஞ்சம் விதையை யள்ளி அப்படியே தண்ணீரில் நனைத்து, ஒவ்வொரு விதையும் ஒவ்வொரு கட்டத்திற்குள் வைத்து விடவேண்டும். மை ஒற்றும் கடிதம், எப்பொழுதும் ஈரமாக விருக்கும் பொருட்டு ஒரு, சிறு துணியைச் சுருட்டி அக்கடிதத்தின் ஒரு மூலையில் வைத்து, அதன்மேல் ஆறுமணிக் கொருமுறை கொஞ்சங் கொஞ்சமாக ஜலம் வார்த்துக் கொண்டு வரவேண்டும். நாற்பத்தெட்டு மணிகளுக்கப்பால், முளைகிளம்பாத விதைகளைச் சுலபமாகக் கணக்கிடலாம்.

எந்த விதையை, நாம் உபயோகிக்க எண்ணுகிறேமோ, அவ்விதையில் நூற்றுக்குப் பத்துபங்கு முளைக்காத தானியங்களிருக்கு

மாயின், அதை உபயோகிக்கவே கூடாது. இம் "முளைப் பரீக்ஷை"—ஜெர்மினேஷன் டெஸ்ட் (Germination test) செய்த பிறகே விதைகளை வாங்குவது எப்போதும் நலம். இதைப்பற்றியே தான் ஔவை "இல்லத்தில் வித்து இருந்தால் உழவே இனிது" என்றார். நமது நிலத்து விதையே நல்லதாக விருப்பின் அதை வெயிலில் உலர்த்திப் பூச்சி புழுக்கள் சேராமல் தடுத்து பத்திரப் படுத்தி வைத்துக்கொள்ள வேண்டும்.

இவைகளெல்லாம் வெளித்தோற்றத்திற்குக் கஷ்டமாய் புலப் பட்டாலும், சிறிது அனுபவத்தால், படித்த யௌவனர்களுக்கு இவைகள் மிகவும் சுலபமாய்விடும். படித்த யௌவனர்கள் உழைப் பையும், வேலையையும், அகௌரவமான தெனக் கருதாமல்,இத்தகைய பண்ணை யொன்றை ஏற்றுக்கொண்டு, ஊக்கத்துடனே நடத்திவந் தார்களே யானால் சர்க்காரிடத்தில் வேலைக்கமர்ந்து, மேஜைகளுக்கு அடிமையாகி அவர்கள் சம்பாதிப்பதைவிடப் பன்மடங்கு அதிகமாக உண்மையாகச் சம்பாதிக்கலாம். மேஜைக் கடிமையாக இருப்பதால் ஆயுள்காலம் குறைகிறது. எனவே, படித்த யௌவனர்களே! மீண்டு மொருமுறை யீண்டு நான் கூறுவதைக் கேளுங்கள். இன்று அமெரிக்கா கண்டத்தின் ஜனாதிபதியாக வீற்றிருக்கும் ஸ்ரீமாந் கூலிட்ஜ் தனது பண்ணைவேலைகளைக் காலையிலிருந்து நடுப்பகல் வரைத் தானே செய்துவிட்டுத் தான், அரசாங்கவேலையை கவனிக்கி றார். காலையி லெழுந்ததும் பால் கறந்துவிட்டு, மாடுகள் கட்டி யிருக்கும் இடத்தைச் சுத்தம் செய்துவிட்டு, ஒரு ஏகர் விஸ்தீரணத் தைத் தானே உழுதபின்புதான் அவர் ஒவ்வொருநாளும் தமது உத்தி யோக மாளிகைக்குச் செல்கிறார். நாளைக்கும் இதேமாதிரியாகத் தான் நடந்துவருகிறார். அமெரிக்கா கண்டத்தின் ஜனத்தலைவரே இவ்வாறு உழைப்பை கௌரவமாக எண்ணி உழைத்து வரும் பொழுது, படித்த யௌவனர்களே! நீங்கள் விவசாயத்தைத் தீண் டப்படாத தொழிலாக எண்ணுவது, அடாத செய்கையாகும். சீர் கெட்டுக்குலைந்து கிடக்கும், இந்திய விவசாயத்தைப் புனருத்தார ணம் செய்வதற்காக உதவிசெய்ய, பூமாதேவி பெருநிதியத்தை வைத்துக்கொண்டு, படித்த யௌவனர்களை அழைத்தவண்ணமா யிருக்கிறாள். சர்வ கலாசாலைக்கு ஏராளமாகக் கொட்டியழுது கொண்டுவரும் பாரதப் புதல்வர்களே! பூமாதேவியின் வேண்டு கோளை இனியாவது நிறைவேற்றி வைப்பீர்களா?

---

* இது "லக்ஷ்மி" மலர் 1 இதழ் 12-ல் "ஐந்து ஏக்கரில் சுயராஜ்யம்" என்ற மகுடத்தில் எழுதப்பட்ட வியாசத்தின் தொடர்ச்சியாகும். இவ்வியாசங்களில் ஏதாவது நேயர்களுக்குச் சந்தேகமேற்பட்டால் லக்ஷ்மி பத்திராசிரியர் பார்வையிட்டு எனக் குக் கொடுப்பதென்று விலாசமிட்டுக் கடிதமெழுதினால் தகுந்தபதில் இலவசமாக அளிக்கப்படும்.



வைக்கம் வீரர் ஸ்ரீமாந் ஈ. வி. ராமசுவாமி நாயக்கர்.

சுகவழி எண்பது

ஸ்ரீமாந் பண்டித சுகவனம் சிவப்ரகாசம் அவர்கள் எழுதியது.

I. காற்றியல்—உம.

(1) அசுத்தக் காற்றே நசுக்குங் கூற்று.
(2) கெட்டவை, குப்பையை, எட்டக் கொட்டுக.
(3) மாட்டுக் கொட்டாய் வீட்டிற் கட்டேல்.
(4) புறக்கடை அசுத்தம் அறக் கழித்திடுக.
(5) பள்ளியு ளட்டிலில் பாத்திரம் நிறுவேல்.
(6) வீட்டுமுன் மலஜல விலக்குகள் கூடா.
(7) பழையன அழுகல் கழிவன எறிக.
(8) படுக்கும் அறைக்குள் தானியம் பரப்பேல்.
(9) நித்திரை யறையும் சிற்றொளி சாலும்.
(10) சாளரங் கபாடந் தனிப்பகல் மூடேல்.
(11) பனியிற் கதவம் பரப்புதல் வேண்டா.
(12) காற்றிலாச் சிறுகுடில் வற்புடைத் தன்று.
(13) எதிர்க்காற் றடிக்கு மிடந்தனிற் படுக்கேல்.
(14) திறந்துள வெளிகளில் உறங்குதல் தீது.
(15) சிசுக்களைத் தரையிற் கிடத்துதல் தவறு.
(16) போர்த்துக் குழந்தையைப் போற்றலே மாண்பு.
(17) முகம் மூடியுறங்கல் மூதேவி லக்ஷணம்.
(18) காலையிற் போர்த்தே வேலைக்குப் போக.
(19) கூட்டத்து நடுவண் குழுமி யிராதே.
(20) வீடும் பிறவும் நீடு சுத்தஞ் செய்.

II. நீர் நெறி—உம.

(1) பரிசுத்த நீரே பருகுதல் வேண்டும்.
(2) காய்ச்சா றினநீர் கரும்பினு மினிது.
(3) ஆற்றுப் புதுநீர் அன்றே நோய்தரும்.
(4) உண்ணுமுன் சிறிதுநீர் உட்கொளல் முறைமை.
(5) சோடாக்குடியைத் தொலைப்பதே மேன்மை.
(6) மதுபானஞ் செயின் மதியார் மதியார்.
(7) தேநீர் காப்பியைத் தீண்டலுங் கொடிது.
(8) கெட்டிக் கஷாயங் கட்டறுத்து விடும்.

(9) சிவக்கக் காய்ச்சிய பாலே சிறந்தது.
(10) நலிவுடைப் பாலகர் நிசியில் விரும்பில்
தெண்ணீ ரருந்தலே செம் நீர்மைத்து.
(11) ஒன்பது மாதமும் குழந்தைகட் குணவு
தம் தாய்ப்பாலே தகுமென மொழிப.
(12) தண் ணீர்க் கழுவல் தகா; சிசுகட்கே.
(13) வெள்ளத்து நீரினில் விழுந்துழ லாதே.
(14) அசுசி நீ ராயின் அருவருப் புறுக.
(15) நற்றண் ணீரினை நாற்றஞ் செய்யேல்.
(16) மல ஜலங் கழித்தல் கரையினும் அல்ல.
(17) நீர்க் கசி விடத்து நிற்பதுங் தவறு.
(18) குடுவையிற் குடிநீா கொள்ளுதல் வேண்டா.
(19) தெள்ளிய நீரைத் திறந்து வைக்காதே.
(20) கெட்ட எந் நீரையும் கிணற்றினுட் கொட்டேல்.

III. உணவு முறை—உ௰.

(1) வேகா எவையும் ஆகா வுணவே.
(2) அழுகிய; இழிவ; அருந்துவ தொழிக.
(3) பலந்தரும் உணவே நலந்தரு மமுதம்.
(4) கலப்பு நெய்; எண்ணெய் விலக்குதல் நன்மை.
(5) திறந்துள பண்டங் தீண்ட லும் வேண்டாம்.
(6) கனியாப் பழவகை தணியா நோய்தரும்.
(7) நன் றுற மென்று தின்றலே நன்று.
(8) தாய்ப்பால் போன்றதே சேய்ப்பால்; அமுதம்.
(9) தினமும் மும்முறை யுணவே சாலும்.
(10) அமிதம் விஷமெனல் அறிகுவை; அநுசரி!
(11) மாசுறு பதார்த்தம் வீசுதற் பாற்று.
(12) வேளையி லுண்டல் சாலவும் நன்று.
(13) வெறுஞ் சோ றின்றி நறுஞ்சுவை கலந்துண்.
(14) அவசரத் துண்ணல் ஆரோக்ய மின்று.
(15) இரவி லுணவை இலேசா யுண்க.
(16) பக்ஷத் தொருநாள் பட்டினி கிடக்க.
(17) பூனை நாய் காணப் போசனம் வையேல்.
(18) ஈ மொய் பண்டம் எதனையும் விரும்பேல்.
(19) ஆறின விலக்கல் சீரிய வழக்கம்.
(20) புதுதா னியங்களைப் பொறுத்துப யோகி.

சென்னை-600 008

IV. பொது விதி—உ0.

(1) காலைக் குளிப்பே சாலச் சிறப்பு.
(2) சுத்த ஆடையே சுக ஆதாரம்.
(3) அழுக்குத் தலைவிரி அவலக்ஷணமாம்.
(4) கல் கரி மணலால் பல் துலக்காதே.
(5) காதையும் நாசியையும் கண்ணெனக் கருது.
(6) இரவில் விழிப்பு விரைவில் நோய் தரும்.
(7) நாடக சாலையை நாடுதல் வேண்டா.
(8) தீயன பழகில் 'நாய்' என வெறுப்பர்.
(9) இருட்டினுந் தூரமும் செருப்பணிந் தேகு.
(10) இரவிற் றூக்கம் எண்மணி நேரம்.
(11) போசன முடித்து நீ ஜல மாடேல்.
(12) உண்டதும் படுக்கை கொண்டிடல் தவறு.
(13) வாய் திறந் துறங்கல் நோய் தரு மார்க்கம்.
(14) களைப்பில் லாக்காற் பகற் றுயில் களைக.
(15) நடுப் பகல் தன்னில் தலைக்கிட் டேகுக.
(16) தேகப் பயிற்சியைத் திடமுடன் நாடுக.
(17) நோயாளிக ளெனில் பேய் என விலகுக.
(18) களியாட் டங்களைக் கனவினுங் கருதேல்.
(19) நன்னடை யொழுக்கிற் பின்னடைந் தொழுகேல்.
(20) சுத்தமுங் கடவுளைத் தொழுதலும் மறவேல்!

வாழ்வுஞ் சுகமும் வயதும் நீடித்
தாழ்வுறுய், எண்பது தன்மை கைக்கொளினே!

பேய்.

தன்னைப் புகழ்வானும்
சாக்ஷிசொல்லி நிற்பானும்
பொன்னைமிகத் தேடிப்
புதைப்பானும் * ஒன்னலர்தம்
நண்புத்தி கேட்பானும்
நாணமில்லாதானும்
பெண்புத்தி
கேட்பானும் பேய்.

---

* பகைவர்.

தமிழும் தமிழரும் *

ஸ்ரீமாந் P. T. ஸ்ரீநிவாஸயங்காரவர்கள், M.A., L.T. எழுதியது.

யான் எடுத்துக்கொண்ட பொருள் தமிழகமும் நாட்டின் வரலாறு மென்பது. ஐரோப்பியர் நம்நாட்டுச்சரிதத்தைப்பற்றி எழுதியிருக்கின்றனர். அவர்கள் எழுதும் முறை சரியானது தான். ஆனால் அவர்கள் கொண்ட முடிவு சரியல்ல. காரணம் அவர்கள் நம்நாட்டு வழக்கங்களை யறியாமையே. மனிதர்ஏப்ஸ் என்னும் வாலில்லாக் குரங்கினின்றும் தோன்றின ரென்பர். அந்தக் கொள்கை எனக்கும் சம்மதமே. ஏனெனில் மிருகங்களிலிருந்து மனிதன் முதலில் நான்கு கால்களின் உதவியை நீக்கி இரண்டு கால்களோடு நின்று மற்றைய இரண்டையும் கைகளாக உபயோகிக்கிறது குரங்கைப் பின்பற்றியே நாமும் திருந்தியிருக்க வேண்டுமென்பது திணிபு. ஆயின் அவர்கள் எங்கு தோன்றி யிருக்கலாமெனின் அவர்கள் பூமியோட்டில் மிக வெப்பமுள்ள நடுக்கோட்டுக்கு அருகில் தோன்றிருயிக்க வேண்டும். இந்த உண்மையை ஐரோப்பியர் பலரும் ஒத்துக்கொண்டிருக்கின்றனர். ஆனால் அது எவ்விட மென்னும்போது பலத்த விவாதம் ஏற்படுகிறது. ஒரு ஐரோப்பிய பண்டிதர் ஆஸ்திரேலியா பக்கத்தில் அகப்பட்ட மிகப் பழமையான ஒரு தொடை எலும்பை யெடுத்துக்கொண்டு அது மக்கள் எலும்பென்றும் மக்கள் முதலில் அங்கு தோன்றியிருக்க வேண்டும் என்றும் வாதித்தார். மற்றொருவர் பல் ஒன்றை எடுத்துக்கொண்டு வாதிக்கின்றார். இவைகளெல்லாம் தவறுடையன. எங்கு மக்களுள் நாகரிக மிகுந்திருக்கின்றதோ மக்களுக்கும் மாக்களுக்கும் வேறுபாடு காணப்படுகின்றதோ அங்கே மக்கள் தோன்றியிருக்க வேண்டுமென வாதித்தேன். அக்கொள்கை இப்பொழுது பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு வருகிறது.

இம்மக்கள் ஓர் காலத்தில் இந்தியா முழுவதும் பரவியிருந்தனர். இந்நாடு விந்தியமலைக்கு வடக்கே சுமார் ஒரு இலக்க ஆண்டுகட்கு முன் கடலாக இருந்தது. அதற்குப் பின்னர் அது மேலெழுந்தது. மக்களும் ஆங்குக் குடியேறுவா ராயினர். இது தானுண்மை. இதுபோது மக்கள் மத்திய ஆசியாவினின்று மேற்குக் கணவாய் வழியாக வந்தனரென ஒரு சாராரும் இன்னும் பலர்பல விதங்களும் அவரவர்கள் மனம் போனவாறு கூறுகின்றனர். அவைகளெல்லாம் பொருந்தா வுரையாகும். நில வியற்'பிரகாரமும் விலங்கியற் பிரகாரமும் மக்கள் உண்டாவதற்கு வசதியுள்ள இடம் தமிழகமே.

---

* இது கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் பதின்மூன்றும் ஆண்டு நிறைவுவிழாவன்று, ஸ்ரீமாந் அய்யங்காரவர்கள் நிகழ்த்திய ஒரு சொற் மொழிவின் சுருக்கம்.

இனி இவர்கள் பேசிய மொழி எதுவோவெனின் தமிழ் மொழியே. ஆனால் இப்பொழுது வழங்கும் இலக்கணத் தமிழன்று. இலக்கண காலத்திற்கு முந்திய தமிழாகும். அதற்குத் தாய்த்தமிழ் என்று நான் பேரிடுவேன். தெற்கிலிருந்து வடக்கிற் சென்றவர்களும் இத்தாய்த் தமிழையே பேசினர். வடக்கிலுள்ள சௌராஷ்டிர குசராத்தி, வங்காளி ஒட்டிரம் முதலிய எல்லாப் பாஷைகளும் இந்தத் தாய்த் தமிழ்ப் பாஷையின் பிரிவுகளே. அதை நான் மெய்ப்பிக்கக் கூடும். இக்காலத்திற் சிலர் தமிழ் முழுவதும் சம்ஸ்கிருதத்தினின்று வந்ததென்றும் மற்றொரு சாரார் எல்லாம் தமிழினின்று வந்ததென்றும் வாதிக்கின்றனர். அக்கொள்கைகள் இரண்டும் தவறு. ஏனெனில் சம்ஸ்கிருத வாசனையே இல்லாத தமிழ் மொழிகளும் பல விருக்கின்றன. தமிழே இல்லாத சம்ஸ்கிருத மொழிகளும் இருக்கின்றன. ஒரு நாட்டில் ஒரு சொல் இருக்குமானால் அது அவ்விடத்தில் வழங்கும்போது அதன் காரியமும் வழங்க வேண்டும். உதாரணமாக உழு என்ற சொல் உழவு என்பதில்லாமல் எப்படி வரமுடியும். நிலத்தைப் பண்படுத்தி வாழ்பவருக்கன்றோ 'உழு' என்பதன் பொருள் தெரியும். அதே போல அரசன் ஒருவன் இருந்து அரசாண்டாலல்லவோ 'கோ' என்ற சொல்லேற்படும். இது போல் இன்னும் பல சொற்களுண்டு. யான் சம்ஸ்கிருதம் நன்கு பயின்றுளேன். தமிழும் கூடிய வரை யாராய்ந்துளேன். இங்கு கூடியிருக்கும் தமிழ்ப் பண்டிதர்களை யான் கேட்டுக் கொள்வது யாதெனில் தனித்தமிழ்ச் சொற்களைக் காட்டுங்கள்; எடுத்து எழுதுங்கள். அவற்றை யாராய்ந்து அதனால் ஏற்படும் நமது பூர்வ நிலையைக் காட்டுகிறேன். தமிழ்ப் பண்டிதர்கள் இவ்வேலையைச் செய்வதில்லை. இது இவர்களது முக்கிய பொறுப்பாமே.

இனி இவர்களது ஊண் முதலில் பழங்களும் கொட்டைகளுமே. முதலில் நாம் காண்பது வனம். அவைகள் பழங்கள் நிறைந்தவை. கொட்டைகள் எண்ணிறந்து காணப்படுவன.

இவர்களைக் கற்காலத்திய மனிதரெனப் பிரிக்கலாம். முன்னாளில் மக்கள் கற்களையே ஆயுதமாக உபயோகித்தனர். அக்கற்கள் இன்னும் தமிழகம் முழுதும் அகப்படுகின்றன. அவற்றைக் காண வெறுங்கண்கள் உதவா. இப்பொழுதுகூட திருச்சிராப்பள்ளியிலுள்ள காடுகளில் பழங் கற்கால ஆயுதங்கள் கிடைக்கின்றன. அவைகள் சவக்குழிக்குப் பக்கலில் காணப்படுகின்றன. முந்நாளில் இறந்த மக்களை எரிப்பதில்லை. இது ஆரியர் கொண்டுவந்து புகுத்திய வழக்கம். இறந்தவர்களைப் புதைப்பதே பழைய வழக்கம். இறந்தவர்களை ஒரு பெரிய பானையில் வைப்பார்கள்; வைத்து மேலும் மண் கொட்டி நிரப்புவார்கள். அதற்கு முதுமக்கள் தாழி என்று பேர். இதற்கு மேல் மூடுவார்கள். பிறகு ஆழமான குழி தோண்டி அதனில் இந்த முதுமக்கட்டாழியை வைப்பார்கள். வைத்து அதற்கு மேல் மண் போட்டு அதன்மேல் கோழி முட்டை

வடிவமான ஒரு கல்லால் மூடுவார்கள். அதன்மேல் மண்ணை நிரப்பி மூடித் தன் தரையாக்கி வரிசையாகச் சிறு கற்களை நட்டு வைப்பார்கள். அதுமாதிரி இத்தஞ்சையிலும் நான் காட்டக்கூடும். இதோடு இறந்தவன் உண்ணும் பொருட்டு அவன் உண்ட துவரை அவரை கொள்ளு முதலிய பொருள்களையும் அவன் உபயோகித்த ஆயுதங்களையும் வைப்பது வழக்கம். இப்படிப்பட்ட ஆயுதங்களைக் கொண்டே கற்காலமெனப் பேர் பெற்றது.

இக்கற்காலமும் ஆதி கற்காலமென்றும் புதிய கற்காலமென்றும் இருவகைப்படும். இதுவரை சொன்னது ஆதி கற்காலமாகும். இனி மக்கள் பழைய கற்களாலாய ஆயுதங்களை கரடு முரடாக செம்மை பெறுமல் செய்தனர். பின்வந்தோர் அவைகளை வழவழப்பாகச் சலவைக் கற்களால் செய்தனர். அக்கற்களுக்கு ஆங்கிலத்தில் டிராப் ரரக் என்று பேர். இந்த கருங்கற்கள் தென்னிந்தியாவிற்கு ஞண்டு. வேறு எங்கும் கிடையாது.

இவைகளால் மக்கள் வழவழப்பும், பளபளப்பும் உடைய ஆயுதங்களைச் செய்தனர். பின்னர் எவ்விதமாகவோ இரும்பைக் கண்டனர். தென்னிந்தியாவில் தான் எங்கு பார்த்தாலும் இரும்பு மிகுதி. அவர்கள் எங்கேயாவது அடுப்புவைத்துச் சமைத்தவிடத்தில் இரும்பு உருகி ஓட அதன் வழியாகக் கண்டிருக்கலாம். அது எவ்விதம் கண்டார்களென்று இதுபொழுது திட்டமாகச் சொல்வதற்கில்லை. கண்டு கொண்டது மாத்திர முண்மை. ஆனல் ஐரோப்பிய சரித்திர ஆசிரியரில் பேர்வாங்கிய வின்சென்டு சிமித் இந்தியாவுக்கு இரும்பு கி. பி. 600-ல் வந்ததென்றேரிடத்திலும் கி. மு. 300-ல் வந்த மகா அலெக்சாந்தர் இரும்புக்கு ஆசைப்பட்டான் என்று ஓரிடத்திலும் எழுதுகிறுர். ஒருவர்நடை ஒருவர்க்குத் தெரிய நியாயமில்லை. ஆகையால் அவரவர்கள் சரித்திரம் அவரவர்களே எழுதவேண்டும். இது போன்ற வேலைகள் நீங்கள் செய்ய முற்படவேண்டும்.

ஒற்றுமை மகாநாடும் பின்னரும்.

'எங் இந்தியா'வில் மகாத்மா எழுதியுள்ள மற்ருெரு குறிப்பு வருமாறு :—என்னுடைய உண்ணுவிரதமும், ஒற்றுமை மகாநாடும் ஒருபுறம் நடைபெற்று முடிந்திருக்கையில், அலகாபாத்திலும் ஜப்பல்பூரிலும் கலவரங்கள் நடைபெற்றிருக்கின்றன. உண்ணுவிரதத்தின், அல்லது ஒற்றுமை மகாநாட்டின் பலனுக எல்லாக் கலவரங்களும் உடனே நின்று விடுமென்று எவரும் எதிர்பார்க்கவில்லை. ஆனல் இத்தகைய கலவரங்களைப்பற்றிப் பத்திரிகைகள் மிகைப்படுத்தாமலும், ஒரு தலைச்சார்பின்றியும் எழுதுமென நான் எதிர்பார்க்கவே செய்கிறேன். எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த இரு சமூகங்களின் தலைவர்களும் ஒத்துழைத்து, கலவரங்களின் காரணங்களைக் கண்டுபிடித்து வெளியிடுவதுடன் இனி அவை நேரிடாதிருக்க வகை செய்வார்களென்று நான் நம்பியுள்ளேன்.

துரை ராஜா

அல்லது

தீபாவளித் தடபுடல்

"விநோதன்" எழுதியது.

இளைஞர்களே! உங்களுக்கு இப்பொழுதே நடந்தேறிய தீபாவளிப் பண்டிகைச் சம்பவத்தை முன்னிட்டு ஒரு சிறு விகடநவீனம்.

துரை ராஜாவுக்கு வயது இருபத்து ஆறு. அவன் சிவந்த மேனியன், அழகு மிக்கவன், ஆஜானபாகு. அவன் கைகள் நீண்டிருந்தன போலவே அவன் கொடைக்குணமும் சிறந்திருந்தது. எவரேனும் அவனை அண்டி இரந்தால் "இல்லை" என்ற சொல் அவன் வாயினின்றும் இழிவதற்குப் பதிலாக அவன் கரங்கள் அவ்வேழையின் துயரைப்போக்க முற்படும். அவன் நாகரீகச் சிறுவனாதலின் எப்பொழுதும் ஒரு ஷர்ட்டு, ஜரிகை அங்கவஸ்திரம் ஆகிய இவற்றுடனேயே விளங்குவான். அவன் முகத்தில் எப்பொழுதும் இலக்குமி களை தவழ்ந்த வண்ணமிருக்கும். அவனது ஆனனத்தில் புன்னகை பூத்திருக்கும். அவன் செல்வச் சீமான் ஒருவரது அருமருந்தன்ன புதல்வன். அவன் தந்தை பிரபல வக்கீலாயிருந்து பின்பு தேசிய இயக்கத்தில் ஈடுபட்டதனிமித்தம் அத்தொழிலை அறவே வெறுத்தொழித்த பிரபல புருஷராம் விஜயராகவாசாரியார். அவர் தம் பத்தினி அம்புஜாட்சியோ பதி சொற்கடவாத பாவை. அப்பெருமாட்டியை வெளியிற் காண்பது மிகவும் அரிது. விஜயராகவாசாரியார் ஒரு சாந்தகுண சீலர். "சுயராஜ்ய வாழ்வே சுகவாழ்வு" என்னுந் தன்மையர். ஆங்கிலங் கற்றுத் தேர்ந்து பிரபல வக்கீலாய் நியாயமான வழிகளிலேயே பொருளீட்டியவர். மஹாத்மா காந்தியின் உபதேசங்களைச் செவியுற்றதும் வக்கீல் நாற்றம் அவரை அறவே விட்டகன்றது. அதுமுதற்கொண்டு அவர் கதர் மயமாய் விளங்கிவந்தார். தமது உடையின் பொருட்டுப் பிறர்கையை எதிர்பார்ப்பது இழிவெனக் கருதி அனுதினம் ஒரு சிறு பொழுது கைராட்டினத்தில் நூல் நூற்பதில் செலவிட்டுவந்தார். இவ்வரிய தொழிலை அவர் மனைவியும் மேற்கொண்டொழுகிவந்தனள். அவருக்கு மூதாதையர் தேடிவைத்த பிதுரார்ஜித சொத்து நிலங்கள் உருவாய்க் கரூர் தாலுகாவில் ஏராளமாய் இருந்தது. அன்றியும் அவர் சொந்த முயற்சியால் ஈட்டியதும் மிகுதியுமிருந்தது. மைலாப்பூரில் கடற்கரையினுக்கருகில் விளங்கிய அவர் மாளிகை அரசன் அரண்மனை போன்று பொலிவுபெற்றுத் திகழ்ந்தது. அவர் தம் இல்லத்தில் ஆங்காங்கு தேசியப்படங்களும், கத்தர் நூலாலான பொருள்கள் பலவும், கைராட்டினங்கள் சிலவும் காணப்படும். இத்தகைய சந்தோஷ சித்த தம்பதிகளுக்கு வெகு காலங்கழித்து நம்துரைராஜா உற்பவித்து மகிழ்ச்சி பூட்டினான். துரைராஜா இப்பொழுது

F. A. கிளாஸ் இரண்டாவது வகுப்பில் படித்துக்கொண் டிருக்கிருன். ஏன், இப்பொழுதுதான் இவ்வகுப்பில் பயில்கிருன் என நீங்கள் கேட்கலாம். பாவம்! அநியாயமாய் கீழ் வகுப்புக்களும், முக்கியமாய் மெட்ரிகுலேஷன் வகுப்பும் சேர்ந்து வீணுகப் பல வருடங்கள், ஏராளமான பணம், முயற்சி முதலியவற்றை அவனிடமிருந்து பிடுங்கிக்கொண்டு வஞ்சம் தீர்த்துக் கொண்டன. அவன் சென்றதற்கு முந்தின வருடந்தான் மெட்ரிகுலேஷன் முற்றுகையில் வெற்றிபெற்ருன். இன்னும் அவன் தன் பெற்ருேருக்குப் பச்சிளங் குழவியாகவே இருந்து வந்தான்.

முற்கூறியவிதம் அவன் பற்பல நற்குணங்களைப் பெற்றிருந்தும் மஹாத்மாவின் கொள்கைகளுள் முக்கியமான கத்தர் தரிப்பதை முற்றிலும் வெறுத்தான். தனக்கு ஏராளமான செல்வமிருக்கையில் முரட்டுத்துணியை உடுத்துத் தான் ஏன் அவஸ்தைப்படவேண்டுமென நினைத்தான். ஆனுல், இவ்விஷயங்களுக்குத் தன்னுலியன்ற உதவியைக் கொடுக்கத்தக்க அருங்குணம் அவனிடம் அமைந்திருந்தது. மற்றும் அவனிடம் குடிப்போந்த வெறுக்கத்தக்க விஷயங்களுள் ஒன்று "காப்பிக்குடி" யாகும். அன்ருடம் ஒரு வேளையேனும் அவ்வமுதபானம் இல்லாவிடில் அவனுக்குத் தலைவலியும சுரமும் உத்தரவின்றி வந்துவிடும். இவ்விரு துர்க்குணங்களைத் தவிர அவன் பால் எல்லாவித நற்குணங்களும் ஒருங்கே சேர்ந்து விளங்கின.

உலகம் சுகம் துக்கம் இரண்டுங் கொண்டது. 'இன்பமும் துன்பமும் ஒருவழி நில்லாத இப்பூமியில் எவரும் எப்பொழுதும் சுகமே அனுபவிப்பதுமில்லை; அவ்வாறே துன்பம் துய்ப்பதுமில்லை. எவர் பாலும் ஒரு குறை இருந்தே தீருகிறது. இஃது உலகியல்பு. ஆனுல் குறையைக் குறைக்கத்தக்க ஒரு அதிசயமான பான்மை அக்குறையுள்ளாரிடம் திகழும். இவ்வாறே, சிறந்த குணங்கள் வாய்ந்த துரைராஜாவிடமும் ஒரு குறையிருந்து வந்தது. அத்தகைய குறைவு அவனைச் சில வருடங்களாகவே பீடித்து அவனை அல்லலுக் காளாக்கியதுமன்றி, அவன் பெற்ருேருக்கும் மிகுந்த மனவருத்தத்தை யளித்தது. அக்குறை எம்முறையானும் தீர்ந்தபாடில்லை. அது நெடுங்கால நாகரீகப் படிப்பின் விளைவோ? அன்றி, விதியின் முளையோ? தெரியவில்லை. அப்படி அது பெருந்துன்பமும் இழைத்து விடவில்லை. ஒவ்வோர் சமயம் அவனைச் சஞ்சலத்துக் காளாக்கியதே பரிதாபகரமான விஷயம். அக்குறை "மாலைக்கண்" என்பதேயாகும். இருட்டுஞ் சமயத்தும், விளக்கொளி யில்லா விடத்தும் அவன் பாடு திண்டாட்டத்திற்கு வந்துவிடும்.

* * * *

மெட்ரிகுலேஷன் பரிட்சைத் தேர்தல் ஆண்மக்கள் வாழ்நாளின்கண் குறிப்பிடத்தக்க பெருஞ் சம்பவமாகும். இப்பெரும்பேய் பலன் ஒன்றும் ஈயாவிடினும் நம்மவர் மதியையும், புராதன ஆசார

விதிகளேயும் முற்றும் குலேத்துவிட்டது விசனிக்கத் தக்கதேயாகும். அப்பொழுதே ஒருவன் விவாகம் செய்துகொள்ள அருகனுகின்றான் என்பது நம்மவரில் நவீன நாகரிகப் பித்தேறியவர்களது தீட்சண்ய மான மூடக்கொள்கை. பண்டைக்காலத்துக் குருகுலவாசம் மலே யேறி வெகு நாட்களாய் விட்டன. மெட்ரிகுலேஷன் வகுப்பே தனது சீடனுக்குக் கலியாணம் செய்து கொள்ள உத்தரவளிக்கும் ஆசான். இது கலிகால விந்தை. இதினின்றும் நம் துரை ராஜா வும் வழுவவில்லே. அவனுக்கும் சென்ற வருடமே மணவினை தை மாதம் நடந்தேறியது. அவனுக்கு இல்லாளாய் வந்து வாய்த்த தருணி சந்திரானனு என்னும் அருங்குண மணியாவள். இவள் ஸ்ரீரங்கம் ஸ்ரீநிவாஸாசாரியாருக்கு அவர் மனைவி கோகிலத்தின்பால் உதித்தவள். இவளுக்குக் கலியாண காலத்தில் வயது பன்னிரண்டு. இப்பொழுதே தளிர்த்து அரும்பிப் பூத்த பூங்கொடி போலும் மிக்க வனப்பு வாய்ந்து விளங்கினுள் இம்மடந்தை. இளமையும், அழகும் மேலிட்டிருந்தன போலவே கல்வியுறை உள்ளத்தாலும் இவள் மேம்பாடுற்று விளங்கினுள். இத்தகைய 'வல்லி விடா மெல்லி டையாள்' தனக்கு இல்ல நங்கையாய் வந்து வாய்த்ததைக் குறித்துப் பெரிதும் மகிழ் வெய்தினன் நம் துரைராஜா. "தார மும் குருவும் தலேவிதி" யென்ற ஆன்றோர் வாக்கும் பொய்க்கு மோ?

*   *   *   *   *

இவ்வருடம் வைகாசிமீ சந்திரானனு புஷ்பவதியாயினள். இச் செய்தி கேட்ட துரைராஜா கழிபேருவகை பூத்தனன். இனித் தானும் தன் காதலியும் இன்ப வாழ் நாள் போக்கலாம் என்ற நினை வினுல் அவன் பெரிதும் மேற்கொள்ளப் பட்டவனுயிருந்தான். காத லனும் காதலியும் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பமல் லவோ? இத்தகைய இன்பந்ததும்பும் மனைவாழ்க்கையைக் குறித்தே யன்றோ நம் தெய்வப் புலமைத் தமிழ் மூதாட்டியும் "இல்லறமல் லது நல்லறமன்று" என்று நவின்று போந்தாள். இனி, பக்குவ கால முற்றதென் இன்பக் களஞ்சியத் துணைவியைப் பார்ப்பதற்கு அவன் பெரிதும் அவாக்கொண்டான். அவனது ஆசை நிறைவேறுங் காலம் நெருங்கிக்கொண்டே வந்தது. விவாகமான மறு வருடமே தன் இல்லாள் தனதகம் வருமாறு வரம் பெற்ற துரைராஜாவின் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்!

*   *   *   *   *

தீபாவளிப் பண்டிகை இன்னும் ஒரு வாரமே யிருக்கின்றது. இவ்வேழு நாட்களே தன் இன்னுயிர்க் காதலியைக் கண்ணுற அவா வும் காதலனைத் தடை செய்து இடையில் நிற்கும் கொடிய பாசம். இவ்வன் கயிறும் நாளுக்கு நாள் சுருங்கி இடை வெளியைக் குறைத்து வந்தது. தீபாவளிப் பண்டிகைக்கு ஒரு நாள் முன்ன தாகவே துரைராஜா தன் பிரயாணத்தை மேற்கொள்ளத் தீர்மானித் தான்.

தீபாவளிப் பண்டிகை புதிய மாப்பிள்ளைகளின் நிலைமையைப் பெரிதும் உயர்த்தும் ஓர் அரும்பெருந்தினம். அன்று வேட்டகத்தில் அவர்களுக்கு நடக்கும் ஆசார உபசாரங்களுக்கு அளவே கிடையாது. மனைவி வீட்டார் எவ்வளவு வறியராயினும் மாப்பிள்ளைகளின் ஆணைப் படியும் மனப்போக்கின்படியும் அன்று நடந்தே தீரவேண்டும். இல்லாவிடிலோ, தற்கால நாகரீக சிகாமணிகளுக்கு "கோபம்" என்னும் பெரியோன் துணைவனுய் விடுவான். வேட்டகத்தார் செல்வவந்தராய் இருந்துவிடின், கேட்பானேன்? மாப்பிள்ளைகள் அடித்தது கொட்டம் "நரிக்குக் கொண்டாட்டம் நண்டுக்குத் திண்டாட்டம்." ஆனல், அன்பு, மரியாதை, வழக்கம் என்பன இடையே இலங்கித் திண்டாட்டத்தை அறவே யொழித்து அக்காலத்தைச் சந்தோஷம் நிரம்பியதாகச் செய்துவிடும். சீர்வரிசைகள் என்ன, பட்டுப் பட்டாடைகள் என்ன, ஆபரணங்கள் என்ன, எல்லாம் சேர்ந்து மாப்பிள்ளைமார்களின் பெருமையை உன்னதமான ஸ்தானத்திற்கு உயர்த்திவிடும். அறுசுவை உண்டியும் சேர்ந்துவிடும் போது அவர்கள் தங்களை மிஞ்சினோர் எவரும் இல்லை என எண்ணுவதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது.

நிற்க, தீபாவளிப் பண்டிகைக்கு இன்னும் இரண்டுநாட்களே யுள்ளன. விஜயராகவாசாரியாரும், அம்புஜாட்சியும் கலந்து ஆலோசித்துத் தமது தனயனுக்கு வருகிற தை மாதத்திலேயே விவாகத்தை நடத்திவிடுவது எனத் தீர்மானித்தனர். தலை தீபாவளியின் நிமித்தம் தம் மைந்தனே போய்வருவதென்றும் முடிவுசெய்து இச்சுப சமாசாரத்தோடும் அவ்வாறே அவனைப் பிரயாணப்படுத்தி வைத்தனர்.

* * * * *

அன்று இரவு "போட் மெயில்" (Boat Mail) செங்கல்பட்டு ஜங்கிஷனை இரவு எட்டேமுக்கால் மணிக்குக் கிட்டிற்று. அங்கு வண்டி குறைந்தது அரைமணி நேரமேனும் நிற்கும். ஆகவே, அவ்வேளை நாகரீக மனிதர் யாவரும் வண்டியினின்றும் இழிந்து 'பிளாட் பாரத்தில்' உலாவுவதிலும், ஹோட்டலில் புகுந்து சிற்றுண்டி எடுத்துக் கொள்ளுவதிலும் கழிப்பது யாவரும் கண் கூடாக் கண்ட காட்சி. துரைராஜாவும் இவ்வகுப்பினருக்கு நெருங்கிய உறவினனுதலின் அவ்வாசையை வெறுக்க முடியவில்லை. இவ்வாறு சுமார் அரைமணி நேரம் கழிந்தது. அப்பொழுதுதான் "காப்பி"த் தாகம் துரைராஜாவை வலுவாய்ப் பிடித்துக்கொண்டது. உடனே அவன் அருகிலிருந்த பிரயாணிகள் உணவுகொள்ளும் இடத்திற்கு (Refreshment Room) இதனிமித்தம் போய் பானத்தை அருந்துவதற்குள்ளாக புகைவண்டிக்கு அவசரம் வந்துவிட்டது. துரைராஜா தட்சிணை சமர்ப்பிவித்து விட்டு வருவதற்குள்ளாக "ஐயர் வரும் வரையில் அமாவாசை காத்திருக்குமா?" என்று கூறுவது போல் ஊதிக்கொண்டு கண்ணுக்கு மறைந்துவிட்டது. இனி, என்ன செய்

வது? விசாரித்ததில் இரவு வெகு நேரங்கழித்துச் சுமார் இரண்டு மணிக்கு வரும் வேறு வண்டியில் போகவேண்டியதைத் தவிர, வேறு வழியில்லை எனத் திட்டமாய் ஏற்பட்டுவிட்டது. பாவம்! அங்கேயே மூட்டையைத் தலையணையாய் வைத்துக்கொண்டு துரை ராஜா சிறிது படுத்துறங்கினான். வண்டிவரவும் அவன் நித்திரை தெளியவும் சரியாயிருந்ததால் பரபரப்பாய் உடனே எழுந்து அதில் ஆரோகணித்துக் கொண்டான்.

* * * * *

ஸ்ரீரங்கம் புது அக்ரஹாரத்தில் முன்புறம் சிறிது தூரம்வரை நறுமணங் கமழும் கண்ணுக்கினிய பலவித பூங்கொடிகள் படர்ந் தடர்ந்து செழித்த 'வளைவு' (கமான்) திகழ்ந்து ரமணீயமாயிருந்தது. மறுகோடியில் ஒரு பெரிய அழகிய மாளிகை மிளிர்ந்தது. சூரியாஸ்த மன தருணமிருக்கலாம். மாளிகைக்குள் "மாப்பிள்ளை ஏன் இன் னும் வரவில்லை" என்ற ஒருவர் வினவும், "நீங்கள் சொல்லியபடி ஒருவேளை வண்டி தவறியிருந்து இப்பொழுதோ, இன்னும் சற்று நேரத்திற்குள்ளாகவோ வரலாம்" என்ற இதமான விடையும் மெல் லெனக் கேட்டன. இதற்குள் "இதோ, வந்துவிட்டார்" என்று ஆர்வமுடன் கூவிச்செல்லும் ஒரு இளைஞனது குரலும் செவிப்புலனு யிற்று. வாசலில் வந்து நின்ற வண்டியின் சப்தமும், அதைநோக்கி மேற்கூறியவிதம் சத்தமிட்டுச் சந்தோடத்தினால் சென்ற பாலனது ஒலியும் மாளிகையின் பின்கட்டிலிருந்த தம்பதிகளுக்குக் கேட்க வில்லை போலும்! எதிர்கொண்டுவந்து அழைத்த மைத்துனச் சிறு வன்—ஐந்து வயதிருக்கலாம்—துரைராஜா (அத்திம்பேர்) கொணர்ந் திருந்த சிறு மூட்டையைக் கையில் வாங்கிக்கொண்டு "வாருங்கள், அத்திம்பேரே! சௌக்கியமா? இப்போதுதான் நீர் ஏன் இன்னும் வரவில்லை என்று கவலையுடன் அம்மா, அப்பா எல்லாரும் இருந்தா" என்று பணிக்கையாய்ச் சொல்லிப் பரபரப்புடன் நடந்தான். சாய ரட்சையானதால் துரைராஜாவும் சிரமப்பட்டு அவனைத் தொடர்ந்து சென்றான். இருந்தாற்போலிருந்து போகும் வழியிலிருந்த பள்ளத் தில் தெரியாது தவறி விழுந்துவிட்டான். அப்பொழுது பின்னால் திரும்பிப்பார்த்த சிறுவன் "என்ன, அத்திம்பேரே! காகிதக் குப்பை முதலியன போடும் பள்ளத்தைப் பார்த்து வந்திருக்கக்கூடாதா" என்று சொல்லிக் கிட்டநெருங்கி ஒரு கைகொடுத்து உதவவே வெளி யேறிய துரைராஜா தனது குற்றத்தை மறைக்க உடனே மனதைத் திடப்படுத்திக்கொண்டு, "இதன் வேலைப்பாட்டைப் பார்த்து அதிச யித்து இதேமாதிரி ஊரில் எங்களாத்தில் ஒன்று சட்டவேண்டும் என எண்ணி எவ்வளவு ஆழம் இருக்கிறது பார்ப்போம் என்றே இதில் இறங்கி என் சந்தேகத்தைப் போக்கிக்கொண்டேன்" என்று சமா தான மொழி பகர்ந்து, மேலும் வழியை அனுமானித்துக்கொண்டு நிதானமாய்ச் சென்றான். இவன் படியருகே சென்றதும், அப்பொழு துதான் சிறிதுதூரம் கொம்பு முளைத்து உறுதிபெற்றிருந்த காளைக் கன்று ஒன்று அவன் அன்னியனென வெகுண்டு கழுத்தில் கட்டிய

சதங்கைகள் ஒலிக்க நன்ருய் முட்டிக் கீழே தள்ளிவிட்டது. இவ்வாறு எதிர்பாராது நேரிடவே பொறிகலங்கி விழுந்த நம் துரைராஜா பொட்டென எழுந்து தன் ஆடைகளைச் சீர்திருத்திக்கொண்டு உள்ளே செல்ல ஆபத்தப்பட, இச்சம்பவம் நிகழ்கையில் உள்ளே சென்றிருந்த சிறுவனுடனும், "வரவேண்டும், வரவேண்டும். மாப்பிள்ளைவாள்! ஏது போங்கள் நீங்கள் வருவீர்களென்று வழியைப் பார்த்துப் பார்த்துக் கண்களெல்லாம் பூத்துப்போய் விட்டன" என்று மொழிந்த விதம், அவ்வாறே மெதுவான குரலில் உபசார வார்த்தைகள் புகன்றவண்ணம் இளமைவாய்ந்த மாமியார் தொடரவரும் தன் மாமனரைக் கண்டு புன்முறுவல் செய்து வணங்கி அவர்கள் ஆசியுரைபெற்ருன். இவ்வமயமெல்லாம், வாசல் அறைப் பலகணியின் வழியே சீரிளமைத்திறம் பெற்ற அணங்கின் பங்கஜானனம் ஒன்று வெட்கமேலீட்டால் ஒளிர்ந்தது. சற்று நேரத்திற்கெல்லாம் வந்து தன்னை வணங்கியெழுந்த மட மடங்கையாம் தன் பேரின்பின் அதிரூப செளந்தரிய லாவண்யங்கண்டு நம்துரைராஜா பெரிதும் களிகூர்ந்தான். சற்று நேரங்கழிபவும் காதலர்களிடையே வெட்கம் என்பது மறைந்தொழிந்து சம்பாஷணை தோன்றி வளரலாயிற்று. இது கண்ட சந்திரானனுவின் பெற்ருேர் பெரிதும் இன்புற்றனர். (காதலியிடத்தும் இனித் தன் குறையை மறைப்பதில் பயனில்லை என்று தெளிந்த நம்துரைராஜா அஃது அறியாத அவள் பெற்ருேருக்கு அதைக் காட்டா தொழியும் விதம் தனக்கு இபன்ற உதவியைச் செய்யுமாறு அவளைக் கேட்டுக்கொண்டான். 'கணவனே யாவும்' என நினைத்த அந்நங்கை நல்லாளும் பயம் ஒழியுமாறு தக்க தேறுதலுரை தன் ஆர்வலனுக்குப் புகன்ருள். மன்றல் காலத்து இக்குறையைப் பெண்வீட்டார் கவனிக்க ஏதுவில்லாமல் போய்விட்டது என்ற விஷயம் இதற்கும் முன்னரே சொல்லப்பட வேண்டிய தொன்ருகும்.)

* * * * *

நடுவில் எதற்காக அனுவசியமாய்ச் செங்கற்பட்டு விஷயத்தை நுழைத்தேனென நேயர்களே! ஆயாசப்படாதீர்கள். அதுவும் ஒரு காரணம் பற்றியே யாகும். நெருப்பில்லா விடத்துப் புகையெழுவதில்லை. அதுபோலவே காரணமில்லாமல் காரியம் ஒரு பொழுதும் நடந்தேறுவது கிடையாது. துரைராஜா, சாவகாசமாய், நல்லவேளையாய் ஒருவரும் அருகில் இல்லாமலிருக்கையில் மூட்டையை அவிழ்த்துப் பார்த்தான். உடனே தன் கண்களை அவன் நம்பவில்லை. ஏனெனில், நூற்றுக் கணக்கில் விலைபெறும் சீமைநூல் ஜரிகை வஸ்திரங்களும் பட்டாடைகளும் எங்கோ பிரயாணம் சென்று வீட்டிருந்தன. அதற்குப் பதிலாக உள்ளே மூட்டையில், "மென்கால் சிறையன்னம் வீற்றிருந்த மென்மலரைப், புன் காகந்தான் கொள்ளப்போனாற்போல்" வெறுங் கந்தைத்துணிகள் காணப்பட்டன. அப்பொழுதுதான் தன் மூட்டையை யாரோ தான் செங்கற்பட்டில் அயர்ந்து நித்திரை செய்கையில் களவாடி அதற்குப்பதில்

அதே அளவும் உருவுமுள்ள அம்மூட்டையை வைத்திருக்கின்றனர் என அறிந்தான். இப்படித்தான் பல சமையங்களிலும் ரெயில்வே தெய்வத்தை அண்டிப் பிழைப்போரது திருவிளையாடல்கள் நடைபெறுகின்றன. இது கலிகால நவீன நாகரிகத்திருட்டு! சிறிது கண்ணயர்ந்தால் ஆளையே அடித்துக்கொண்டுபோய் விடுவார்கள். இது துரைராஜாவின் வாழ்நாளுள் ஒரு அரிய சம்பவம். எப்படியென்பது பின்னால் தெரியும்.

* * * * *

தீபாவளிப்பண்டிகை அமர்க்களம் கண்ணுக்கு ஒரு பெரிய இனிய விருந்து. ஐப்பசியில் வரும் கிருஷ்ணபட்ச சதுர்த்தசியன்று இரவு கொண்டல் வண்ணனாய்க் கோபாலர் குலத்துதித்த கண்ணபிரான் நரகாசுரனைச் சம்ஹரித்தார் என நமது சாஸ்திரம் கூறுகின்றது. அத்தினத்தைக் கொண்டாடுவது நம் ஆன்றோர் தொட்டுத் தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து நீடித்து இந்துக்களிடையே நிலவும் சிறந்த வழக்கம். இக்காலத்தே நிகழும் வாணவேடிக்கைகளின் காட்சி கண்ணுக்கினியதொரு விருந்து. இவ்வாறான கேளிக்கைகளில் ஒரு சுகாதார உண்மையும் பொதிந்திருக்கின்றது. தற்காலம் நம் நாடு இருக்கும் கீழான செல்வநிலை நோக்கி மஹாத்மா முதலிய ஆன்றோர் இப்பண்டிகைக் கொண்டாட்டத்தில் விதேசி வெடிகள், மத்தாப்பு முதலியவைகளுக்காக விரையம் செய்யும் கோடிக் கணக்கான ரூபாய்களை மிச்சப்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுவதை நாம் அவசியம் கவனிக்கவேண்டும். விரிக்கிற் பெருகும். நிற்க, தனக்கென இடப்பட்ட இலையில் மாப்பிள்ளை துரைராஜா உட்கார்ந்திருக்கின்றான். கறியமுது வகைகளும், அடிசிலும் பரிமாறப்பட்டுவிட்டன. இச்சமையத்தே, மாமியார்க்காரி விலையுயர் பல்கலனணிந்து, கண்ணைக் கவரும் கலையுடுத்து மாப்பிள்ளையை மூடநெய் (புத்துருக்குநெய்) பெய்து களிப்பிப்பது வழக்கம். அவ்வாறே சந்திரானனாவின் அன்னையும் வருகையில் அவள் அம்புயச் சீரடியில் அணிந்திருந்த பாடகம், மெட்டி முதலியன யாவும் சேர்ந்து ‘சல், சல்’ என்ற இன்பகரமான நாதத்தை எழுப்பின. துரைராஜா வருவது தன் மாமியார் என்று அறியவில்லை. தன்னை அதற்குமுன் முட்டிக்கீழே வீழ்த்திய கன்றுக்குட்டி பின்கழுத்துச் சதங்கைகளின் ஒலிவியே அது எனத்தீர்மானம் செய்துகொண்டான். அது தன்னை ஒருதரம் படுத்திய பாட்டை நினைத்து நிமிர்ந்து பார்க்கவும் மிகவும் அஞ்சினான். அருகில் வந்துவிட்டது. இனி ஓடவோ வழியில்லை. உடனே வெகுண்டு சிறிதும் கவனியாமல் முஷ்டியை மடக்கிக்கொண்டு குத்துக்களைப் பிரயோகித்தான். தாங்கமுடியாது நெய்ப்பாத்திரத்தைக் கீழேகிடத்தி “ஐயோ’ என்று தன் மாமியார் அலறிக்கொண்டு கீழே விழுந்ததுந்தான் அவன் தன் சுயநிலையும், உணர்வும் திரும்பப் பெற்றான். இனி என்செய்வது? கன்றுக்குட்டி என நினைத்து அவன் இவ்வாறு செய்துவிட்டான். உண்மையறிந்த நாம் அவனைக் கோபிக்கக்கூடாது. மனைவியின் கூச்சலைக்கேட்டு

உள்ளேயிருந்த ஸ்ரீநிவாஸாசர் ஓடிவந்தார். மாதாவின் குரலைக் கேட்ட மங்கையும், அவள் தன் அம்பியும் அங்குற்றனர். தெளிவுற்றெழுந்த கோகிலம் மாப்பிள்ளையின் அவ்வெதிர் பாரா நிகழ்வை உரைத்தாள். மாப்பிள்ளையோ ஏதும்பேச வகையில்லாமல் வெட்கி நின்றார். உண்மையான காரணத்தை அவர் வெளியிட நாணினார். "என்னவோ" என்று எண்ணி மாமனாரும் மாமியாரும் காரணங் கேளாதொழிந்தனர். விருந்து யாதொரு தடையுமின்றிப் பின்பு நடந்தேறியது.

* * * * *

மாப்பிள்ளைக்குக் கண்வளர்தற் பொருட்டு வாசம் அறை ஒழித்துவிடப்பட்டு, கட்டில், மெத்தை முதலிய உபகாரணங்கள் உதவப்பட்டன. இரவு சுமார் மணி மூன்றிருக்கலாம். எங்கும் நிசப்தம் நிலவியிருந்தது. குண்டூசி விழுந்த ஓசைகூட நன்றாய்க் கேட்கும். மாப்பிள்ளைக்கு வெளியில்போய் வரவேண்டிய அவசியம் நேரிட்டது. இத்தகைய வேளையில்தான் யாதொரு சங்கடமுமின்றி வெளியில் போய்வர வேண்டுமெனக் கேட்டுக் கொண்டதன் பேரில் அவன் மனைவி வாசல் அறை நாதாங்கியிலிருந்து எல்லோரும் அனந்தல் புரிகையில் ஒரு வைக்கோற் பிரியைக்கட்டி வெளியில் படிவரை கொண்டுபோய் விட்டிருந்தாள். விடியற்காலையில் 5 மணிக்கே எழுந்து அதை அவிழ்த்துவிட வேண்டுமென்று அவள் நினைத்திருந்தாள். எல்லாம் நாம் கோரும் விதம் நடந்துவிடின் தெய்வம் எதற்கு? அப்புறம் உலகமே நிலைத்து நிற்காது. தெய்வ சங்கல்பம் எப்பொழுதும் மனித யத்தனத்தினின்றும் வேருகவே யிருக்கின்றது. "நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கும்" என்ற மேலோர் வாக்கும் பொய்க்குமோ? ஆனாலும், நம் துரைராஜாவையா போய் கடவுள் சோதனைசெய்யவேண்டும். நாம் அக்கேள்வியை உசாவ அதிகாரியல்லம். இதுவே கடைசி சோதனை. வெளியில் போகவேண்டிய அவசியம் நேரிட்ட மாப்பிள்ளை வைக்கோற்புரியைப் பிடித்துக்கொண்டே வெளியில் போய்விட்டார். இவர் நடந்ததால் ஏற்பட்ட ஓசையைக் கேட்ட வாசற்படியருகில் ஜன்னலில் கட்டப்பட்டிருந்த காளைக் கன்று எழுந்து வாசற்படியண்டையில் கிடக்கும் வைக்கோற்புரியை இழுத்து அறத்தெறிந்து அவகாசமாய் ஜன்னலண்டை போய்ப் பட்சிக்க ஆரம்பித்தது. மாப்பிள்ளை எக்கேடு கெட்டுப்போனால் அதற்கு ஆவது என்ன? மிகவும் பொல்லாத கன்றுக்குட்டி! திரும்பித் தன அறையை யடைய மாப்பிள்ளைபாடு திண்டாட்டத்திற்கு வந்துவிட்டது. தனது மாமனார் மாமியாரைக் கடுந்துயிலிலிருந்து எழுப்பவோ மனமில்லை. எப்படியாவது சிரமப்பட்டுச் சென்றுவிடலாம் என்று கருதி சுவரைத் தடவிக்கொண்டே சென்றவன் தன் அறையைத்தாண்டி பத்தடி அப்பால் போய்விட்டான். அதை அவன் கவனிக்க இயலவில்லை. அங்குத் தாளிடாது வெறுமனே சாத்திவைக்கப் பட்டிருந்த அறையின் கதவைத்திறந்து கொண்டு உள்ளேபோய்த் தனக்குப் பின்புறம் முன்போலவே

கதவைத் தாளிடாது வைத்துவிட்டுக் கட்டிலை யணுகினன். அங்கு தன் மாமியார் உறங்குகிறுள் என்றும் அஃது அவள் அறை எனவும் அவனுக்கு எப்படித்தெரியும். அது தன் அறையெனவே அவன நினைவு. கடைசியாக, அவன் கட்டிலின்பேரில் ஏறுகையில் பெண் பாலின் சரீரமொன்று தன்கையில் தட்டுப்படவே திடுக்கிட்டான். கும்மிருட்டு ஒன்றும் சரிவர விளங்கவில்லை. உடனே, "திருடர், திருடர்" என்ற கூச்சல் அவ்வறையினின்றும் எழும்பியது. இது மாப்பிள்ளையை இன்னும் அதிகமாகக் குலைநடுக்க மெய்தச்செய்தது. அவன் அப்படியே கல்லாய்ச் சமைந்து நின்ருன். பின்னர் நிகழ்ந்த ஆரவாரம் வீட்டிலுள்ளோரையேயன்றி அக்கம்பக்கத்தாரையும் அங்கு கூட்டிவிட்டது. திருடருக்குப் பதிலாக மாப்பிள்ளை அசைவற நிற்பதைக் கண்ணுற்று அனைவரும் வியப்புற்றனர். இன்னும் தான் பேசாது வாளாவிருப்பது தனக்குப் பெருத்த அவமானம் விளைவிக்கும் எனக் கருதிய துரைராஜாவின் வாயினின்றும் "நான்மாலையில் புரிந்த அடாத செய்கைக்காக மன்னிப்புப் பெறவேண்டித் தனியே நான் இங்கு எனது மாமியாரடிகளைவணங்கி எழும் நோக்கத்துடன் வந்தேன்" என்ற சொற்கள் கிளம்பின. அன்னியர் யாவரும் சங்கதி யறிந்து சமாதானமுற்றனர். மாமியாரும் மாமனுரும் களிப்பெய்தி னர். தன் கேள்வனது சமயோசித புத்தியையறிந்து சந்திரானனு வும் சஞ்சலந் தவிர்த்துப் பெருவியப்படைந்தாள். தான் விண்ட விடையில் யாவரும் சமாதான முற்றதைத் தெரிந்துகொண்ட துரை ராஜாவும் துயரமொழிந்தான்.

பின்பு கிரமமாய் நடந்தேறிய வேண்டிய தீபாவளி வரிசைக ளெல்லாம் மாப்பிள்ளை துரைராஜாவுக்கு வெகு சிறப்பாய் நடந் தேறின. பண்டிகை கழித்த மறுநாளும் துரைராஜா வேட்டகமே யிருந்தான். அன்று அவன் தன் மாமனுரிடத்துத் தன் தந்தை யளித்த கடிதத்தை ஈந்தான். சங்கதி கண்டு அவர்தம் மனைவியிடம் சொல்ல இருவரும் தங்களுக்கு அது முற்றிலும் சம்மதமானதே என்ற தீர்மானத்திற்கு வந்து அவ்வாறே எழுதிய ஒரு பதில்கடித மும் கொடுத்தனர். காதலர்கள் பிரியவேண்டிய சமயமும் நெருங் கிற்று. துரைராஜா ஊருக்குப் பபணப்பட ஆயத்தமானுன். இரு வர் கண்களும் பிரிவாற்ருது துக்கமேலிட்டால் கலங்கின. ஆனல் அப்பிரிவுகாலம் சிலமாதகாலமே என்று உணர்ந்து அவர்கள் அதை வெளிக்குக்காட்டிக் கொள்ளவில்லை. யாவரிடமும் விடைபெற்றுக் கொண்டு துரைராஜா பிரயாணமாயினுன்.

* * * * *

சில நாட்களில், தைமாதத்தில் ருதுசாந்திக்கான சுபமுகூர்த்தம் ஒன்று நிர்ணயிக்கப்பட்டது.

* * * * *

திரைராஜா திடீரென்று புதுமனிதனுய் மாறிவிட்டான். அவ்விளைஞன் இப்பொழுது கல்லூரிப்படிப்புப் பயனற்றது என விட்டுவிட்டான். சீமை நூற்றுணியை அறவே வெறுத்தொழித்துவிட்டான். கத்தரை ஏராளமாய் உற்பத்திசெய்ய ஒரு கத்தர் கைத்தறித் தொழிற்சாலையைத் தாபித்துப் பெரும் சிறப்புற்றுன். காப்பிக் குடியாகிய பேயும் அவனைவிட் டகன்றுவிட்டது. அவன் தேச கைங்கரியத்தில் ஈடு பட்டுவிட்டான். தெய்வீகமாக, அவன் கண் குறையும் அவனிடமிருந்து விடைபெற்றுச் சென்றுவிட்டது. தைமாத வருகையை அவன் ஆவலோடும் எதிர்பார்த்த வண்ணமிருக்கின்றுன். "எல்லாம் ஈனயாளும் ஈசன் செயல்". "அவனின்றி ஓரணுவும் அசையாது." தெய்வம் நினைத்தால் முடியாத கருமமும் உளவோ? யாவருக்கும் சுகமே நல்குமாறு விமலன் அம்புயப் பாதம் போற்றுவோம். உலகம் இன்பமயமென்று பாடுவோம். சுபம்.

கதையோடு கருத்தையும் உணருங்கள். இவ்வளவே என் அதிகப்பிரசங்கம். "நீரொழியப் பாலுண் குருகிற் றெரிந்து" நன்மை கடைப்பிடிக்க வேண்டுகின்றனன். ஓம் தத் ஸத்.

எத்தனை காதலிகள்?

வேல்ஸ் இளவரசர் இப்போது அமெரிக்காவில் இருக்கின்றுர்; இவருக்கு ஆங்குள்ள கன்னிகைகள் பத்திரிகைகளில் எழுதும் காதற் கடிதங்கள் விநோதமான பொழுது போக்கிற் குரியனவாக இருக்கின்றன; ஒரு பத்திரிகையில் பெரும்பான்மையான பாகமும் இவருக்குப் பெண்கள் கடிதம் எழுதுவதற்காகவே இடம் கொடுத்திருக்கின்றது; அவருக்கு அழகிய பெண்களின் படங்கள் ஏராளமாக வந்து கொண்டிருக்கின்றன; அவருக்கு மனையாட்டியாக வர விரும்பும் ஓர் பெண் "நீர் குதிரையினின்றும் விழுந்தபோதெல்லாம், நானே விழுந்ததுபோல எண்ணிப் பதைத்தேன்" என்று எழுதுகின்றுள். இன்னுமோர் வனிதை "நான் ஓர் சங்கீத மாணவி, எனது உருவப் படம் உமது மனத்தைக் கவராவிடினும் எனது சங்கீத வித்தையால் உமது இதயத்தை இளக்கி விடுவேன்" என்று எழுதுகின்றுள்; புரூக்ளின் என்னும் இடத்திலுள்ள ஓர் பெண் 'உலகத்திலே நேர்த்தியானவர்களும், அழகுள்ளவர்களும், புத்தி சாதுர்ய முள்ளவர்களுமான பெண்கள் நியூயார்க் பட்டினத்திலேயே உண்டு" என்று எழுதுகின்றுள்.

நாடகம் பார்ப்போர்.

லண்டன் பட்டணததில் 90 நாடகசாலைகளும், 600 சங்கீத சபைகளும் இருக்கின்றனவாம். ஒவ்வொரு இரவும் நாலு லக்ஷம் ஜனங்களுக்குக் குறையாமல் அவ்விடங்களுக்குச் செல்லுகின்றுர்களாம்.

பூனைக்குட்டி

ஸ்ரீமதி மா. இராஜாம்பாள் எழுதியது.

என் தம்பி, தெருவில் ஒரு நாள் பூராவும், கவனிப்பாரில்லாமல் கத்திக்கொண்டிருந்த பூனைக்குட்டியை எடுத்துவந்து 'கமலா' என்று பேரிட்டு வளர்த்தினன். 'கமலா! கமலா!' என்று கூப்பிட்டால் அது மெல்ல 'மியா-மியா' என்று ஓடி வந்து மடியில் விழும். மேலெல்லாம் துள்ளித் துள்ளி, முதுகையும் வாலையும் நெளித்துக் கொண்டு விளையாடும். அது பிறந்து ஒரு மாதந்தா னிருக்கும். அவ்வளவு சிறியது ஆனாலும் மிகவும் சுறுசுறுப்புள்ளது.

ஒரு நாள், ஒரு பெரிய தவளை தத்தித்தத்திப் பாய்வதை இப் பூனைக்குட்டி, கண்டு பதுங்கிப் பதுங்கிப் பார்த்துப் பிடிக்கப் பயந்தது. ஒரு வேளை அது தன்னை யமுக்கிவிட்டால் என்ன செய்வது என்ற பயம் போலும்! தம்பி விரட்டினன். குட்டி ஓடிப்போய் விட்டது.

இப்படி அந்தப் பூனைக்குட்டி பண்ணும் திருவிளையாடல் ஒன்றல்ல; இரண்டல்ல. பகலெல்லாம் அடுப்புக்குள் தூங்கிவிட்டு, இராத்திரியில் என்னையும் தம்பியையும் அது தூங்கவே விடுகிறதில்லை. அதன் விளையாட்டைப் பார்த்துக் கொண்டிருந்தாலே போதும்; தூக்கமும் வராது.

இப்படியிருக்கையில், நேற்றுக்காலையில் தம்பி வீட்டில் உட்கார்ந்திருக்கும் போது ஒருவரு மறியாமலிருந்த சமயத்தில் இப் பூனைக்குட்டி மெல்ல புறக்கடை மாதுளை மரத்தடியில் வந்து, குருவிகள் விளையாடுவதைப் பார்த்துக் கொண்டிருந்து, ஒரு சிட்டுக் குருவி, அருகிலிருந்த கிணற்றின் கைபிடிச் சுவரில் உட்காரக்கண்டு எழும்பிப் பாயவே குருவி உள்ளே பறந்துபோய்விட இதுவும் தட்டுத்தடுமாறி கிணற்றினுள் மிக ஆழத்தில் இருந்த நீருள் விழுந்து மூழ்கியிறந்து கிடந்தது. அந்தோ! இளங்குட்டி! விளையாட்டுப் பிள்ளையைப்போல ஆடிக்குதித்துக் களித்திருந்த இது வினை வசப் பட்டுவிட்டது என்பதைத் தண்ணீரிறைக்கச் சென்ற நான் கண்டு சொல்ல என் தம்பி மிகவும் அழுதான். சற்று நேரம் விசனப் பட்டு விட்டுப் பள்ளிக்குப் போய் விட்டான். சாதமும் அவன் சாப்பிட வில்லை. பிறகு அவன் எழுதிக்கொண்டிருந்த இடத்தில் நான் உட்கார்ந்து படிக்கும் போது அந்த புத்தகத்தில் ஒரு துண்டுக் காகிதத்தில் தம்பி என்னவோ எழுதி வைத்திருந்தான். அதைப் படிக்கும் போது :—

லக்ஷ்மி

வெண்பா :—

தானந் தவ மில்லாச் சீவன் தனைப்படைத்து
ஏனோ நீ வீண்பழியை ஏற்பாயே ?—பூனை
என்ன பழி செய்த (து) ? ஏங்கியுலர் என்னிடத்து
இன்ன லுற்(று) இறக்க விட்டாயே !

என்று கடவுளை நினைந்து சங்கடப்பட்டவனாய் அப்பூனைக்குட்டியின் செய்கையையும் பாராட்டி எழுதியிருந்தான் : அவை வருமாறு :—

வெண்பா :

அந்தோ ! கமலம்மா ! ஆ ! பூனைக்குட்டியே நீ
வந்தாய் ; சுகமாய் வளர்ந்தனையே !—சந்தோஷங்
கொண்(டு) ஆடினாய் ! வீதி, குதித்தாய் குறுங்கிணற்றில்
திண்டாடினாயோ ? சிவ !

சற்று முன்பு நான் விரட்டத் தடாலென்று பாய்ந்தோடி
முற்றத்துள் நின்று முருகினையே !—மற்றும்
களித்து விளையாடிக் கணநேரக் கெல்லாம்
ஒளித்தாய் ; எங்குள்ளாய் ! உரை ?

முன்பொருதரம் "ரோஸ்" நாய் இறந்த போது,

(விருத்தம்)

எங்களின் அருமை 'ரோஸீ' ! எப்போதுன் அழகு காண்போம் !
மங்கள நீ சேர்ந் தன்றோ வளம் பல வாய்க்கப் பெற்றோம் ?
இங்கு (உ)ளம் மறவா நீயும் இதினும் மேம்பதம் எய்தற்கோ
திங்களின் நன்னாள் காலை சிவபதம் சேர்ந்திட் டாயே !

என்று அலறினான் !

எதற்கும், "விளையாட்டே வினையானது" அல்லவா ?

சித்திரப் பத்தி



ரொட்டி மாவில் புளித்த கள்ளேச் சேர்க்கிருர்கள்.

ரொட்டிக்கு மாபிசைகிருர்கள். பாருங்கள்! வேர்வை யெல்லாம் அதிலேயே சேருகின்றன.

புலவர் வறுமை.

எண்ணுன்கு முப்பத்தி ரண்டுபெற் காட்டி யிசையுடனே
பண்ணுகச் செந்தமிழ் பாடிவந் தாலுமிப் பாரிலுள்ளோர்
அண்ணுந்து கேட்பர், அழகழ கென்பர் அதன்பிறகு
சுண்ணும்பு பட்டஇலேயும் கொடார் கவிசொன்னவர்க்கே.

முதலியார்: "ஐயா வாள்! ஒரு லோட்டா காபி அருந்துங்களேன்!"

அய்யர்: "என்ன! நான் பிராமணன். சூத்திரன் வீட்டிலா?"

அய்யர்: "ரொட்டி இன்று வெகு பேஷா யிருக்கிறது."

அய்யர் மனைவி: "நன்றாயிருந்தால் இன்னுமொன்று சாப்பிடுங்களேன்."

லோபர் தன்மை.

உண்ணுவிருந்தும் உதவிகொள்ளாத உறவும் பொன்னை
எண்ணுக் கணிகையும் இன்புலவோரும் நல் ஏவலரும்
தண்ணுர் அம்புல் அருந்தாமாவும் காலுண்ணும் சற்குருவும்
கண்ணுரக் காணின் மகிழ்வார்கள் செல்வக் கயவர்களே.

கணிகை=பொதுமகள்; மா=குதிரை; கால்=காற்று.

"Our Secret Foes and Fight for Health."

" நமது அந்தரங்கப் பகைவர்களும் சுகத்திற்குச் சண்டையும்."

ஸ்ரீமாந் ஏ. சோக்கலிங்கம் பிள்ளை யவர்கள் எழுதியது.

(காபி ரைட்)

97-வது பக்கத் தொடர்ச்சி.)



(பெண் கொசுவின் வாய்ப்பாகங்கள்.)

முன்படத்தில் காட்டியுள்ள A B C D என்னும் ஆறு பகுதிகளும் ஒன்றுய்ச் சேர்ந்து கடிக்குந் தொழிலில் சருமத்துக்குள் செல்லுங் கருவியாக ஏற்படுகின்றன. அவ்வாறு ஏற்பட்ட மிக்க கூர்மையான மத்திய ஊசிகள் சருமத்தில் செலுத்தப்படும் அதே சமயத்தில் கோளங்களி லிருந்து (Glands) விஷநீரைப் பாய்ச்சுகின்றது.

ஊசிகள் குத்திய இடத்தினின்றும் இரத்தத்தை இழுக்காவிட்டால் ஊசிகளைப் பிடுங்கிக்கொண்டு மற்றோ ரிடத்தில் திரும்பக் குத்துகின்றது; இரத்தத்தை இழுத் தாலும் இழுக்காவிட்டாலும் கடித்த இடங்களிலிருந்து வீக்கமும் நமைவும் உண்டாவதால் உமிழ்நீரையும் விஷ நீரையும் அந்த இடங்களில் பாய்ச்சியிருக்கின்றது.

கொசுக்களுற்பத்தியாகு மிடங்களை அழித்தல்.

கொசுக்கள் அதிகதூரம் பறப்பதில்லை; ஆனால், சில வேளை உரமான காற்று அதிகதூரங் கொண்டுபோய் விடு கின்றது. சாதாரணமாக அவை முட்டையிட்டுக் குஞ்சு பொரித்திட்ட இடத்திற்குச்சமீபத்திலேயே இருக்கின்றன. மலேரியா சுரத்திற்குக் காரணமான அனோபிலிஸ் (anopheles) முக்கியமாய்ச் சிறிது தூரந்தான் பறக்கும். இக் கொசுக்களுண்டாகும் இடங்களைக் கண்டு பிடிப்பதற்கு நீ தூரமாகப் போகவேண்டியதில்லை. அவற்றை நம் வீட்டைச் சுற்றியே பார்க்கலாம். கொசுக்களைத் தொலைப் பதற்கு அவை உற்பத்தியாகும் இடங்களை அழித்து விடுவதே நாம் செய்யவேண்டிய முதற் காரியமாகும். பள்ளம் படு குழிகளிலுள்ள நீரை இறைத்துவிட்டு அவற்றை மண்ணால் நிரப்பி விடவேண்டும். தண்ணீர் தேங்கியிருக்கும் ஓடை கள், வாய்க்கால்கள் இவற்றைச் சுத்தஞ்செய்து அந்நீரை யிறைத்துவிட வேண்டும். கிணற்று நீரில் கொசுக்கள் முட்டையிடாதபடி அதற்கு மூடிபோட்டுவைத்தல் வேண் டும். பாழ்ங்கிணறுகளை மண்ணால் தூர்த்துவிடல் வேண் டும். மழைநீர் தங்குவதற்கிடமான உடைந்த சட்டிப் பானை ஓடுகள் முதலிய எவ்விதப் பொருள்களையும் பொறுக்கி அப்புறப்படுத்திவிடல் வேண்டும். கொசுக் கள் முட்டைகளிட்டுக் குஞ்சுபொரிக்கக் கூடுமான எவ்வித இடங்களையும் விட்டுவைத்தல் கூடாது. ஒரு பட்டணம் அல்லது ஒரு கிராமம் உலர்ந்த பூமியின்மேல் இல்லாவிட்

டாலும் அல்லது நெற்பயிர் விளையும் நிலங்களுக்குச் சமீபத்திலிருந்தாலும் அப்பட்டணத்தில் அல்லது அக்கிராமத்தில் கொசுக்களில்லாமற் செய்வது மிகக் கடினமாகும்.

குளங் குட்டை வாய்க்கால் முதலியவற்றில் மண் எண்ணெயை யுபயோகித்தல்.

சில சமயம் குளங் குட்டைகளி லுள்ள நீரை இறைத்துவிட முடிகிறதில்லை; ஆகையால், அவற்றில் மண்ணெண்ணெயை விடவேண்டும். சிறிது மண்ணெண்ணெயை விடுவதால் அது நீரின்மேல் பெரும்பாகத்திற்குப் பரவி விடுகிறது. இவ் எண்ணெ நீரின்மேல் படலமாக மூடிக் கொண்டு கொசுக்குஞ்சுகள் மூச்சுவிடுவதற்குக் கூடாமையாய்ச் செய்து விடுகின்றது. கொசுக்குஞ்சுகள் மூச்சு விடுங் குழாய்களை நீரின்மேல் கொண்டு வருதற்கு முடியாமற்போய் இறந்து விடுகின்றன. இவ்வாறு குளங் குட்டைகளின் கரையோரங்களில் மண்ணெண்ணெயை விடுவதால் கொசுக்க ளுற்பத்தியில்லாமற் போய்விடும்.

கோசுப் புழுக்களைக் கண்டு பிடிப்ப தெப்படி.

நீங்கள் கொசுப் புழுக்களைப் பார்க்கவேண்டு மென்று வெளியே போகும்போது உங்களோடு கைப்பிடி வைத்த தகரக்குவளை அல்லது பீங்கான் குவளையொன்றும், சிறிது ஆழ்ந்த தட்டைப் பீங்கானென்றுங் கொண்டு போதல் வேண்டும்.

அனோபிலிஸ் கொசுப் புழுக்களைக் காண்பது மிக்க கடினமானதால், ஒவ்வொரு குளங்குட்டையையும், ஒவ்வொரு நீரோடையையும் விடாமல் சலத்தின் கரையோரங் களிலுள்ள புல் பூண்டுகளினடியில் குனிந்து பார்த்தால் புழுக்களிருப்பது உங்களுக்குத் தெரியும். நீங்கள் உங்கள் கையிலிருக்குங் குவளையை விரைவாகச் சாய்த்துச் சலத்தை மொண்டு தட்டைப் பீங்கானில் ஊற்றிப் புழுக்களைக் கவனிப்பீர்களாயின் அவை யின்னசாதிக் கொசுப்புழுக்களென்பதைத் தெரிந்து கொள்வீர்கள்.

நீங்கள் தண்ணீரில் பார்ப்பது அனோபிலிஸ் கொசுப் புழு வாயிருக்குமாயின் அது க்யூலெக்ஸ் (culex) கொசுப் புழுப் போலத்தலைகீழாய்த் தொங்கி மிதக்காமல் நீர் மட்டத்தின் மேல் தட்டையாய்ப்படுத்து மிதக்கும்.



அனோபிலிஸ் புழு நீர்மட்டத்தின் மேலிருக்கும் நிலைமை.

அதன் உடம்பின் மேற் பாகத்திலுள்ள துவாரத்தின் மூலமாய்ச் சுவாசிக்கும். நீரில் புழுவைச் சிறிது கலைத்தால் எற்றி எற்றிப் பின்னேக்காய்ச் செல்லும் அல்லது நீர்க்குள் போய்விடும். க்யூலெக்ஸ் புழுக்கள் சுத்தமான அல்லது எவ்வித அசுத்தமான தண்ணீரிலும் சீவிக்கின்றன போலல்லாமல், அனோபிலஸ் புழுக்கள் முக்கியமாகச் சுத்தமான தண்ணீரை அபேக்ஷிக்கின்றன. அதனினும் பசும்பூண்டுகள் முளைத்திருக்கும் தண்ணீரே அவற்றிற்குச் சிலாக்கியமாம்.

கடலிலுள்ள உப்பின் நிர்ணயம்.

சமுத்திரம் ஆரம்பத்தில் இறங்கிப்போன நீராவியாலேயே ஆயிருக்கவேண்டுமென்றும், அதன் நீர் பரிசுத்தமாயும் இனிமையாயுமிருந்திருக்க வேண்டுமென்றும் சாஸ்திரக்காரர்கள் யூகிக்கின்றனர் என்றாலும், உஷ்ண மண்டலங்களில் சமுத்திரம் மிக உப்புக்கரிப்பதும், துருவ மண்டலங்களில் சற்று குறைவாகவே உப்புக்கரிப்பதும் அதிசயமான விஷயந்தான். சாஸ்திரக்காரர்கள் சமுத்திரம் உப்புகரிப்பதற்கு அதில் விழும் நதிகளே காரணமென்கிறார்கள். அவைகள் வருஷாவருஷம் 10 கோடி டன் உப்புக்கரிக்கும் பொருள்களை சமுத்திரத்தில் கொண்டு சேர்ப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. இதன்றி சமுத்திரம் தன்னடியிலே 14,000 கோடி டன் உப்பைத் தேக்கி வைத்துக் கொண்டிருப்பதாகவும். இந்த உப்பைக்கொண்டு 400 அடி உயரத்துக்கு பூமி முழுதும் பரப்பி விடலாமென்றும் கணக்கிட்டிருக்கிறார்கள். இத்தகைய நிலைமையை அடைவதற்கு சமுத்திரத்திற்கு 9 கோடி வருஷங்கள் பிடித்திருக்கின்றன என்று நம்புகிறார்கள்.

ராணி மீனாக்ஷி

(பழைய சரித்திரம் ஆராய்வோன்.)

மதுரை நாயக்கர் ராஜவம்சத்தரசர்களில் ! ராணி மீனாக்ஷியும் ஒருவராவர். இவர் ஐந்து வருஷகாலம் ராஜ்யபாரம் செலுத்தினார். இவர் 1731-ம் வருஷத்தில் பட்டத்துக்கு வந்தார். தமது கணவன் சொக்கநாதன் எழுதி வைத்துச் சென்ற உயில்படி, ராஜ வம்சத்தைச் சேர்ந்த வங்காரு திருமலையின் மகனை ஸ்வீகாரம் செய்துகொண்டார் தமது ஸஹோதரன் வெங்கடராய பெருமாள் நாயக்கன் மூலமாய் அரசாட்சி செலுத்திவந்தார்.

இப்படி அரசாட்சி செய்து வரும்நாளில், மீனாக்ஷிக்கு விரோதமாக ராஜ்யத்தில் ஒரு கட்சி யேற்பட்டது. இக்கட்சிக்குத் தலைவர் தளவாய் வெங்கடராயாசாரியார் என்பவர். மீனாக்ஷியை பட்டத்தினின்றும் நீக்கி வங்காரு திருமலையைப் பட்டதில் வைக்கவேண்டுமென்பது இக்கட்சிக்காரர்களின் கொள்கையாகும். ராணி திருச்சிராப்பள்ளிக் கோட்டையிலிருக்கையில் திருமலையின் கட்சிக்காரர்கள் அவளறியு முன்னர் கோட்டைக்குள், பலாத்காரமாய் புகுந்து விட்டார்கள். இவ்விஷயம் தெரிந்தபிறகு திருமலையையும் அவன் கட்சிக்காரரையும் தோற்கடித்துத் துரத்தி விட்டார்கள்.

அக்காலத்தில் ஆற்காடு ராஜ்யத்தை நவாப் தோஸ்த் ஆலிகான் அரசாண்டு கொண்டிருந்தான். அவன் தக்ஷிணதேச முழுவதையும் தன் ஆட்சிக் குட்படுத்திக் கொள்ளவேண்டுமென்ற பேராசை கொண்டவன். அவன் அதற்காக தன் மூத்த மகனை ஸதர் ஆலிகானையும், தன் மாப்பிள்ளையும் மந்திரியுமான சந்தா ஸாகிபையும் தக்க சேனையுடன் அனுப்பினான். மகம்மதியர்கள் தஞ்சையைப் பிடித்துக்கொண்டார்கள். ஆனால், திருச்சிராபள்ளியைப் பிடிக்க முடியவில்லை. ஆயினும், தெற்கே திருவாங்கூர் வரைச் சென்று ஊர்களையும் பட்டணங்களையும் நாசஞ் செய்துவிட்டுத் தக்க கொள்ளைப் பொருளுடன் திரும்பி வந்தார்கள்.

1734-ம் ஆு வங்காரு திருமலை, ஸதர் ஆலிகானுடன், ஒரு ரஹஸ்ய ஒப்பந்தம் செய்து கொண்டான். துருக்கர் தலைவன் மீனாக்ஷியைப் பட்டத்தினின்றும் விலக்கித் தனக்குப் பட்டங்கட்டினால், அதற்கு ப்ரதி ப்ரயோசனமாய்த் 30 லட்சம் ரூபா கொடுப்பதாய் ஒப்பந்தம் செய்யப்பட்டது. ஸதர் ஆலிகான் ஒரு யுக்தி செய்தான். மதுரை அரசாட்சியைப் பற்றித் திருமலைக்கும் மீனாக்ஷிக்கும் ஏற்பட்ட விவாதத்தைத் தீர்த்து வைக்கத் தான் வந்திருப்பதாகவும் அதில் இருதரப்பிலும் ஸாக்ஷ்யம் சொல்லக் கூடியவர்கள் தன் முன்

ஆஜராகும்படியாகவும் பறையடிக்கச் செய்தான். இதையொன்றும் கவனியாது மீனாக்ஷி அலக்ஷ்யமாயிருந்து விட்டாள். பேருக்கு ஒரு விசாரணை மாதிரி செய்து விட்டு எதிர் பார்த்தவண்ணமே திருமலைக்கு அநுகூலமாய்த் தீர்ப்புச்சொல்லி விட்டான். ஒப்பந்தப்படி திருமலைக்குப் பட்டங்கட்டி விட்டு 30 லக்ஷ ரூபாவை வாங்கி வரும்படி சந்தாஸாஹிபை நிறுத்திவிட்டு ஸதர் ஆலிகான் ஆற்காடு போய்ச் சேர்ந்தான்.

காரியம் மிஞ்சி விட்டதென்று பயந்து மீனாக்ஷி சந்தாஸாஹிபுடன் ஓர் ரஹஸ்ய ஒப்பந்தம் செய்தாள். மீனாக்ஷி கோடி ரூபாய் கொடுத்து விடுகிறது என்றும், அதைப் பெற்றுக்கொண்டு சந்தா ஸாஹிப் ஒன்றும் செய்யாமற்போய் விடுகிறதென்றும் ஒப்பந்தம் செய்யப்பட்டது. வஞ்சனை மிகுந்த சந்தா ஸஹிப் அதற்கிணங்கினான். ஆயினும், மீனாக்ஷி ஸந்தேஹங் கொண்டு அவனைக் கோரான் மேல் ப்ரமாணம் செய்யச் சொன்னார். அங்ஙனமே காவேரிக்கரையிலுள்ள தளவாய் மண்டபத்திற் சந்தஸாஹிப் ஸத்யம் செய்து கொடுத்தான். ப்ரமாணம் தன்னைக் கட்டுப் படுத்தாமலிருக்கும் பொருட்டு ஒரு செங்கல்லைப் பட்டுத் துணியாற் சுற்றி அதன் மேல் ப்ரமாணம் செய்து ஏமாற்றி விட்டதாகவும் சொல்லுவதுண்டு.

சந்தாஸாஹிப் கோட்டைக்குள் விடப்பட்டான். கோட்டையும், அதிலுள்ள யானை குதிரைகளும், கஜானாக்களும் கைவசமானதும், தன் அந்தரங்கமான கபட எண்ணத்தை வெளியிட்டான். தான் சொந்தம் பாராட்ட வந்தவனேயொழிய மீனாக்ஷியையாவது திருமலையையாவது காப்பாற்ற வந்தவனல்லவென்று தெரிவித்து விடவே திருமலையும் அவன் மகனும் மதுரைக்கு ஓடி விட்டார்கள். பாவம்! ராணி மீனாக்ஷி கோட்டைக்குள் அகப்பட்டுக்கொண்டாள். மீனாக்ஷியின் அரண்மனையைக் காக்கத் தக்க சேனையை நிறுத்தி விட்டு, மிகுந்த சேனையுடன் சந்தாஸாஹிப் மதுரை நோக்கிப் புறப்பட்டான். மதுரையிலிருந்து ராணி கட்சியைச் சேர்ந்த கோவிந்தையர், ராவணையர் என்ற இரண்டு ஸேனாபதிகள் 8000 குதிரைப் படையுடன் திண்டுக்கற் பக்கத்தில் துருக்கர் படையை எதிர்த்துத் தோற்றுப் போனார்கள். துருக்கர் மதுரை நோக்கி வரவே திருமலையின் இன்னொருபடை, அவர்களை அம்மபநாயக்கனூரில் எதிர்த்து வீராவேசத்துடன் போர்புரிந்தும் கடைசியில் தோற்றுப் போயிற்று. சந்தாஸாஹிப் மதுரை வந்து சேர்ந்தான். திருமலை நகரை விட்டுத் தப்பி ஓடிச் சிவகங்கைபோய்ச் சேர்ந்து விட்டான். மதுரைத் தேச முழுதும் மஹமதியர் வசமாகி விட்டது. மீனாக்ஷி உயிருடன் இருக்கும் வரை யாராவது கலகஞ் செய்து கொண்டே யிருப்பார்களென்றெண்ணி, சந்தாஸாஹிப் மீனாக்ஷியைக் கொலைசெய்ய உத்தேசித்தான். இது விஷயம் தெரிந்து அவன் கையாற் சாகும் வரை காத்திராமல், மீனாக்ஷி தாமே விஷம் உண்டு இறந்தாள்.

(ஸமரஸ போதினி.)

நூல் சந்தாவிற்கு ஆட்சேபம்

மகாத்மா வியப்புறுகிறார்.

'யங் இந்தியாவில்' நூல் சந்தா என்ற தலைப்புடன் மகாத்மா எழுதியுள்ள ஒரு குறிப்பு வருமாறு :—

'வலுக்கட்டாயமின்றித் தியாகபுத்தியுடன் நூல் நூற்றலுக்கு ஆட்சேபம் இல்லை ; ஆனால் நூல் நூற்பவர்களுக்குத்தான் காங்கிரஸ் வாக்குரிமையென்றால் அது பெரிதும் மனக்கசப்புக்கிடமான விஷயம்' என்பதுதான் நூல் சந்தாவை ஆட்சேபிப்போரின் வாதம். இந்த ஆட்சேபத்தைக் கேட்டு நான் மிகுந்த வியப்புற்றேன் என்பதை ஒப்புக்கொள்கிறேன். நூல் நூற்றலுக்கு ஆட்சேபமில்லை, ஆனால் நிர்ப்பந்தத்திற்குத்தான் ஆட்சேபம் என்று கூறப்படுகிறது. ஆனால் இவ்வாதம் பொருத்தமானதா? பணச்சந்தா ஏற்படுத்துவதும் ஒரு நிர்ப்பந்தமே யல்லவா? பணச்சந்தா நிபந்தனை நியாயமேயானால் நூல் சந்தா ஏன் நியாயமாகாது? கையினால் வேலை செய்வதைவிடப் பணங்கொடுப்பதில் அதிக கௌரவம் உண்டா? மதுவிலக்குச் சங்கத்தின் அங்கத்தினர் மதுபானம் செய்யக்கூடாதென்றால் அது கசப்பான விஷயமா? கப்பற்படைச் சங்கமொன்றின் அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் கப்பற்றொழிலைப் பற்றிச் சில விஷயங்கள் தெரிந்திருக்க வேண்டுமென்றால் அந்நிர்ப்பந்தத்தை வெறுத்தல் சரியா? பிரான்ஸு தேசத்தில் இராணுவபலம் தேசீய வாழ்வுக்கு இன்றியமையாத தென்று கருதப்படுகிறது. அந்நாட்டின் குடிகளுக்கு ஆயுதப்பயிற்சி இருக்கவேண்டுமெனில் அந்நியந்தனையை அந்நாட்டார் அருவருப்பார்களா? மேற் சொன்ன விஷயங்களில் நிபந்தனைகள் அருவருக்கப்படவில்லை யெனில், இந்தியாவில் மட்டும் நூல் சந்தா நிபந்தனை நமக்கேன் கசப்பாய்த் தோன்ற வேண்டும்? நூல் நூற்றலும், கதரணிதலும் நம் தேசீய வாழ்விற்கு இன்றியமையாத தன்றோ? நூற்கும் தொழிலை ஜனங்களிடையே பரப்புதற்கு நூல் சந்தா ஏற்பாடு சிறந்த வழியன்றோ?

சிரத்தானந்தரின் குருகுலம்.

மகாத்மா எழுதியுள்ள மூன்றாவது குறிப்பு பின்வருமாறு :—

இவ்வாண்டில் நாடெங்கும் வெள்ளத்தினால் பெருஞ்சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. சுவாமி சிரத்தானந்தரின் பொறுமைக்கும், தன்னலத்தியாகத்துக்கும் ஒரு சின்னமாக விளங்கிய குருகுலமும் வெள்ளத்தின் கொடுமைக்காளாகி விட்டது. அவருக்கும், குருகுலத்தின் ஆசிரியர், மாணவர்களுக்கும் என் மனமார்ந்த அநுதாபத்தைத் தெரிவிக்கிறேன். நிதிக்காக அவர் விடுத்திருக்கும் வேண்டுகோள் விரைவில் பலனளிக்குமென நம்புகிறேன்.

தமிழ் குரு குலம்

(டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்கள் எழுதியது.)

திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள சேர்மாதேவியில் பாரத்து வாஜ ஆசிரமத்தின் தலைவரான ஸ்ரீமான் வ. வெ. சுப்பிரமணிய அய்யர் மேற்படி குரு குலத்தை நடத்தி வருகிறார். லௌகிகக் கல்வியும், கைத்தொழிலும், வியாபார முறைகளும், ஒழுக்கமும், ஆத்யாத்ம உணர்ச்சியும் தமிழ் மக்களுக்குக் கற்பித்துக் கொடுக்கப்பட வேண்டு மென்பதே ஸ்ரீமாந் அய்யரின் முக்கிய நோக்கமாகும். ஸ்ரீமாந் அய்யர் சிறந்த தேச பக்தர்; நாட்டிற்காக அரிய தியாகங்கள் செய்தவர். சத்தியவான்; தேசத்திற்காக அவர் பட்ட கஷ்ட நஷ்டங்கள் கொஞ்சமல்ல. நான் போற்றிவரும் தேசியவாதிகளில் ஸ்ரீமாந் அய்யரும் ஒருவராவர். மேற்படி குரு குலத்தை ஆரம்பிக்கும் சமயத்தில் ஸ்ரீமாந் அய்யர் அதற்காகப் பொருள் திரட்டிய போது, வருஷந்தோறும் நூறு ரூபா கொடுத்தேன். தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியாரும் குரு குலத்திற்காக ரூபாய் 5000 கொடுத்துதவினார்கள். ஸ்ரீமாந் அய்யரிடத்தில் எனக்குள்ள பக்தியும், மரியாதையும் ஒருபோதும் குறையப் போவதில்லை. ஆனால் தமிழ் குருகுலத்திற்கு மூல புருஷராய் அவர் இருந்த போதிலும், அது தமிழ் நாட்டின் பொதுச் சொத்தாகையால் அதை சகலருக்கும் பொதுவான நோக்கத்தோடேயே நாம் பார்க்கவேண்டும். ஸ்ரீமாந் அய்யருக்காக நாம் எதுவும் நல்லதோ கெட்டதோ செய்துவிடக் கூடாது. ஆகவே தமிழ் நாட்டில் ஏற்படுத்தப் பட்டிருக்கும் குரு குலம் தமிழ் நாட்டிற்கு என்னென்ன நன்மைகளைச் செய்ய உத்தேசித்திருக்கிற தென்பதை நாம் கவனிக்க வேண்டும். மேலே நான் குறிப்பிட்டிருக்கிற வித்தைகளை அது போதிக்க உத்தேசித்திருக்கிற படியால் அவை மிகவும் உத்தம மானவைதான். ஆனால் மூலமான அம்சம் இன்னொன்று இருக்கிறது. அதுதான் பிராமண பிராமண ரல்லாதார் விஷயம். ஜாதி வித்தியாசத்தைப் பாராட்டாத குரு குலத்தினால் தான் ஏதாவது நமது தேசத்திற்கு நன்மை செய்ய முடியும். அதுதான் நமக்குத் தேவை. இந்த வித்தியாசம் தமிழ் குருகுலத்திலிருந்து வருகிறது. ஆகவே இந்த வித்தியாசம் இருக்கும் வரை இக் குரு குலம் தமிழ் நாட்டிலுள்ள பிராமண ரல்லாதாரை இழிவுபடுத்திக் காண்பித்துக் கொண்டிருக்கும் ஒரு ஞாபகக் குறி என்று நான் கூறவேண்டி யிருப்பதற்காக மிகவும் வருந்துகிறேன். அங்கே பிராமணரும் பிராமண ரல்லாதாரும் வித்தியாசத்துடனேயே நடத்தப் படுகிறார்கள். சாப்பாட்டில், சகல வகுப்புகளையும் சேர்ந்த பிராமணர் ஒரு பக்கமாகவும், சகல வகுப்புகளையும் சேர்ந்த பிராமணரல்லாதவர் ஒரு பக்கமு மாகவே இருந்து சாப்பிட வேண்டும். இதை நான் நேரில் அறிவேன். குரு குலத்தில் இம்மா

210343

திரி வித்தியாசம் கூடாது. என்று நான் சொன்னேன். ஆனால் இந்த வேற்றுமையை ஒழிக்க முடியா தென்று அவர் கூறினார். இதைக் கேட்டதும் நானும் ஸ்ரீமாந். ஈ. வி. ராமசாமி நாயக்கர் போன்ற பிராமணரல்லாதாரும் திடுக்கிட்டுப் போனோம். இதைத் தெரிந்தும் காங்கிரஸிலிருந்து மறுபடியும் ரூபா 5000 கொடுக்க விருந்ததை நிறுத்தி விட்டோம். நானும் ரூபா கொடுப்பதை நிறுத்தி விட்டேன். இது சென்ற வருஷம் நடந்த சங்கதி. ஆனால் இதைப் பற்றி இதுவரை "தமிழ் நாட்டி"ல் நான் குறிப்பிட வில்லை. வித்தியாசம் ஒழிந்து போகுமென்று எண்ணியிருந்தேன். சமீபத்தில் மலாய் நாட்டிலிருந்து ஸ்ரீமாந் சமரபுரி என்ற நண்பர் எனக்கு ஒரு கடித மெழுதி யிருக்கிறார். அதில் ஸ்ரீ மகாதேவய்யர் அங்கே குரு குலத்திற்காக ரூபா 20-ஆயிரம் வரை வசூல் செய்திருப்பதாகவும், இன்னும் 2-ஆயிரம் ரூபா வரைக் கொடுப்பதாக ஜனங்கள் வாக்குக் கொடுத்திருப்ப தாகவும், ரூபா கொடுத்திருப்பவர்களில் பெரும்பான்மையோர் பிராமணரல்லாதா ரென்றும், ஆகவே, குரு குலத்தில் பிராமண—பிராமணரல்லாதார் வித்தியாசமில்லாமலிருக்கிறதா வென்றும், ஸ்ரீமாந் மகாதேவய்யர் அம்மாதிரி வித்தியாசம் கிடையாதென்று சொன்னதாகவும், எல்லா விஷயங்களையும் தெரிவிக்க வேண்டுமென்றும் எழுதியிருக்கிறார். ஆகவே பிராமணரல்லாதாரின் வேண்டுகோளுக் கிணங்கி உண்மையைத் தெரிவிக்க வேண்டுமென்பதற்காகவே இவ்வாரம் குருகுலத்தைப் பற்றி எழுத நேரிட்டது. நான் மறுபடியும் விசாரித்ததில் அவ் வித்தியாசம் ஒழிய வில்லை யென்பதை அறிந்து மிகவும் விசனிக்கிறேன். சமத்துவம் வேண்டுமென்று நாடெங்கும் கிளர்ச்சி நடந்து வருகிறது. வைக்கத்தைத் தமிழர்கள் மறந்துவிட முடியாது. பிராமணர் பிராமணரல்லாதாரென்ற வேற்றுமையும், சச்சரவுமில்லாமல் எல்லோரும் கூடி வாழவேண்டுமென்று உழைத்து வருபவர்களில் நானும் ஒருவன். ஆகவே, தொட்டில் பழக்கம் சுடுகாடுமட்டும், என்பதுபோல் சிறு பிள்ளைகளுக்கு ஆரம்பத்திலேயே உயர்வு தாழ்வு கற்பிப்பதால் இன்னும் பல தலைமுறைகளுக்கு வேற்றுமைப் புத்தியை வளர்த்து வரும்படி செய்யக்கூடியதா யிருக்கும். சேர்மாதேவி தமிழ் குரு குலத்திற்குப் பொருள் உதவி செய்வது தேசீய பாவமென்று நான் கருதுகிறேன். இந்தியாவில் தற்சமயம் மூன்று உயர்ந்த குரு குலங்கள் இருக்கின்றன. சத்தியாக்ரக ஆச்ரமம், காங்கிரி குரு குலம், சாந்தி நிகேதனம் ஆகியவைகளே. மகாத்மாவால் நடத்தப் பட்டு வரும் சத்தியாக்கிரக ஆச்ரமத்திலாவது, அன்னிய நாட்டாரெல்லாம் கூட, பிரிட்டிஷ் பிரதம மந்திரி மாக்டொனால்ட் கூட புகழ்ந்துரைக்கும், சுவாமி சிரத்தானந்தரால் ஸ்தாபிக்கப்பட்ட காங்கிரி குரு குலத்திலாவது, உலகத்திற்கே சர்வகலாசாலையாக விளங்கும் ரவீந்த்ர நாதரின் சாந்தி நிகேதனத்திலாவது பிராமண பிராமணல்லாதார் வித்தியாசம் கிடையாது. இவர்களைத்தான் இந்தியாவை உஜ்ஜீவிக்க வந்த குருகுலங்கள் என்று சொல்லலாம். ஆகவே

தேசத்தில் சமத்துவமும், சகோதரத்துவமும், ஓங்கி வளர வேண்டு மென்று ஆவல்கொண்ட எந்தப் பிராமண பிராமணரல்லாதாரும் தமிழ் குருகுலத்தை ஆதரிப்பது சாத்தியமில்லாம லிருக்கிறது. சம பந்தி போஜனம், சமமான கல்வி முதலியவை கொடுத்து சம திருஷ்டியுடன் நடத்தத் தயாராக விருப்பதாக ஸ்ரீமாந் அய்யர் அவர்கள் அறிவித்தாலன்றி, இந்தகுரு குலத்திற்குப் பொருள் உதவி செய்யக் கூடாதென்று பிராமணரல்லாதாரைக் கேட்டுக்கொள்ளு கிறேன்.

(தமிழ் நாடு)

மதிப்புரை

பாலபாரதி :—இது சேரமாதேவி தமிழ் குருகுலத்தினின்றும் வெளிவரும் ஒருமாதப் பத்திரிகை. இதன் ஆசிரியர் ஸ்ரீமாந் வ. வெ. சுப்ரமண்யய்யர். திருக்குறளின் ஆங்கில மொழி பெயர்ப்பாளரும், சிறந்த தேசபக்தரும், ஒப்பற்ற தியாகியுமான அய்யரவர்களைத் தமி ழுலகம் நன்கறியும். 'பாரதி'யின் முதற் பகுதியிலேயே ஒரு உத்தம பத்திரிகைக்கு வேண்டிய இலக்கணங்க ளெல்லாம் நன்கமைந்துள் ளன. எனினும் 'பாரதி' யின் தமிழ் நடையைப்பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்லவேண்டியது நம் கடமையாகின்றது.

ஸம்ஸ்கிருதக் கலப்பின்றித் தமிழ் எழுதவேண்டும் என்ற பிடி வாதம் நமக்கில்லை. நமது கருத்துக்களைத் திறம்பட விளக்கத் தமிழ்ச் சொற்களுக்கு ஆற்றலில்லாக்கால் வடமொழிச் சொற்களை யோ பிறமொழிச்சொற்களையோ வழங்கலாமென்பதே எமது துணிபு. ஆன்றோரும் இம்முறையையே கையாண்டு வந்துள்ளனர். இதற்கு மாறாக வரையறை யின்றி வடமொழிச் சொற்களைத் தமிழிற் புகுத்து வது ஒருவகைப் பாஷைக் கொலையே யாகும். 'பாரதி' முதற் பகுதி யில் வெளிவந்துள்ள கட்டுரைகளில் பலவும் மணிப்ரவாள நடையி லமைந்திருப்பது தமிழர் மனதில் எத்தகைய உணர்ச்சியை உண்டு பண்ணுமோ அறியோம். "தனது இணையற்ற பேராற்றல் குலைந்து போயிருக்கிற தமிழுக்கு அதன் இயற்கையான முதன்மை ஸ்தானத் தைத் தர" ஸ்தாபனம் பெற்றிருக்கும் தமிழ் குரு குலத்திலிருந்து வெளிவரும் 'பாரதி'யின் தமிழ்நடை மணிப்ரவாள முறையைத் தழுவியிருக்கும் வரை, தமிழ் "அதன் இயற்கையான முதன்மை ஸ்தானத்தை"ப் பெறுமோ என்று ஐயுறுகின்றோம்.

மற்றும், கம்பன் பாடினான் ; வால்மீகி பாடினான் ; வள்ளுவன் பாடினான் என நமது பண்டைப்புலவர்களின் பெயர்களோடு ஒருமை

வினைமுற்றை இணைப்பதில் ஐயரவர்கள் அதிகப் பற்றுடையவர்களாகக் காணப்படுகிறார்கள். ஆங்கில வழக்குக்கு இது பொருத்தமாக இருக்கலாம். The hay smells sweat (வைக்கோல் நறுமணம் கமழுகின்றது) எனக்கூறும் ஒரு ஜாதியின் பாவனையை நாம் கண்மூடித்தனமாய்க் கைக்கொள்ளுவது ஒருபொழுதும் போற்றத்தக்கதன்று. ஒருமை, பன்மை, உயர்வுப் பன்மை என எண்களை மூன்றாக வகுத்த இந்தியர்கள் மிக நுட்பமான உணர்ச்சியுடையவர்கள். திருவள்ளுவ நாயனார் அருளிச்செய்த குறள், கம்பநாட்டாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய ராமாயணம் என்பன வாதிய சொற்றொடர்களைக் கேட்டுக்கேட்டு தழும்பேற்ற தமிழர் செவிகளுக்கு,கம்பன் பாடினான், வள்ளுவன் பாடினான் என்பனபோன்ற ஒருமை வழக்குகள் ஒருபொழுதும் இன்பம் பயவா. ஆகவே இவ்விரு விஷயங்களையும் ஸ்ரீமாந் ஐயரவர்கள் கவனிக்குமாறு வேண்டுகிறோம். 'பாலபாரதி' வருஷச் சந்தா ரூ. 5. வேண்டுவோர் 'காரியஸ்தர், பாலபாரதி, சேரமாதேவி' என்ற விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

இஸ்லாம் :—இது தாருல் இஸ்லாம் ஆசிரியர் ஸ்ரீமாந் பா தாவுத்ஷா அவர்கள் B.A., எழுதிய ஒரு அழகுறு நூல், "அறபிக் கலையில் அனுபவமில்லாத இத்தமிழ்நாட்டு முஸ்லிம்களுக்கும் இதரமத சகோதரர்களுக்கும் உதவிபுரியும் பொருட்டு இந்நூல் இயற்றப்பட்டுள்ளது. தொழுகையின் பல வேறு விதமான நிலைமைகளையும் இருக்கைகளையும் எல்லோருக்கும் எளிதில் விளக்குவான் வேண்டி இந்நூலில் 10 சித்திரப்படங்களும் பொறிக்கப்பட்டிருக்கின்றன. மனப்பாங்கு விசாலமடைய வேண்டுமானால் ஒவ்வொருவரும் பலமத நூல்களை கற்றுத் தெளிதல்வேண்டும். நமது நாட்டிலேயே பிறந்து நமது நாட்டிலேயே வளர்ந்து நமது சுகதுக்கங்களில் பங்கு கொண்டு. நம்முடன் வாழும் நம் முஸ்லிம் சகோதரர்களின் சமயத்தைப்பற்றி நாம் அறிந்திருக்க வேண்டுவது எவ்வளவு அவசியம்! இந்நூலின் தமிழ்நடை எளிதாயும் இனிதாயும் அழகாயும் இருக்கின்றது. ஆகவே ஒவ்வொரு தமிழனும் இந்நூலில் ஒவ்வொரு பிரதிவாங்கிப் படித்துப் பயனடையுமாறு வேண்டுகின்றோம். அழகிய கட்டி 'பைண்டு'டன் 148—பக்கம்கொண்ட இந்நூலுக்கு விலை அணா பதினான்கே—தபாற் செலவு வேறு. வேண்டுவோர் 'தாருல் இஸ்லாம் ஆபீஸ், தபாற்பெட்டி 15, சென்னை' என்ற விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

கோழி வளர்த்தல்

ஓர் அனுபவ முதிர்ந்த வியாபாரி பின்வருமாறு அறிவிக்கிறார் :—

இந்தியாவின் ஜனத்தொகை உயர்ந்துவருவது மாதிரியே அவர்களுக்கு வேண்டிய உணவுப்பொருளின் விலையும் உயர்ந்து கொண்டு வருகின்றது. ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கைக்கு வேண்டிய தினசரி உணவுப் பொருளைச் சேகரித்துக் கொள்வதிலும் பிறருக்கு உணவுப்பொருள் சம்பாதித்துக் கொடுப்பதிலும் ஊக்கமுள்ளவர்களாயிருக்கிறார்கள். ஆகவே பிழைப்பின்றித் தவிக்கும் ஒவ்வொருவரும் சொற்ப முதலைக்கொண்டு வெகு சுலபமாகப் பிழைக்கும் வழியை சம்பாதித்துக் கொள்ளலாம்.

இவைகளை வளர்ப்பதற்கு முதல் முதலாக வேண்டியது ஒரு விசாலமான இடந்தான். அது ஸாதாரணமாகக் கிடைக்கும். திறந்த வெளியாயிருந்தாலும் பாதகமில்லை. முதல் 1000 கோழிகள் வரை வளர்ப்பதாக வைத்துக்கொள்வோம். இவைகள் வெளியே போகாதபடி வேலி போட்டுப் பந்தோபஸ்து செய்யவேண்டும். இந்த மைதானத்தில் ஒரு பாகத்தைத் தடுத்துக் கொட்டகை போட்டு கோழிகள் இரவில் நித்திரை செய்ய ஏற்பாடு செய்யவேண்டும். ஒரு சிறிய முதலாளி இவ்வேற்பாடுகளைச் செய்த பிறகு அவன் சேவல்களும் பெட்டைக்கோழிகளும் வாங்குவதற்குப் பக்கத்துக் கிராமங்களுக்குத் தினம் சென்று வரவேண்டும். அவன் முட்டையிடக்கூடிய பெட்டைக்கோழிகள் ஒவ்வொன்றும் 12 அணுவாகவும், அதேமாதிரி சேவல்கள் ஒவ்வொன்றும் ஒரு ரூபாயாகவும் வாங்கலாம். இதற்குக் கணக்குப் பார்ப்போம். இத்தொழிலில் வரும்படி வருஷா வருஷம் நூற்றுக்கு நூறு ரூபாய் கிடைக்கும்.

		ரூ.	அ.	ப.
100 பெட்டைக் கோழிகள் ஒவ்வொன்றும் முக்கால் ரூபாயாக	...	75	0	0
20 சேவல்கள் ஒவ்வொன்றும் ஒரு ரூபாயாக	...	20	0	0
இதரச் செலவுகள்	...	5	0	0
ஆக ரூபா	...	100	0	0

எல்லா பெட்டைக்கோழிகளும் முட்டையிட்டவுடன் முட்டைகளை அடைகாக்க விட்டு விடவேண்டும். நூறு கோழிகளும் ஒவ்வொன்றும் 10 முட்டைகள் அடைக்காக்கும். இதன்படி உரியவன் ஒரு மாதத்தில் 1000 கோழிக்குஞ்சுகளுக்குச் சொந்தக்காரனாகிறான். கோழிக்குஞ்சுகள் 6 மாத காலத்தில் சம்பூர்ணமாக வளர்ந்துவிடும். ஆறுமாதத்து முடிவில் சொந்தக்காரனிடம் 1120 கோழிகளிருக்கும்.

இந்த ஆறு மாதத்திற்கு மொத்தச் செலவைப்பார்ப்போம்.

1. கோழிகள்வசிக்கும் இடத்திற்கு நகரமாயிருந்தால் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 10 வாடகையாகக் கொடுக்கலாம், கிராமமாயிருந்தால் வாடகை அவ்வளவிராது	60	0	0
2. வேலி போடுவதற்கும், கோழிக்கூடுகள் செய்வதற்கும் மொத்த செலவு	40	0	0
3. கோழிகளின் விலையும் இதரச் செலவுகளும்...	100	0	0
4. மாதம் ஒன்றுக்கு 5 ரூபாயாக ஆறு மாதத்திற்கு ஆகாரச் செலவு மொத்தம்	30	0	0
ஆக மொத்தம் ...	230	0	0

இப்பொழுது அவன் 1000 கோழிகளை விற்க விரும்பினால் அவன் ஒவ்வொரு கோழியையும் எட்டணாவாக மொத்தத்தில் ரூபாய் 500-க்கு விற்கலாம். 230 ரூபாய் செலவுபோக 270 ரூபாய் லாபமிருக்கிறது. எல்லாக் கோழிகளையும் விற்காமலிருப்பது அவனுக்கு நலம். ஆனால் ஏதோ கொஞ்சம் மாத்திரம் விற்கலாம். ஆதலால் அவன் பாக்கி கோழிகளை அடைகாக்க வைத்திருக்கலாம்.

முட்டைகள் அடைகாத்ததற்கு தகுந்தாப்போல் கோழிகள் 5000 வரையிலாகும் என்பது நிச்சயம். மேலும் வரும்படி இரட்டிப்பாயும் சில சமயங்களில் மூன்று மடங்காயும் அதிகரிக்கும். ஒரு வருஷமுடிவில் அவன் அநேக கோழிகளையும், முட்டைகளையும் வைத்திருப்பான்.

(பொதுநலம்)

விசேஷக் குறிப்புகள்.

(பல பத்திரிகைகளிலிருந்து)

ஓர் விசேடப் பிறவி.

துறவூருக்குச் சமீபம் ஓர் இடத்தில் ஒரு பசு மானிட சொரூபத்தில் ஒரு சிசுவைப் பிரசவித்திருப்பதாகத் தெரிகிறது. இதுவும் கலிகால விசேடமன்றோ!

கண்ணாடி.

எகிப்தியரால் எண்ணாயிரம் வருடங்கட்கு முன்பிருந்தே கண்ணாடி செய்யப்பட்டு வந்திருக்கின்றது.

கடற் பூடுகள்.

சில கடற்பூடுகள் அறுநூறடி நீளம் படர்ந்திருக்கின்றன.

பாலில் தண்ணீர்.

சிறிதும் கலப்பில்லாத சுத்தப்பாலில் 100-க்கு சுமார் 86 பங்கு தண்ணீரே யாகும்.

தென்னாட்டில் ஆறு சுதேசித் தீக்குச்சித் தொழிற்சாலைகள் இருக்கின்றன.

லண்டன் கண் காட்சிக்கு இதுவரை 15 லட்சம் பவுன் செலவாயிருக்கிறது. ஒருகோடியே அறுபது லட்சம் ஜனங்கள் கண்காட்சியைக் கண்டு களித்திருக்கிறார்கள்.

இங்கிலாந்தில் இந்தியாவின் பணம்.

செப்டம்பர் 30-ந் தேதி கணக்கிட்டதில் இங்கிலாந்தில் உள்ள தங்க மதிப்பு (இந்தியாவின் பணம்) 4 கோடி பவுனாகும். அதில் பெரும்பாலான தொகை பிரிடிஷ் கடன் பத்திரங்களில் போட்டு வைக்கப்பட்டிருக்கிறது.

ஒரு அற்புத மீன்.

இங்கிலாண்டில் ஓர் நூதன மீன் அகப்பட்டிருக்கின்றதாம்; அது சகல சாஸ்திர நிபுணர்களின் புத்தியையுங் குழப்பிவிட்டதாம்; அப்படி ஒரு பிராணி உலகத்திலிருப்பது எந்த சாஸ்திரத்திலு மில்லையாம். எல்லாம் இயற்கையென்று சொல்வோ ரெல்லாம் தயங்கிக் கொண்டிருக்கின்றனராம்; அந்த மீன் ஒரு கஜ நீளமாம்; தலையானது ஒரு முயலினதைப் போலிருக்கின்றது. கால் ஒரு கைபோலவும், அதில் 8 விரல் கொண்டதாயும், விரல்களுக்கிடையில் தோல் சேர்க்கை யிருப்பதாகவும் சொல்லப்படுகின்றது.

தங்கள் தொழில் முறைகளைத் திரும்பவும் ஆரம்பிக்க எழுநூறு ஜர்மன் வர்த்தகர்கள் கல்கத்தாவுக்குச் செல்லுகிறார்களென்று சொல்லப்படுகிறது.

லண்டன் கண்காட்சியில் கதர்.

தெலுங்க நாட்டிலுள்ள சிக்காகோல் சர்க்கார் வக்கீலான பி. சங்கர சாஸ்திரி தாம் ராட்டினத்தில் நூற்ற நூலைக்கொண்டு கைத்தறியில் நெய்த நேர்த்தியான கதர்த்துணி யொன்றை லண்டனில் நடைபெறும் கண் காட்சிக்கு அனுப்பியிருந்தார். பிறர் பார்ப்பதற்காகவே அனுப்பி யிருப்பதாகவும் அதனை விற்கக்கூடா தென்றும் அவர் கண் காட்சி யதிகாரிகளுக்குத் தெரிவித்திருந்தார். அந்தக் கதர் கையினால் நூற்ற 120-ம் நம்பர் நூலில் நெய்யப்பட்டது. எனவே அது மிகவும் நேர்த்தியாயிருந்தது. பிரெஞ்சுப் பிரதம மந்திரியான மு. ஹெரிபட் லண்டன் காட்சியைப் பார்க்கவந்த பொழுது இந்தக் கதர்த் துணியைக் கண்டு மிகவும் வியப்படைந்தார். அதனைத்தாம் விலைக்கு வாங்கிக்கொள்ள விரும்புவதாகவும் அதனைத் தமக்குக் கொடுத்து விடுமாறும் அவர் கண்காட்சி அதிகாரிகளைப் பல முறை வேண்டிக் கொண்டார். ஆனால் அதனை விற்கக்கூடாதென்று அதனை அனுப்பிய

சொந்தக்காரர் அறிவித்திருந்தமையால் அதனை பிரெஞ்சு மந்திரிக்குக்கொடுக்க முடியவில்லை. லண்டன் காட்சி அதிகாரிகள் ஷை கதர்த் துணியை அனுப்பிய ஸ்ரீ சங்கரசாஸ்திரிக்கு ஒரு நற்சாட்சிப் பத்திரம் அனுப்பி யிருக்கிறார்களாம். அந்த அழகிய துணியைப் பிரெஞ்சு பிரதம மந்திரி கண்டு அதனைத் தாம் வாங்கிக் கொள்ள முடியவில்லையென்று வருந்திய விஷயத்தையும் அதில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஒரு நாட்டியக் கச்சேரி.

வெள்ளச்சேதங்களைப் பார்வையிட்டுக்கொண்டு, கனம் சென்னைக் கவர்னரவர்கள் திருப்பனந்தாள் சென்றபொழுது, அவ்வூர்ப் பண்டார சந்நதியவர்கள், ஒரு நாட்டியக் கச்சேரி நடத்திக் கவர்னரவர்களை உபசரித்தனரென்றும், இச்செய்கையைக் கண்டிக்க நமக்குச் சரியான மொழிகள் அகப்படவில்லை என்றும் நவசக்தி வருத்தத்துடன் எழுதுகின்றது. பின்வரும் வெண்பாவானது இதன் நியாயத்தை ஒருவாறு பொருத்திக் காட்டும்.

"தேசக் கவர்னர் திருப்பனந்தாள் சென்றதினம்
வேசைக் கூத்தங்கு விளங்கியதாம்—ஏசுவதேன்?
கூத்தன் அடியவர்கள் கூத்திகளைக் கொண்டாடல்
சாத்திரமாம் இன்பும் தரும்"

"சாஸ்த்ராயச ஸுகாயச" என்பது வடமொழி வசனம்.

"பஞ்சாமிர்தம்"

நூதனப் பிறவி.

அழுக்கம் என்னுமிடத்திலே ஓர் நூதனமான சிசு இறந்து பிறந்தது. இதற்கு ஓர் பெருந்தலையும் இரண்டு உடலும் நாலுகால்களும் வாயிற்பறகளும் இருந்தன. இது ஆண்குழந்தை. ஏராளமான ஜனங்கள் சென்று வேடிக்கை பார்த்தார்கள்.

தவளை ஏற்றுமதி.

ஜப்பானில் தவளை மிருந்த விசேஷமாகிய உணவாய்க் கருதப்படுகிறது. பிரான்ஸிலும் அப்படியே. ஜப்பானுக்கு வேண்டிய தவளைகளை யெல்லாம் அமெரிக்காவைச் சேர்ந்த கானடா தேசம் ஏற்றுமதி செய்கிறது. கானடாவில் வியாபாரத்திற்கென தவளைகளை வளர்க்கின்றார்கள்.

சாதுர்யம் வாய்ந்த ஓர் துருக்கிய மாது.

நியாமெத்கான் என்ற ஓர் துருக்கியமாது மிகவும் புத்திக்கூர்மை வாய்ந்தவராயும், பிரஞ்சு பாஷையில் வெகு நன்றாகப் பிரசங்கிக்கும் ஆற்றலுடையவராயும் இருக்கிறார். இந்த ஸ்திரீயின் திறமையை மெச்சாதாரில்லை. பீனுல் என்னுமிடத்தில் சர்வதேச சங்கச் சார்பில் ஒரு பெரும் சபை நடைபெற்றது. அந்த சபையில் 29 தேசங்களின் பிரதி நிதிகள் விஜயஞ் செய்திருந்தார்கள். துருக்கியின் பிரதிநிதியாக

நியாமெத்கான் தந்தையாகிய ஜமேல்பெய் என்பவர் சென்றிருந்தார். அவருடன் நியாமெத்கானும் சர்வதேச சங்கக் கூட்டத்திற்குப் போயிருந்தார். அக் கூட்டத்தில் நியாமெத்கானின் அபார வல்லமையால், அவரையும் பேசும்படி கேட்டுக்கொண்டார்கள். அந்த அம்மையார் கடல்மடை திறந்தாற்போல் பிரெஞ்சு பாஷையில் பிரசங்கமாரி பொழிந்தார். ஐரோப்பியர்களெல்லாம் அவரைப் பார்த்து அதிசயப்பட்டார்கள். சபையில் விஜயஞ் செய்திருந்த 29 தேசப் பிரதிநிதிகளும் ஒருங்கே அம்மாதின் பிரசங்கத்தை வியந்து பேசினதுமன்றி, லண்டனில் நடைபெறப் போகும் மற்றொரு சர்வதேசக் கூட்டத்திற்கும் அவரை வரும்படியாய்க் கேட்டுக்கொண்டார்கள்.

நெற்றிக்கண் குழந்தை.

கண்ணனூரை அடுத்த கிராமம் ஒன்றில் ஈழவப்பெண் ஒருத்திக்குப் பிறந்த குழந்தைக்கு நெற்றியில் கண்கள் இருக்கின்றனவாம். தலை மிகச் சிறியதாம். வாயும் மூக்கும் இருக்கவேண்டிய இடத்தில் ஒரு துவாரம் மட்டும் இருக்கிறதாம். அதன் குரல் பறவையின் குரலைப்போ லிருக்கிறதாம்.

நாற்கால் கோழி.

இலங்கையில் கம்பளையைச் சேர்ந்த குமேருவில் தோட்டத்தில் ஒரு பெட்டைக்கோழி பிறப்பிலிருந்து நான்கு கால்களோடு வளர்ந்து வருகிறது. அதற்கு வாலும் கிடையாது. முன் புறம் இரண்டு காலும் பின் புறம் இரண்டு காலும் இருந்து வருகின்றன. அந்தக் கால்களும் தினந்தோறும் நன்றாய்ப் பெரிதாக வளர்ந்து வருகின்றன.

வெட்டுக்கிளியி லிருந்து உலாந்தா நாட்டில் ஆகாய விமானத்துக்கு உபயோகமான ஒரு தைலம் இறக்குகிறார்களாம். ஆபிரிக்காவில் வெட்டுக்கிளிகளை உரமாக உபயோகிப்பதற்கு ஒரு யந்திரசாலை ஏற்பட்டிருக்கிறதாம்.

அமெரிக்கா சிகாகோ வாசியான ஜான் ஸ்டர்லிங் என்ற எஞ்சினீர் லண்டன் நகரத்தில் பூமியில் விவாகம் செய்து கொண்டு, மணிக்கு எண்பது மைல் வீதம் செல்லும் ஆகாய விமானத்தில் ஏறி அதில் சித்தமா யிருந்த விருந்தைப் புதுப்பெண்ணுடன் உண்டாராம். பூமியிலே சாப்பிட அவர்களுக்கு நேரமில்லையாம்.

ஜப்பான் பூகம்பம்.

சென்ற வருஷத்தில் ஜப்பானில் நேர்ந்த பூகம்பத்தால்

இறந்தவர்கள்	...	91,344
காணப்படாதவர்கள்	...	13,285
காயமடைந்தவர்கள்	...	31,074
வீடுவாசல் சொத்திழந்தவர்கள்	...	32,48,207

ஜப்பான் தேசத்தின் தலை நகரான டோக்கியோவில் பூகம்பத்திற்கு முன் ஜனத்தொகை ... 22,65,300

பூகம்பத்திற்குப்பின் ... 15,27,277

உத்திரவாதம்! 24மணி நேரத்தில் குணம். உத்திரவாதம்!!

ஞான திருஷ்டி

இவ்வருமையான புத்தகத்தைப் படிப்பதால் இறந்தவர்களுடன் சம்பாஷணை புரியலாம், காணாமல் போனதைக் கண்டெடுக்கலாம், இருக்குமிடமிருந்தே தூரதேசங்களைப் பார்க்கலாம், மனிதர்களின் திரிகால வர்த்தமானங்களை அறியலாம். புத்தகத்தில் கண்டிருக்கும் "ஞான திருஷ்டிக் கண்ணாடி" யென்னும் உபாயக் கருவியுடன் இப்புத்தகத்தின் விலை ரூ. 1—8—0 தபால் கூலி பிரத்தியேகம்

மெஸ்மெரிஸ் கல்விச்சாலை,

சௌகார்பேட்டை, மதராஸ்.

ஜெர்மன் வைரக் கம்மல்.



அசல் வைரத்தையும் தோற்கடிக்கும் 7-கமலங்களுடனும் (Dimond-Extra) சவரன் பொன்னுக்குச் சமமான ஒருநாளும் கறுக்காத கனடியன் பொன்னால் மிகவும் இலக்ஷணமாயும் உறுதியாயும் செய்யப்பட்டவை. ஸ்திரீகள் அணிந்துகொள்ளும் பெரிய சைஸ் ஜதை 1-க்கு விலை ரூ. 4. ஆண்பிள்ளைகளுக்குக் கடுக்கனும், சிறு பெண்களுக்கு கம்மலாயும் உபயோகிக்கக்கூடிய சிறிய சைஸ் ஜதை 1-க்கு விலை ரூ. 3. தபால் கூலி வேறு.

ஆலிவர் அண்டு கம்பெனி, 22-வது பீட், மதராஸ்.

பம்பாய் சில்க் புடவை.

ஒரு பக்கம் நூல், மற்றொரு பக்கம் பட்டு, அசல்பெங்களூர் பட்டுப்புடவையை தோற்கடிக்கும், ரூ. 80 மதிக்கக்கூடியது. அநேகவிதமான கலர்களில் கிடைக்கும். அசல் பெங்களூர் புடவையையும் இதையும் ஒன்றாய்வைத்துப் பார்த்தாலும் வித்தியாசம் தெரியாது. கலருக்கு உத்திரவாதம். தினப்படி துவைக்கலாம்.

18 மு x 2½ அகலம் பட்டுக்கரை பெங்களூர் முந்தாணி, விலை ரூ. 30.

ஷை ஜரிகை கரை, விலை ரூ. 36.

கேட்லாக் இனாம்.

கே. எஸ். முத்தையா கம்பெனி,

சில்க் அவுஸ், சென்னை.

அரசர்களுக்கும் தனவான்களுக்கு மாத்திரமே

ட்ரேளஸீஸ் விரைன் மாத்திரைகளும் மூலாமும்

இந்த மருந்து முக்கியமாக மனுஷத்தன்மையில்லாமற் போனதை திரும்பவும் மனுஷத்தன்மையுண்டாகும் படியாக ஜெர்மனியாரால் ஜந்துக்களின் கருவிலிருந்து கண்டு பிடிக்கப்பட்ட ஒரு நூதனமான மருந்து. ஆயிரக்கணக்கான சகாயமற்ற, உயிரைப் போக்கிக்கொள்ளலா மென்று நினைத்த மனிதர்களை மேற்சொன்ன மாத்திரைகளும், மூலாமும் உபயோகித்த தக்ஷணமே சொல்லமுடியாத நன்மை அடைந்திருக்கிறார்கள். ஞாபகசக்தியைப் பலப்படுத்துவதுமல்லாமல், ஸ்திரீ புருஷர்களுக்கு ஆச்சரியகரமான பலத்தை கொடுக்கிறது. தாது நஷ்டமாகிறதையும் ஆண்மையில்லாமலிருப்பதையும் பிரதியுற்பத்தியில் உண்டாகும் சகல வியாதிகளையும் சொஸ்தப்படுத்துவதில் இதற்கு இணையற்ற மருந்து வேறு கிடையாதென்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். கடிதங்கள் ரகஸியமாய் வைக்கப்படும்.

60 மாத்திரைகளடங்கிய சீசா 1-க்கு ரூ. 6—மூலா சீசா 1-க்கு ரூ. 4. தபால், பாக்கிங் வேறு

"ட்ரேளஸீஸ் க்ளினிக்" 38, நாராயண முதலி தெரு,
G. T. சென்னை.

GERMAN ELECTRIC LIGHT

ஜேர்மன் மின்சார விளக்கு,
அல்லது எலக்டிறிக் லயிட்டு.

இந்த விளக்கு ஜெர்மனியில் உள்ள பலமாதிரியான விளக்கைப்போல் இல்லாமல் இது வேறுவிதமாய் தயாரித்து வரவழைக்கப்பட்டது. இந்த விளக்கை அநேகர் உபயோகித்து நன்மையடைந்திருக்கின்றனர். இவ்விளக்கு ஒவ்வொரு வரிடத்திலும் அத்தியாவசியம் இருக்கவேண்டும். வெளியூர் பிரயாணிகளுக்கும் மற்றவர்களுக்கும் இது ஓர் ஆபத் சகாயர்போல் உள்ளது. இவ்விளக்குக்கு எண்ணெய், தீ குச்சி முதலியவை இல்லாமல் இருட்டுக் காலங்களில் அதிக பிரகாசம் கொடுக்கும். விளக்குத் தலப்பில் உள்ள சுயளை திருப்பினால் திடீரென்று பிரகாசம் கொடுக்கும் விளக்குகளில் இது ஆதிசயமான விளக்கு என்று நம்பிக்கையாய்ச் சொல்லப்படும். உபயோகிக்கும் விதங்கள் விளக்குடன் வரும். விளக்கு ஒன்றுக்கு ரூ. 1-8-0.

விலாசம்: சிடி வாட்ச் கம்பெனி, 16, திருப்பள்ளித் தெரு,
G. T. மதராஸ்.

வேல் முருகன்.

"கிள்ளை மொழி யுமையாள் கேண்மை மிகு மிளைய
பிள்ளை திருவடியே பேண்."

கலியுக வரதனாய் விளங்கும் வெற்றிவேற் கடவுள் திருவுருவம் அவன் பால் அன்புடைய அன்பர்கள் இல்லந்தோறும் பூஜித்தற்குரிய சிறப்புடையதென்பது யாவரும் அறிந்ததே. நாம் தயாரித்துள்ள இம்முருக மூர்த்தம் அருள் சுரந்து எமது கனவில் தோன்றி காட்சியளித்ததாகும். தாமின்புறுகிறபடி உலகமும் இன்புறவேண்டுவது நல்லோர் கருத்தானதால் அம்முறைபற்றி அன்பர்கள் அக்கோலமயிலின் வேலானது மாலனைய ரூபத்தை இன்றே எமக்கெழுதி ஒரு பிரதிபெற்று தக்கவிடத்தில் எழுந்தருளச் செய்து ஆராதித்து இஷ்ட சித்திபெற்று இன்புறுவாராக.

அறுமுகன்பால் அன்புள்ள ஒவ்வொருவர் வீட்டிலும் சுகுமாரமுள்ள இத்திருவுருவம் இருக்கவேண்டுவதே. மேற்கண்ட திருவுருவப்படம் போட்டகிராபில் அழகான பாடர் மத்தியில் அமைக்கப்பெற்றிருக்கிறது.

தனிப்பிரதி விலை ரூபா **1**.

லக்ஷ்மி சந்தாதாரர்களுக்கு அணா **12**.

சர்மா சகோதரர்,
வேப்பேரி, சென்னை.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் எழுதிய

புதிய நாவல்கள்

லோகநாயகி

அல்லது

அதிசயப் புதையல்.

பண ஆசை எத்தகைய பெரும் பாதகத்தையும் செய்யத் தூண்டும் கொடிய பேய் என்பதும் அக்கிரமஸ்தரும், நம்பினவர்களை துரோகம் செய்யும் பாதகரும் முடிவில் ஆண்டவனால் எப்படியும் தண்டிக்கப்படுவார்கள் என்பதும், நீதியும் சத்தியமு முடையோர் முதலில் கஷ்டத்தை யனுபவித்தாலும் முடிவில் பூரண நன்மையை யடைவார்கள் என்பதும், இக்கதையில் நன்கு நிரூபிக்கப்படுகிறது. கதாநாயகியாகிய லோகநாயகியின் புத்தி சாதுர்யமான நடக்கைகளும், தப்பறிபவளது சாமர்த்தியமும், ஆரம்பத்திலிருந்தே ஒன்றின்பின் ஒன்றாக நேரிடும் அதிசய சம்பவங்களும், போய்விட்டதென்று யாவரும் கைவிட்டுவிட்ட பொக்கிஷத்தைத் தப்பறிபவன் எடுத்தளிக்கும் சாமர்த்தியமும் நீதியும், இதை வாசிப்போர்க்கு ஆதிமுதல் அந்தம் வரை வியப்பையும் உற்சாகத்தையும் அளிக்கும். இதில் சம்பந்தப்பட்டிருக்கும் ஆட்களில் ஒவ்வொருவர் நடக்கையும் உற்று நோக்குபவர்களுக்கு நல்ல நீதிகளைக் கற்பிக்கும். விலை ரூ. 1—0—0.

	ரூ.	அ.
விளையாட்டுச்சாமான் அல்லது விபரீதக் கொலை ...	1	6
ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருடைய சரித்திரமும் உபதேசங்களும்	1	12

பவளத்தீவு 2-பாகம்	3	0	கமல சேகரன்	1	12
தபால்கொள்ளைகாரர்கள்	0	14	தினகர சுந்தரி	1	0
இந்திராபாய்	2	8	ரத்னபுரிரகசியம்2-பாகம்	4	0
அமராவதி 2-பாகம்	4	0	மதனபூஷணம்	1	0
மஞ்சள் அறையின்மர்மம்	1	8	சுவர்ணம்பாள்	0	12
கற்கோட்டை	2	0	தேவசுந்தரி	1	4
பூங்கோதை	0	10	குணசுந்தரன்	0	12
வீரநாதன்	0	12	பத்மாஸனி	0	14
கனக பூஷணம் 2-பாகம்	3	8	ஆனந்தஸிங்	2	0
சகோதர வாஞ்சை	0	6	மின்சார மாயவன்	1	8

மானேஜர் :—

"ஆனந்தபோதினி" ஆபீஸ்,

1-6, வெங்கடேச மேஸ்திரி தெரு,

சவுகார்பேட்டை, மதராஸ்.

அச்சு வேலைகள்

வெகு அழகாகவும் சுத்தமாகவும்
செய்யப்படும்.

கார்டு, லெட்டர் பேப்பர், நோட்டீஸ், புத்தகங்கள், பத்திரிகைகள், கணக்குப் புஸ்தகம், பேரேடு குறிப்பு இன்னும் எவ்விதமான அச்சு வேலைகளும் கேடுப் பிரகாரம் சப்ளை செய்யப்படும்.

அச்சிடவேண்டிய விவரங்களுக்கு
எழுதவும்.

மானேஜர்:—வேஸ்ட் அண்டு கோ.,

மவுண்ட் ரோட், : : சென்னை.

இனும்! விலையுயர்ந்த **10** சாமான்கள்!! இனும்!!!

18 காரட் ரோல்ட் கோல்ட் கேசுட்ன் பொன்டயல்
ரிஸ்லெட் கெடியாரங்கள்.

இதுவரை இம்மாதரியான கெடியாரங்கள் இந்தியாவுக்கு



வந்ததில்லை என்பது உண்மை, கெடியாரம் டயல் முழுமையும் பொன் பிளேட்டினால் தயாரித்து வெகு ரம்யமாய் இருக்கும். உயர்ந்த சாமான்களைக் கொண்டு தயாரித்தது. நெடுநாள்வரை உழைக்கக்கூடியதும் நம்பிக்கையாக 3 வருஷம் உத்திரவாதம் கொடுக்கப்படும்.

இனும் விபரம்:—கோல்டன் ஸ்பிரிங் பிராஸ்லட் 1, தோல்பட்டை 1, உயர்ந்த கண்ணுடி 1, தந்த சீப்பு 1, சென்ட் புட்டி 1, இமிடேஷன் மோதிரம் 1, மணிபர்ஸ் 1, சாவிவளையம் 1, கைகுட்டை 1, பெட்ரூம் லையிட் 1, ஆக 10 இனும் சாமான்களுடன் ஷி கெடியாரம் உள்பட ரூபாய் **7-8-0.**

N.B.—ரவுண்டு, 4 மூலை, 8 மூலை பாரல் ஷேப் முதலியவை உண்டு. ஷேப்பைக் குறித்து எழுதவும்.

விலாசம்:—நோபுல் வாட்சு கம்பனி,
1/33 தாதா முத்தையப்பன் தெருவு, மதறாஸ்.

கொஞ்சம் பிரதிகளே இருக்கின்றன ஆர்டருக்கு முந்துங்கள்.

60 நாளையில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளலாம்.

இதுவரையில் இம்மாதிரியான புத்தகம் வெளிவரவில்லை. இது புதுமாதிரியாக இங்கிலீஷ் பேசவும், படிக்கவும் எழுதவும் கற்றுக் கொள்ளக்கூடிய சுலபமான தமிழில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இவ் விஷயத்தை யாவரும் கவனித்து எழுதுங்கள். உடனே எழுதுங்கள்.

குறைந்த விலை! **ஆங்கில ஆசான்** பெருத்த விஷயம்!!

தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பதங்கள் தெரிந்து கொள்ளலாம்.

உபாத்தியாயர் இல்லாமல் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக் கொள்ள உதவும் புத்தகம் இதுதான். இதில் ஒரு சொல்லை உச்சரிக்கும் விதமும் அதன் இங்கிலீஷ் அர்த்தமும், மிருகம், பட்சி, கிழமை, மாதம், வருடம், புஷ்பம், ஆயுதம், ஊர்கள் முதலியவற்றின் பெயர்களும், கடிதம் எழுதுதல், உயில், பத்திரங்கள், கல்யாண, சீமந்த, நோட்டீஸ்கள் முதலியன இங்கிலீஷிலும், தமிழிலும், எழுதும் விதமும், சிறு கதைகளும், பழமொழிகளும் அவற்றின் இங்கிலீஷ் அர்த்தமும் வெகு சுளுவான நடையில் விளக்கப்பட்டிருக்கின்றது. மாதர்களுக்கும், வியாபாரிகளுக்கும், தொழிலாளர்களுக்கும், உபாத்தியாயர்களுக்கும், மிகவும் முக்கிய மானது.

இப்புத்தகம் 1-க்கு விலை ரூ. **2.** தபால் செலவு அணா **6.**

பினாங்கு, சிங்கப்பூர் தேசங்களிலிருந்து முன் பணம் அனுப்பினால் புஸ்தகம் ரிஜிஸ்டர்செய்து அனுப்பப்படும்.

தி. இராஜகோபால் முதலியார்,

நெ. 259, தங்கசாலை தெருவு,

மிண்ட் பில்டிங் போஸ்டு, மதராஸ்.

Night Writing light or Fountain pen light.

பவுண்டன் பேனாவில் எலக்டிரிக் லைட். இதுவரை இங்கிலாந்து அமெரிக்கா தேசத்தார் கண்டு பிடிக்கவில்லை. ஜெர்மனியில் கண்டு பிடித்தது முதல் தடவை 72-பேனா வந்தது. எழுதமுடியாத பேனாவை பவுண்டன் Pen லைட் என்று விற்றுவந்தார்கள். எங்கள்பேனா விளக்கு இல்லாமல் எழுதமுடியும். 14 காரட் நிப்பு உள்ளது. நிக்கல் முழுதும் கிளிப்பு உண்டு. வெளிச்சம் 20-அடிக்கு கண்கூசும்படி தோன்றும் பல்புடையது. இதை வாட்ச் பாகெட்டில் கிளிப் செய்து விட்டு நீங்கள் 10-பேர்நடக்க போதுமான வெளிச்சம் தரும். இதை தபால் ஆபீஸர்கள், போலீஸ் ஆபீஸர்கள், பாரஸ்ட் ஆபீஸர்கள், ரயில்வே ஆபீஸர்கள், ரெவினியூ டிபார்ட்மெண்ட் டிராவலிங் சர்கூட் போகிறவர்கள் வைத்துக்கொண்டால் இங்கிபாட்டல் தேவையில்லாமல் எழுதவுதவும் படிக்கவுதவும் நடக்கவுதவும். கம்பிளீட் பேனா எலெக்டிரிக் பிடிங் சேர்த்து பாட்டிரி உள்பட விலை 3—0—0, 4-பேனாவுக்கு ஆர்டர்வாங்கி அனுப்பும் ஏஜென்டுக்கு 1 பேனா இனாமாய் அனுப்பப்படும் எக்ஸ்ட்ராபாட்டிரிக்கு அணா 8.



எலக்டிரிக் பாக்கெட் லாம்பு எம்போரியம்
357, மவுண்ட்ரோட், மதராஸ்.

பயங்கரமான சத்தம்! அதிசயமான உதவி!!

ஓர் அற்புத சந்தடி செய்யும் கருவி.

புதியதாய் தருவிக்கப்பட்டது.

இது அமெரிகா தேசத்திய ஓர் அற்புதமான ஒரிஜினல் ரூடர் யென்னும் புல்டாக் ஹாரன். இது மோட்டார் வண்டிகளுக்கும் உபயோகமாவதைப்போல் பயிசிகல் வண்டிகளுக்கு உபயோகமாகும். இது பெருத்த ஜனக் கூட்டமாயினும் விலக்கக் கூடியது. இச்சந்தடி உற்சாகமும், சந்தோஷமும் பயங்கரமான சத்தங்களுடன் ஜனங்களை உருண்டு பிரண்டு ஓடும்படி விளைவிக்கும். இது வலுவாய் செய்யப்பட்டது. சுலபமாய் சுற்றலாம். இக்கருவி அநேக நாளுக்கு கெடாமல் உபயோகமாகும். கருவி 1-க்கு விலை ரூபாய் 1-8-0.

விலாசம்:—80, யுனைடேட் இன்டியா நாவல்ஸ் டோரஸ்,
போஸ்ட் பாக்ஸ், நெ. 1238, மதுராஸ்.

சர்வபடை சங்காரன்

எல்லாவித நாள்பட்ட படைகளையும், சொறி, சிரங்குகளையும் காயப் புண்களையும் சர்ம ரோகங்களையும் உடனே போக்கி குணத்தைத்தரும். விலை அணு 10.

எஸ். ராதா கம்பெனி, 246, தங்கசாலை தெரு, மதராஸ்.

இளமையும் பலமும் வீரமும் வன்மையும்.

1924-ஆவ் பூனு இண்டியன் இண்டஸ்ரியல் கண்காட்சியில் முதல் தரமான சர்ட்டிபிகேட் பெற்றுள்ளது.

காமகேசரி

என்னும் வீரிய விர்த்தி மாத்திரைகளினால் ஒரே மணி நேரத்தில் உண்டாகும் வீரமற்ற இளைஞரும் பலங்குன்றிய வயோதிகரும் சிற்றின்பசுகம் அடைய இதுவே மருந்து.

காம கேசரி பார்மஸி,
412, தங்கசாலை தெரு, சென்னை.

20 மாத்திரைகள்
விலை ரூபா ஒன்று.

சகல மேக சஞ்சீவி (தங்கம் சேர்ந்தது.)

அதிக உஷ்ணத்தாலும் பலவித சிற்றின்பச் செயலாலுமுண்டான வெள்ளை, வெட்டை, நீரடைப்பு, பவுத்திரம், கண்டமாலை, சூலை, மேகப்பற்று, கருமேகம், கிரந்தி, கட்டி, ஆருத ரணம், பீநிசம், கபாலநீர், சூதகக்கெடுதல்கள், இளைப்பு, காசம், கிரந்தி, வெண்மேகம், குன்மம், கண் வியாதிகள், கொஞ்ச கால செவிடு, நரம்பு வியாதிகள், வாதநீர்கள் முதலிய சகல வியாதிகளும் 7-நாள் மருந்தில் கண்டிப்பாய் குணமாகும். அநுபவத்தில் கைகண்டது. 7-நாள் மருந்து அடங்கிய பட்டி 1-க்கு ரூ. 5-0-0. தபால்செலவு 0-8-0.

எம். சுந்தரபாபு, ஆயுர்வேத மெடிகல் ஹால்,
31, வெங்கய்யர் தெரு, சென்னை.

இன்றே பரிக்ஷித்துப் பாருங்கள்! களிகூருங்கள்!!

வீரிய விநோதன்.

சிற்றின்ப ஆசை யென்னும் மின்னார் மோகத்தில் ஆழ்ந்து தேக சத்காரமாகிய நாதவிந்தைச் செலவழித்து யௌவன பருவத்தில் வீரிய விர்த்தி குறைந்துபோய் ஆண் தன்மை யறறவர்களுக்கு, "வீரிய விநோதன்" என்னும் குளிகையால் இழந்துபோன பலத்தை மீண்டும் பெற்று அங்கதனைப்போல் பங்கமின்றி ஆனந்தத்தை விளைவிக்கக்கூடிய போகவிர்த்தியை உண்டாக்கும் குளிகை. மனிதர்களுக்குள்ள 72,000 நாடி நரம்புகளுக்கு முறுக்கேற்றி எள்ளைக் கசக்கிப் பிழியும் பலமும் கொடுக்கும். உபயோகிக்கும் விபரம் மருந்துடன் அனுப்பப்படும். 24 மாத்திரை டின் 1-க்கு ரூ. 2-8-0.

எமது விலாசம்:—எஸ். சாரதா அண்டு கம்பெனி,
சௌகார் பேட்டை, மதராஸ்.

அகஸ்தியர்

பரிமள கேசரி தைலம்.

இத் தைலத்தை உபயோகித்து வருவதால் தலையில் எரிச்சல், தலை மயிர்கள் உதிர்கிறது, தலை மயிர்களின் பிளப்பு, தலை மயிர்கள் சிகப்பு நிறமாகிறது, நாசியில் ரத்தம் வடிதல், தலையில் சுண்டுகள் ஏற்படுதல், தலையில் ஏற்படும் விஷத்தினால் சிரங்குகள் உண்டாகுதல், கண்கள் சிகப்பாகுதல், கண்களில் ஜலம் வடிதல் இன்னும் தலையில் ஏற்படும் சகலவிதமான வியாதிகளையும் நீக்கிச் சுகம் தரும். விலை புட்டி 1-க்கு ரூபா 1. V. P. அல்லது C. O. D. இல்லாத ஊர்களுக்கு முன் பணம் அனுப்பவேண்டும்.

துரைசாமி அண்டு கம்பெனி,
58, பெரியண்ண முதலி தெரு,
மிண்டு போஸ்டு, மதறாஸ்.

வந்துவிட்டது! வந்துவிட்டது!!

புதிய சரக்கு புதிய கடியாரம்.



"டிக்—டாக்"

வால் கிளாக்

இப்பொழுது தான் வந்தது.
மிக்க அழகுள்ளது.
காலத்திற்குசரியான மணியை
காட்டக் கூடியது.
முந்துங்கள்! முந்துங்கள்!!
முந்துங்கள்!!!
சுவரில் மாட்டக்கூடியது.
விலை 1-க்கு ரூ. 3 தான்.
தபால் செலவு வேறு.

விலாசம்:—

பீடர் வாச் கம்பெனி,
தபால் பெட்டி
நெ. 27, மதராஸ்.

சோப்புகள்.

கொழுப்பு சம்பந்தமில்லாத திடம் வாசனையுள்ள

"Lilly" சந்தண சோப்பு. **"Lilly"** மல்லிகை சோப்பு.
"Lilly" ரோஜா சோப்பு. **"Lilly"** கர்பாலிக சோப்பு.

முதலிய ரகங்களும் இன்னும், வேஷ்டிகள் முதலானவைகளுக்கு உபயோகிக்க கூடிய திடம் சவுகாரங்களும் (Washing Soaps) எங்களிடம் விலை சகாயமாக கிடைக்கும். சுதேசி கைத்தொழிலை ஆதரிக்க கோருகிறேன்.

ஏஜண்டுகள் தேவை

எங்கள் விலாசம்:—A. G. **சுந்தரம் & கோ.,**

மானேஜிங் எஜென்ஸ், **லில்லி சோப் பாக்டேரி**
1, மொட்டை மேஸ்திரி தெரு, G. T. மதராஸ்.

ந ல் ல ச ம ா ச ா ர ம்

உயர்ந்த பட்டணம் பொடி.

நாங்கள் உயர்ந்த புகையிலையினால் மிக்க குணமும் மணமும் உள்ள பட்டணம் பொடியும், ஆர், எஸ். சுகந்த மூக்குத்தூளும், ராஜன் பரிமள வாசனைப் புகையிலையும் சிறந்த முறையில் விசேஷமாய் தயார் செய்து இந்தியா முழுதும் அனுப்பிவருவதுடன் கீழ்க்கண்ட சாமான்கள் நல்ல சரக்காயும் விலை சரசமாகவும் வியாபாரிகளுக்கு மொத்தமாகவும் சில்லறையாகவும் சப்ளை செய்து வருகிறோம்.

வாசனை மிகுந்த அசல் காஜிபூர், பன்னீர், கல்கத்தா பரிமள சோப்புகள், வாசனை தைலம், அத்தர், பற்பொடி தேள் மருந்து, பரஹம்பூர் காரமஸாலா, ஜெர்மனி, கல்கத்தா, விசித்திரமான கலர் படங்கள், பீடி, சுருட்டு சிகரெட்டுகள் முதலியன எங்களிடம் கிடைக்கும்.

ரொக்கம் அல்லது வி. பி. பி. வெளியூர் ஆடர்களை உடனுக்குடனே கவனித்து தகுந்தவாறு அனுப்பப்படும். விலை விவரமடங்கிய புஸ்தகத்துக்கு எழுதினால் அனுப்புகிறோம.

பி. வி. ராஜன் & கம்பெனி,
44, கோவிந்தப்ப நாய்க்கன் வீதி, மதராஸ்.

சமசார சுகத்திற்கு திவ்ய ஔஷதம்.

பீஜ்பந்த்

இரண்டு மணி நேரத்தில் அபூர்வ குணம்.

இந்த மருந்து இராத்திரி வேளையில் ஒரு மாத்திரை சாப்பிட்டால் வீரியம் எவ்வளவு நீர்த்துப் போயிருந்தாலும் அதை இரண்டு மணி நேரத்திற்குள் தவருமல் கட்டுப்படுத்தி அதிகமான ரதிசக்தியைக் கொடுக்கும். **3** நாள் **2** வேளையும் சாப்பிட்டால், ஸ்வப்பன ஸ்கலிதம், சீக்கிர ஸ்கலிதம் முதலியதை நீக்கும். பதினைந்து நாள் **2** வேளையும் சாப்பிட்டால் துராப்பியாசங்களினல் உண்டாகும் நபும்சகத்வம் போக்கி, அதிகமான யௌவன சக்தியையும், நரம்புகளுக்கு பலத்தையும், சம்சார சுகத்தையும் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. இதன் குணத்தை இன்னும் வெளிப்படையாய் எழுதுவதற்கு சென்னை கவர்ன்மெண்டார் அனுமதிக்க வில்லையாகையால், இத்துடன் சுருக்கிவிட்டோம். ஒருமுறை தருவித்து உபயோகித்த பிறகுதான் இதன் குணம் விளங்கும். மருந்து உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். கடிதங்களை ரகஸ்யமாய் வைக்கப்படும். **20** மாத்திரைகள் ஸீசா **1**-க்கு ரு. **2** வி. பி. சார்ஜ் வேறு, சிங்கப்பூர், பினங்கு முதலிய வெளி நாடுகளுக்கு முன்பணம் அனுப்பவேண்டும்.

ஆரிய வைத்திய ஆஸ்ரமம்,
நெ. 38, பைராகிமடம் கோவில் வீதி, ஜீ. டி. மதராஸ்.

ஸினி மோட்ட கிராப்.

இந்த மிஷன் வில் இசையை சுழற்றிக்கொண்டே வந்தால் பயாஸ்கோப்பில் காண்பதுபோலவே காணலாம் :— இதில் அடங்கிய ஆட்டங்களின் சுருக்கம் :—சோம்பலுள்ள பிரபு ஒருவர் ரயில் வேஸ்டேஷனுக்குள் போகும்போது ரயில் பிரயாணப்பட்டுப் போக அதைப் பிடிக்க அதன் பின் ஓடுதல், ஜால வித்தைக்காரர்கள் பந்துகளின் மீதில் பல வித ஆட்டங்கள் ஆடுவது, ஜப்பான், ஜர்மன் சண்டை பயங்கரமான தோற்றம், பாரீஸ் தேசத்து ஸ்திரீகள் டான்சுகள் ஆடுவது, சமுத்திர கப்பற் சண்டை, ஓர் திருடன் வண்ணான் வீட்டில் துணிகளை திருடிக்கொண்டு போகும்போது சேவகன் பிடிக்க ஓட அவன் தப்பித்து ஓடும் காட்சி, காண விடா நகைப்பை தரும். ஸ்திரீ புருஷர்களின் குதிரை சவாரி பந்தயம் ஆச்சர்யம், இன்னும் பலவித பிலிம்கள் கொண்ட ஸினி மோட்டகிராப் மிஷன் பெட்டி 1க்கு ரு. **1-0-0** (தபால் சிலவு அணு **7**).



விலாசம் :- -லக்ஷ்மி நாராயன் கம்பனி,
(23-வது பீட்) மதராஸ்.

அழகிய போட்டோப் படங்கள்.

கண்ணைக் கவரும் கலர்களில் ஜெர்மனியில் ஸ்பெஷல் ஆர்டருக்கு அச்சிட்டது.

(1) காசி விஸ்வநாத், (2) லக்ஷ்மி, (3) சரஸ்வதி, (4) கிருஷ்ணன், (5) ராமர் பட்டாபிஷேகம், (6) காளிங்க மர்தனம், (7) ஹர பார்வதி, (8) மகாத்மா காந்தி, (9) ஸி. ஆர். தாஸ், (10) திலகர், (11) சரோஜினி தேவி, (12) ரவிந்த்ரநாத் டாகூர். நமது சந்தா நேயர்களுக்கு 12 படமும் ரூ. 1. மற்றவர்களுக்கு ரூ. 1-8.

சொற்ப காபிகளே கைவச மிருக்கிறது. முந்துங்கள்.

லக்ஷ்மி ஆபீஸ்,
தபால் பெட்டி 99, சென்னை.

அப்பளம்! அப்பளம்!!

பிராமணர்களால் செய்யப்பட்டது. சுத்தமானது. பப்பளத்தைப்போலல்ல. ஓர் தடவை வாங்கிச் சாப்பிட்டால் மறுதடவை விடமாட்டீர்கள்.

எங்களிடம் ஊறுகாயும், வற்றல் தினுசுகளும் கிடைக்கும். இதர கம்பெனிகளைப் போல மோசமல்ல.

முதல் தரம் 100-க்கு ரூ. 1-8, இரண்டாந்தரம் 100-க்கு ரூ. 1, மூன்றாம்தரம் 100-க்கு அணா 12; ஊறுகாய் பாட்டில் ரூ. 1-8, வடாம் ரூ. 1.

¼ பாகம் முன்பணம் கட்டாயமாய் அனுப்பவேண்டும்.

R. S. I. & Co., TRIPLICANE.

இனாம்! அசல் பட்டு குட்டை!! இனாம்!!!

ரூபாய் 5 மதிப்பிடக்கூடிய

வெள்ளி ராஜன் லிவர் பவுண்டன்.

இப்பேனாக்களுக்கு (14-மாத்து பொன் நிப்புகள்) பதித்துள்ளன. இப்பேனாக்களுக்கு தானே இங்கி நிரப்பிக்கொள்வதற்கு ஓர்வித வில் விசையை அமைத்திருக்கிறபடியால் இவை எத்தனை நாள் உபயோகித்தாலும் கெடாது. இப்பேனா முழுமையும் அசல் வெள்ளிக்கு சமானமான பளபளப்புள்ள பிளேட்டினால் தயாரிக்கப்பட்டது.

இந்த மாதம் வரை சீமை பாக்டரி விலைக்கு தரப்படும்.
"வெள்ளி ராஜன்" லிவர் பவுண்டன் பட்டு குட்டை உள்பட விலை ரு. 1-12-0

விலாசம்—லக்ஷ்மி நாராயண் கம்பெனி,
(23-வது பீட்) மின்ட் புல்டிங், மதராஸ்.

தமிழ்நாடு
210343

பி. நடேச முதலியார்,

இரும்பு பெட்டி வியாபாரம், நெ. 59, பிராட்வே, மதராஸ்.



எங்களுடைய தொழிற்சாலையில் உற்பத்தியாகும் முதல்தரமான கெட்டி இரும்புப் பெட்டிகள், புதுதகட்டினால் நீண்டகாலம் உழைக்கக் கூடிய பல ரகங்களிலும், சயிசு வாரியாக புதுமாதிரி கள்ளறை முதலியன நேர்த்தியாக வைக்கப்பெற்று, பெயிண்டிங் கொடுத்து அவரவர்சள் மனம் திருப்திகரமாகும்படி மானேஜர் பார்வையுடன் ஆர்டரில் கண்டபடி தயார்செய்து கூடிய சீக்கிரம் கொடுக்கப்படும்.

எங்களிடம் சகலவிதமான மெஷின்களும் ரிப்பேர் செய்யப்படும்.

நடராஜன் இன்ஜினீரிங் தொழிற்சாலை,

சுப்ராயப்பிள்ளை தெரு, கொண்டிதோப்பு, மதராஸ்.

ஆபீஸ்:—நெம்பர் 59, பிராட்வே, மதராஸ்.

PERFUME SPRAY.

பன்னீர்

தெளிக்கும் கருவி.

சாதாரணமான எந்த
வித பாட்டில்களிலும்
வைத்து உபயோகிக்கலாம்.

விலை 1-க்கு
ரூ. **2-4.**



**"Collapsible"
Key Ring.**

—

A Key Ring that
does not buldge
the pocket.

—

**Price As. 3
each.
Dozen Rs. 2.**

திருநெல்வேலி நூல் துண்டுகள்.

புதமாதிரியான நெசவு. நீடித்து உழைக்கும்.
3 மு. துண்டு 1-க்கு அணா 14.
4 மு. ,, 1-க்கு ரூ. 1.

K. S. MUTHIAH & CO., Tinnevelly.

Printed by M. A. Nellayappar at Vest & Co., Madras and Published by K. S. Sundaram.